கல்கி

KALKI 7.10.90 ரூ. 2.50





போதைப் பொருள்களின் பயங்கரம்!

–சிவசங்கரி விளக்குகிறார்


தலைதீபாவளி
சிறப்பு சலுகையில்
பங்குக் கொண்டு
மாருதி கார்,
மற்றும்
பல பரிசுகளை
வெல்லுங்கள்.
Sri Kumaran Stores
ஸ்ரீ
குமரன்
ஸ்டோர்ஸ்



லால்குடி சமாளித்த கேள்விக் கணைகள்

லால்குடி ஜெயராமன், 61 வது வயதைத் தொட்ட அன்று, அவர் பணியையும், பாணியையும் அலசி ஆராயும் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்தது 'சுருதி' பவுண்டேஷன். உதவி: ஸ்ரீராம் குருப் நிறுவனம். கேள்வி — பதில் நிகழ்ச்சியில், சில பகுதிகள்:

● பல வித்துவான்களுக்குப் பக்கவாத்தியமாக வாசித்திருக்கிறீர்கள். அவர்களிடமிருந்து என்ன கிரகித்துக் கொண்டீர்கள்?

○○ அவர்களது ஞானம், அனுபவம், முதிர்ச்சி காரணமாக வெளிப்படும் இசை நுணுக்கங்களை எல்லாம், கடவுள் எனக்குச் சட்டென்று உடனே கிரகித்துக் கொள்ளும் திறமை கொடுத்ததன் காரணமாக, ஒரு வரப் பிரசாதம் போல் அப்படியே ஏற்றுக் கொண்டேன். இது 'வர' பிரசாதம்தான்! இதனால் என் 'களஞ்சியம்' நிரம்பியது. பிறகு நானாகச் சிந்தித்துப் பார்த்து, இன்னும் மெருகேற்றி வழங்க முடிந்தது.

● தற்கால சங்கீதக் கச்சேரி பாணியில் மாற்றம் தேவை என்று கருதுகிறீர்களா?

○○ என்ன மாற்றம் தேவை என்று முதலில் ரசிகர்கள் தெரிந்து கொண்டால் நல்லது. கச்சேரிக்கு வருகிறோமே — எதை ரசிக்கப் போகிறோம்? எதை எதிர்பார்த்து வருகிறோம்? — என்று அவர்களுக்கே ஓர் ஐடியா இருக்க வேண்டும். புது ராகம் பாடினால், 'என்ன இப்படி ஒன்றும் புரியாத மாதிரி பாடுகிறார்?' என்பது; பழகிய ராகம் பாடினால், 'எப்போதும் பழசுதானா?' என்பது; விறுவிறுப்பாகப் பாடினால் 'எப்போ பார்த்தாலும் ஓட்டம்தானா?' என்பது; நிதானமாக இருந்தால், 'இப்படியா ஒரே இழுவலாக இருப்பது?' என்பது ... எதை எதிர்பார்க்கிறோம், எதை ரசிக்கிறோம் என்பதில் ரசிகர்கள் திடமாக இருக்க வேண்டும். கச்சேரிகளும் ஒரே மாதிரி இல்லாமல் சற்று மாறுதலாக இருந்தால் நல்லதுதான். வித்தியாசமாய் இருந்தாலும் சம்பிரதாய வரம்புக்குள் உட்பட்டு இருக்க வேண்டும்.

● பைரவி, கல்யாணி, தோடி இவற்றில் வர்ணங்கள் இயற்றி அளிப்பீர்களா?

○○ இது எனது சக்திக்கு மீறின செயலாகத்தான் இருக்குமென்று தோன்றுகிறது. நான் இவ்வளவு தூரம் 'கம்போஸ்' பண்ணுவேன் என்றே நினைத்ததில்லை. எவ்வளவோ பிரயாணங்கள், இடைவிடாத கச்சேரிகள்.. இவற்றுக்கிடையில், என் உள்ளே இருந்து வெளிப்படும் ஓர் உணர்வின் உந்துதல் காரணமாக, இந்த அளவுக்கு 'கம்போஸ்' பண்ண முடிந்தது. நீங்கள் குறிப்பிட்டவை எல்லாம் பழக்கத்தில் அதிகமாக உள்ள ராகங்கள். நான் ஏதாவது முயற்சி செய்தால் கூட, 'அது மாதிரி இருக்கிறதே.. அந்தச் சாயல் தெரிகிறதே' என்றுதான் தோன்றும். 'கல்யாணியில் ஒரு கீர்த்தனை செய்ய வேண்டும் என்ற போது, பட்டணம் சுப்பிரமணிய ஐயர் தவித்துப் போய் விட்டாராம். இதுவரை எல்லாரும் பயன்படுத்தியாயிற்றே என்று. அந்தப் 'பிடி'கள் இல்லாமல், 'நிஜ தாசவர' கீர்த்தனையைப் புது எடுப்பாக எடுத்துப் புது மாதிரியாகச் செய்தாராம்...

● நீங்கள் பக்கவாத்தியமாகவும் வயலின் வாசித்திருக்கிறீர்கள். ஸோலோவும் வாசிக்கிறீர்கள்... எதை அதிகம் விரும்புகிறீர்கள்?

○○ இரண்டையும்தான். பக்கவாத்தியம் வாசிக்கிற போது solo வாசிக்கக் கூடாது என்றுதான் நான் சொல்லுவேன்! பக்கவாத்தியம் வாசிக்கிற போது பக்கவாத்தியமாகவே இருக்க வேண்டும்... நம் சங்கீதமே வாய்ப்பாட்டை அடிப்படையாக வைத்து ஏற்பட்டது.

● நம் இசையில் பக்திக்கு முக்கியத்துவம் வேண்டும் என்கிறார்கள். பக்திதான் முக்கியம் என்றால் இசை 'பின்னுக்குப் போய் விடாதா?

○○ இன்று இசையில் பக்தி என்பது எப்படி இருக்கிறது என்றால், ஜனங்களுக்குத் தெரிந்த ஒரு தெய்வத்தின் பெயரை, பாடகர் நாலு தரம் சொல்லி விட்டார் என்றால் அதுதான் பக்தி என்று நினைத்துக் கொண்டு விடுகிறார்கள்! முருகா.. முருகா.. என்றோ ராஜேசுவரி என்றோ கண்களை மூடிக் கொண்டு சொல்லி விட்டால் அது பக்தி என்று நினைத்துக் கொண்டு விடுகிறார்கள். அது போதுமா? சங்கீதத்தில் பக்தி இருக்க வேண்டும். சங்கீதத்தில் வருகிற வார்த்தைகளில் பக்தி இருக்க வேண்

டும். பக்தி என்பது, சாகித்தியத்தில் மட்டுமில்லை; நாதத்திலேயே இருக்க வேண்டும். ராகம், சுவரம் பாடும் போது கூட கலைஞனின் ஈடுபாடே பக்தியாக மலர முடியும். பக்தி என்பது இறைவனின் அழகு வடிவத்தில் நாம் காண்கிற பக்தி மட்டுமல்ல; இசையின் எழில் வடிவத்தில் நாம் வைக்கின்ற பக்தியும் கூட.

● கச்சேரிகளுக்கு ரசிகர்கள் குறைந்து கொண்டு வருகிறார்களே?

○○ கலைஞர்களாகிய நாங்கள் எங்கள் வாரிசுகளைத் தயார் செய்கிறோம். ரசிகர்கள் எங்கே தயாராவார்கள்? ஒவ்வொரு பெற்றோரின் பொறுப்புத்தான் அது. கலைஞர், ரசிகர், சபாக்காரர், ஆதரவு கொடுப்பவர் என்று எல்லாரும் சேர்ந்து முயன்றால் இதைச் சரிப்படுத்தி விடலாம். இப்படி எல்லாம் ஒரு பக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறோமேயொழிய சங்கீதக் கச்சேரிகள் பாட்டுக்கு நடந்து கொண்டே தான் இருக்கின்றன. ரசிகர்கள் இல்லாமலா நடக்கின்றன!

— சாருகேசி

அண்ணாந்து பார்த்தால் ஆஞ்சநேயர் தெரிகிறார்!



சென்னை — திருச்சி தேசிய நெடுஞ்சாலையில், மேல்மருவத்தூரையடுத்துள்ள கடமலைப்புத்தூரில் அண்ணாந்து பார்த்தால், ஆகாயம் மட்டும் தெரியாது; கூடவே பிரம்மாண்டமான ஆஞ்சநேயர் சிலையும் கண்ணுக்குத் தென்படும்! அங்கு புதிதாய்த் துவக்கப்பட்டுள்ள தர்மதேவ் மோட்டலின் சிறப்பு அம்சம் இந்த ஆஞ்சநேயர் சிலை தான். மொத்த உயரம் முப்பத்து மூன்று அடி. எட்டடி பீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ள சிலை மட்டும் இருபத்தைந்தடி. கை கூப்பியபடி, வெளிர்மஞ்சள் நிறத்தில் நிற்கும் அவரைப் பார்க்கும்போதே பக்தி கலந்த பிரமிப்பு ஏற்படுகிறது.

மோட்டல் சம்பந்தப்பட்ட ஜெயராமன் கூறினார்: ''தேசிய நெடுஞ்சாலைகளில் சுமார் நூறு கிலோ மீட்டருக்கு ஒரு மோட்டல் அமைக்கப்பட வேண்டும் என்கிற அடிப்படையில், சென்னையிலிருந்து சரியாய் நூறாவது கிலோ மீட்டரில் அமைக்கப்பட்டுள்ளது இந்த தர்மதேவ் மோட்டல். இந்தத் திட்டம் பற்றி சுற்றுலாத் துறையினருடன் பேசிய போது, ''உங்கள் மோட்டலில், மக்களைக் கவர பிரத்தியேகமான விஷயம் எதற்காவது திட்டமிட்டிருக்கிறீர்களா?'' என்று கேட்டனர். இதற்குப் பதிலை யோசித்த போது, எனக்குத் தோன்றியது தான் ஆஞ்சநேயர் ஐடியா. முழுக்க முழுக்க இரும்புக் கம்பிகள், கான்கிரீட் கொண்டு அமைக்கப்பட்ட சிலை. சிதம்பர ஸ்தபதி, கல்யாணம் ஸ்தபதி, ஆறுமுக ஸ்தபதி ஆகிய மூன்று தலைமுறை ஸ்தபதிகள் ஒரே சமயத்தில் பணியாற்றி இதை உருவாக்கியுள்ளனர்!''


எட்டடி பீடத்தில் கம்பீரமாய் நிற்பதால், தினப்படி பூஜை செய்வது கஷ்டம். எனவே முன்யோசனையுடன் பீடத்திலேயே ஒரு சிறு ஆஞ்சநேயரையும் ஸ்தாபித்துள்ளனர். அந்தச் சின்ன ஆஞ்சநேயருக்குத் தினந்தோறும் பூஜை, நைவேத்தியம் எல்லாம் நடக்கிறது.

தர்மதேவ் மோட்டல்காரர்கள், பக்தி மூலம் டூரிஸம் வளர்க்கிறார்களா? டூரிஸம் மூலம் பக்தியை வளர்க்கிறார்களா? ஆஞ்சநேயருக்குத்தான் தெரியும்!

— மௌஷ்மி

சிரிப்பிலேனும் ஒருமைப்பாடு...

கருத்து: ஜூலி





போதைப் பொருள்களின் பயங்கரம்!

சிவசங்கரி

''ஐயோ, இந்தச் சித்திரவதை இன்னும் எத்தனை நாளைக்கு? இவன் உயிர் வாழ்வதன் அர்த்தம்தான் என்ன?'' என்று அரற்றி நானே கேட்டுக்கிறேன்.

ஓர் அன்னையால் இப்படிப் புலம்புவது சாத்தியமா? அப்படி என்ன வேதனை அச் சிறுவனுக்கு?

இரண்டு கேள்விகளுக்கும் ஒரே பதில் தான்.

போதை மருந்து!

போதைப் பொருள்களின் தீமைகளை விளக்கும் சிவசங்கரியின் 'சுபா' (சூரியோதயம்) தொடர் தில்லி — தேசிய ஒளிபரப்பில் ஒளிபரப்பானது. அதன் தொடர்ச்சியாக, 'இன்கார்' (வேண்டாமென்று மறுப்போம்) என்னும் சிவசங்கரியின் அடுத்த தொடரும் ஒளிபரப்பாகப் போகிறது. இன்னும் எத்தனை தொடர் வேண்டுமானாலும் ஒளிபரப்பலாம் — போதைப்பொருள்கள் அத்தனை பயங்கரமானவை என்கிறார் சிவசங்கரி......

சில மாதங்களுக்கு முன் இந்தியன் எக்ஸ்பிரஸில் வெளியான செய்தி.

'பீஹார் மாநிலத்தில் சில நிலச் சொந்தக்காரர்கள் பண்ணை ஆட்களுக்கு அதிகச் சம்பளம் கொடுப்பதைத் தவிர்க்கவென, அந்த அப்பாவி மக்களை ஒரு தவறான பழக்கத்திற்கு வேண்டுமென்றே அடிமையாக்கி விட்டு, சுமார் இரண்டு வருஷங்கள் போல அவர்களிடம் 'செமை' வேலை வாங்கிக் கொண்டு, தீய பழக்கத்தின் காரணமாய்த் தொழிலாளிகள் தெம்பு இழந்து, சாறு உறிஞ்சப்பட்ட சக்கையான பிறகு, அவர்களை நடுத்தெருவில் நாதி இல்லாமல் எறிந்து விடுகிறார்கள்!'

அப்படி என்ன விவசாயிகளைப் பலி வாங்கும் பழக்கம்?

சொல்கிறேன்.

எனது ஒரு கதைக்குக் கரு சம்பந்தமாய் நான் சந்தித்த 62 நபர்களில் வயதில் இளையவன் ஒன்பது வயது திலீப். அவனது வேதனை தாளமாட்டாத அவனது தாய்.

இ. நா. சபை, போர்க்கால நடவடிக்கைகளுடன் உடனடியாய்க் கவனிக்கப்பட வேண்டிய உலகளாவிய பிரச்னை என்று அடிக்கோடிட்டுக் காட்டியுள்ள பிரச்னை போதை மருந்துப் பிரச்னை.

போதை மருந்து பிரச்னை என்றால் என்ன?

மருத்துவர்களால் தகுந்த காரணங்களுடன் அளவோடு உபயோகிக்கப்படும் சந்தர்ப்பங்களைத் தவிர, ஒருவர் போதை மருந்துகளைத் தானாகவே தேவையின்றி உபயோகிக்கத் தொடங்கும் போது அம் மருந்து, அவரைப் புதை சேற்றில் அழுத்துகிறது! அடிமைப்படுத்துகிறது! அறிவை மழுங்கச் செய்து உடலையும் சீர்குலையச் செய்கிறது. மனம், உடல் இரண்டுமே அடிமைப்பட்டுப் போக அவர் நடைப்பிணமாகிறார்! இதுதான் போதை மருந்துப் பிரச்னை.

இந்தியாவைப் பொருத்தவரை

அதன் இரண்டு பக்கங்களிலும் உள்ள 'கோல்டன் க்ரஸண்ட்' (பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், டர்க்கி)யிலிருந்தும், 'கோல்டன் ட்ரையாங்கிள்' (பர்மா, லாவோஸ், தாய்லாந்து)விருந்தும் உற்பத்தி செய்யப்பட்ட எக்கச்சக்கமான 'அபின்', இந்தியாவுக்குள் கொண்டு வரப்பட்டு, இங்கே திருட்டு ரசாயனக் கூடங்களில் 'ஹிராயின்' என்கிற போதை மருந்தாக மாற்றப்பட்டு, மேலைநாடுகளுக்குக் கடத்தலாகிப் போனது ஒரு காலம். 70களின் இறுதிகளில் விழித்துக் கொண்டு போராடத் துவங்கிய மேலைநாடுகள், கடத்தல் மூலம் போதை மருந்து தத்தம் நாடுகளுக்குள் பிரவேசிப்பதைத் தடுக்கும் தீவிர முயற்சியில் இறங்க, விளைவு இந்தியாவில் போதை மருந்துகள் தேங்க முற்பட்டன. போதை மருந்து கடத்தல் மூலம் கோடி கோடியாய்ச் சம்பாதித்து ருசி கண்ட கடத்தல் மன்னர்கள் சும்மா இருப்பார்களா? யோசித்தார்கள். 80 கோடி இந்திய மக்கள் 'லட்டுருண்டைகளாக' கண்களில் விழ, வெளிநாடுகளுக்கு ஏன் கடத்த வேண்டும், இங்கேயே அருமையான மார்க்கெட் இருக்கிறதே என்கிற ஞானோதயம் பிறந்தவர்களாக உடனடியாய்க் காரியத்தில் இறங்கினார்கள்.

ஆக, **trafficking country**யாக (கடத்தலுக்குப் பயன்பட்ட நாடாக) இருந்த நிலைமாறி **User's paradise** (உபயோகிப்பவர்களின் சொர்க்கமாக) இந்தியா மாறியது. 80களின் துவக்கத்தில் சரசரவென்று இந்த மாற்றம் நிகழ்ந்தது.

இந்தக் கட்டத்தில்வக்ர புத்தி, பணத்தாசை கொண்ட 'மன்னர்கள்' இன்னும் ஒரு கோணத்திலிருந்தும் யோசித்தார்கள். 'இந்தியா ஏழை நாடாயிற்றே, இதில் ஒரு கிராம் (சிட்டிகை) ஹிராயின் பவுடரை 400 ரூபாய் கொடுத்து வாங்குவது எத்தனை பேருக்குக் கட்டுப்படியாகும்?'

நிறைய மக்களிடம் பணப்புழக்கம் அதிகம் இல்லை என்பதால், ஒரு சிட்டிகை வெள்ளை ஹிராயின் பவுடரோடு, சுமார் ஒன்பது சிட்டிகை எலிபாஷண பவுடர், துத்தநாக பவுடர், காய்ந்த ஊமத்தங்காய்ப் பொடி — போன்ற விஷங்களைக் கலந்து, பழுப்பு நிறப் பவுடராக்கி, ப்ரவுன் ஷுகர் என்கிற பெயரில் கிராம் ஒன்றுக்கு நாற்பது ரூபாய் விதம் விற்பனை செய்ய முற்பட, அமோகமாய் மார்க்கெட் சூடு பிடித்தது! இப்படித்தான், இளைய சமுதாயத்தை ஆட்டிப்படைக்கும் சர்வ சக்தி படைத்த ஆலகால விஷமாக நிபுணர்களாலும், வைத்தியர்களாலும் கருதப்படும் 'ப்ரவுன் ஷுகர்' — பழுப்பு சர்க்கரை — இந்தியாவுக்குள் அடி எடுத்து வைத்து, யாரும் எதிர்பார்க்காத தினுசில், கண்மூடித் திறக்கும் நாழிகையில் தபதபவென்று ஆழமான வேர், விழுதுகள் விட்டு மஹாபயங்கரமாக வளர்ந்து, இன்று சின்னச் சின்ன ஊர்களில் கூட அதிகச் சிரமமில்லாமல் கிடைக்கும் வஸ்துவாக மாறியது!

இப்போதெல்லாம் தினமும் தினசரிகளைப் பிரித்தால் '36 கோடி ரூபாய் பெறுமானமுள்ள போதை மருந்து பிடிப்பட்டது', என்றும் '13 கோடி மதிப்புள்ள கஞ்சாச் செடிகள் அழிக்கப்பட்டன' என்றும் செய்திகள் வருவது சகஜமாகி விட்டது.

"இன்றைக்கு நாம் போதை மருந்து பற்றிக் கேள்விப்படும் விவரம் பத்தில் ஒரு பங்கு கூட இல்லை. தெரிந்தது ஒரு பங்கு என்றால்; தெரியாத விவரங்கள், ஒன்பது பங்கு...!" என்கிறார் மனோதத்துவ நிபுணர் டாக்டர் வி. ராமச்சந்திரன், அந்த கவலையுடன்.


ஒரு காலத்தில் மேல்தட்டு மக்களிடையே மட்டும் காணப்பட்ட இந்த பழக்கம் இன்று, சாதாரண தொழிலாளி, ஆட்டோ ரிக்ஷா டிரைவர், கல்லூரி மாணவ, மாணவிகள், மத்திய வகுப்பைச் சார்ந்த நடுத்தர வயசு ஆண்கள் — என்று அனைத்து மக்களையும் பிடிக்கத் துவங்கி விட்டது, யாரும் மறுக்க இயலாத பிரத்யட்ச நிலை இது.

சரி, பலவகைப்பட்டவரும் இம்மாதிரியான கொடிய பழக்கத்திற்கு ஆளாக வேண்டுமென்றால் அதற்குக் காரணம் இல்லாமல் இருக்குமா?

ஏன் இல்லை? ஒன்றல்ல, இரண்டல்ல... பல. அவற்றில் முக்கியமான சில:

1. 'அது என்ன?' என்கின்ற ஆர்வம்;
2. இன்பம் தரும் என்கின்ற நம்பிக்கை;





"அவர்தான் எல்லாக் கல்யாணங்களிலும் செருப்புத் திருடுகிறவர்னு எப்படித் தெரிஞ்சதாம்...?"

"மொய் வைக்கும் போது, '4 ரூபா 95 காசு' வச்சுட்டாராம்!"

— ஆர். ரத்னசாமி.

3. அடுத்தவரின் நிர்ப்பந்தம்; 4. வாழ்க்கையில் ஒரு சலிப்பு, விரக்தி; 5. தன்னை யாரும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்கின்ற ஏக்கம்; 6. கனவுகள் நனவாகாத ஏமாற்றம்; 7. அதிகமான பணப் புழக்கம்; 8. சிரமமில்லாமல் போதை மருந்துகள் கிடைக்கும் வாய்ப்பு; 9. உடல், மனம் அதற்கு அடிமையாகி விட்டதால் தொடர வேண்டிய கட்டாயம்.

போதை மருந்து என்பது ஒரு வகைதானா, இல்லை அதில் பல ரகங்கள் உண்டா?

இயற்கையாய் உற்பத்தி செய்யப்படுவது, செயற்கையாய் உண்டாக்கப்படுவது என்பதோடு, உற்சாகப்படுத்துபவை, பிரமை உண்டாக்குபவை என்று சில பிரிவுகளும் உள்ளன. அவை:

1. மத்திய நரம்பு மண்டலத்தின் இயக்கங்களைத் தூண்டி விடுபவை. (உதாரணம் — ஸ்பீட் எனப்படும் மாத்திரை வகைகள், கொக்கேன், நிக்கோடின்)
2. மத்திய நரம்பு மண்டலத்தின் இயக்கத்தை மட்டுப்படுத்துபவை. (உதாரணம் — தூக்க மாத்திரைகள், 'குடி')
3. பிரமை உண்டாக்குபவை. (உதாரணம் — எல். எஸ். டி. மாத்திரைகள், சில காளான் வகைகள்)
4. ஒருவகை மிதப்பைத் தருபவை (உதாரணம் — கஞ்சா)
5. வலி, மனவேதனை குறைக்க உதவுபவை. (உதாரணம் — ஓபியம், பெத்தடின், ஹிராயின், ப்ரவுன் ஷுகர்)

மேற்சொன்ன விளைவுகள் தவிர, போதை மருந்துக்கு ஒருவித முரட்டுச் சுபாவத்தை — வெறித்தனமான உணர்வுகளைத் தூண்டிவிடும் சக்தியும் உள்ளது என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. ஏன் — நாம் உபயோகிக்கும் 'அஸாஸின்' (கொலையாளி என்று அர்த்தம்) என்கிற ஆங்கில வார்த்தைக்கு மூலம் எதுவென்று தெரியுமா? கஞ்சாச் செடியிலிருந்து தயாரிக்கப்படும் 'ஹஷீஷ் என்கிற போதைப் பொருளைக் குறிக்கும் வார்த்தைதான் அது. பழைய நாட்களில் மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டி வரும் சமயங்களில், கொலையாளிக்கு நிறைய ஹஷீஷ் கொடுத்துவிடுவார்களாம். அது, அபரிமிதமாகக் கொலை உணர்வைத் தூண்டிவிட, துளி வருத்தமோ, குற்ற உணர்வோ தலைதூக்காத கொலையாளி 'ஜம்'மென்று தம் பணியைச் செய்து முடிப்பாராம்! இப்படியாக ஹஷீஷ் என்ற மூலச்சொல்லிலிருந்து ஜனித்ததுதான் அஸாஸின் — என்ற வார்த்தை!

'அவன்' தொடர்கதையை எழுதின சமயத்தில் 'ப்ரவுன் ஷுகர்' எப்படி இருக்கும் என்று பார்க்கும் ஆர்வத்தில், தட இயல் ஆய்வு நிலையத்துக்குச் (Forensic) சென்று, டைரக்டர், ப்ரொபஸர் சந்திரசேகரிடம் அதைக் காட்டும்படி கேட்டேன். மின் விசிறியை நிறுத்திவிட்டுக் கையுறை, முகமூடி அணிந்து, ஒரு சிறு பாட்டிலை எடுத்துக் காட்டியவாறு அவர் சொன்னார்: "நம்மை அறியாமல் இந்தப் பவுடரை இருமுறை பரிசோதனையின் போது சுவாசித்தாலும் கூட அடிமைப்பட்டுப் போவோம். அத்தகைய மூர்க்க சக்தி கொண்டது இது!"

ப்ரவுன் ஷுகரின் பிடியில் மாட்டிக் கொண்ட நபர்கள் அதன் பிடியிலிருந்து மீண்டு வருவது என்பது லேசில் நடக்காத காரியம். இதை அனைவரும் நினைவில் செதுக்கி வைத்துக் கொள்வது அவசியம்.

ஒருவர் போதை மருந்து உபயோகிக்கிறார் என்பதைக் கண்டுபிடிப்பது எளிதுதானா?

இல்லை. துரதிர்ஷ்டவசமாகக் 'குடி'யைப் போலத் தன் மணத்தின் மூலம் காட்டிக் கொடுக்கும் 'நல்ல குணம்' போதை மருந்துக்குக் கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும். என்றாலும் நாளடைவில் ஊன்றிக் கவனித்தால் சில பாதிப்புகளை, அறிகுறிகளைப் புரிந்து கொள்வது சாத்தியமே —

அவை: 1. கண்ணில் சிவப்பு; 2. கண்ணில் சுரக்கும் நீர்; 3. பேச்சில் குளறல்; 4. நிதானமில்லாத நடை; 5. பசியின்மை; 6. எடை குறைதல்; 7. அனாவசிய கோப, தாபக் கத்தல்கள்; 8. கை, இதர பகுதிகளில் ஊசி போடுவதால் உண்டாகும் கரும்புள்ளிகள்; 9. உடைகளில் ரத்தக் கறைகள்; 10. துணி, சுவாசத்தில் ஒருவகை வாடை; 11. இஞ்செக்ஷன் கருவிகள், நூதனமான சாதனங்களை வைத்திருப்பது; 12. வீட்டிலிருந்த பொருட்கள் காணாமல் போவது; 13. தனிமையை நாடிச் செல்வது; மொட்டை மாடி, குளியல் அறையில் தேவையில்லாமல் தனித்திருப்பது.

மேலே சொன்ன அறிகுறிகளில் சில நிஜமாகவே உடம்பு சரியில்லாத ஒரு பிள்ளைக்



"ஒவ்வொரு ஸ்பூனிலும் ஒப்பற்ற சக்தி"





பல நூற்றாண்டுகளுக்கு முன், சித்தர்கள் உடல் நலத்திற்கும், மன ஒருமைப்பாட்டுக்கும் பெரிதும் உதவும் மூலிகைகளைக் கண்டறிந்து பயன் படுத்தி வந்தனர். கல்ப மூலிகைகள் எனப்படும் அந்த மூலிகைகள் இரத்தத்தைச் சுத்தம் செய்து, இரத்த ஓட்டத்தை அதிகரித்து, ஜீரணத்தை மேம்படுத்தி, நரம்புகளுக்கும், தசைகளுக்கும் ஒப்பற்ற சக்தி ஊட்டுவதையும் அவர்கள் உணர்ந்தனர்.

இன்று, அதே கல்ப மூலிகைகளை சரியான விகிதத்தில், தாதுப் பொருட்களுடன் தேனில் கலந்து உங்களுக்கு அளிக்கிறது கிரௌன் காயகல்பம்.

கிரௌன் காயகல்பம் உங்கள் உடம்பிற்கு ஊட்டமும், மூளைக்கு வல்லமையும் தொடர்ந்து அளித்து, நாள் முழுதும் கடுமையாக உழைப்பதற்குத் தேவையான சக்தியும் தெம்பும் தருகிறது.



*கிரௌன் காயகல்பம் ஸ்பெஷல் — தங்கம், வெள்ளி, இரும்பு, துத்தநாகம் உள்பட நவ லோக பஸ்பங்கள் அடங்கியது.

*கிரௌன் காயகல்பம் ரெகுலர் — இரும்புச் சத்துடன் துத்தநாக தாதுப் பொருள் நிறைந்தது.

கிரௌன் காயகல்பம்

கிரௌன் ஹெர்பல் ப்ராடக்ட்ஸ்
55, ஹாரிஸ் ரோடு, சென்னை-600 002.
போன்: 8253556, 832555, 8251974

Insight-1181

கும் இருக்கலாம். அதனால் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்து விடாமல் தீவிரமாய்க் கண்காணித்து நிச்சயமாய்த் தெரிந்து கொள்வது நல்லது.

சரி, போதை மருந்தைப் பிள்ளை உபயோகிக்கிறான் என்று உறுதியாய்த் தெரிந்து விட்டது: மேற்கொண்டு என்ன செய்ய?

பெற்றோர் செய்ய வேண்டியவை —

1. குழந்தைகளுடன் நண்பர்களாகப் பழக முயன்று பையனின் ரசனைகளை, நடவடிக்கைகளை, நண்பர்களை அறிந்து கொள்ள வேண்டும்.
2. பிள்ளை போதை மருந்து உபயோகிப்பது தெரிய வந்தால், அதற்கான காரணத்தை ஆராய்ந்து உதவ முன்வர வேண்டும்.
3. குழந்தைக்கு நல்ல உதாரணம் அவசியம். குடிக்காமல், சிகரெட் பிடிக்காமல் இருந்து நாமே சிறந்த உதாரணமாக விளங்குவது நல்லது.
4. வீட்டில் உள்ள தேவையற்ற மருந்துகளை அப்புறப்படுத்தி விடுவது.
5. 'போதை மருந்துப் பழக்கமா?' என்று பயந்து ஒதுங்காமல், யதார்த்தத்தை உணர்ந்து, அதுபற்றின விவரங்களைத் தெரிந்துகொண்டு விழிப்போடு இருப்பது.

நமக்குத் தெரிந்தவருக்கு இந்தப் பிரச்னை இருப்பது உறுதியானால் நாம் செய்ய வேண்டியவை:

1. அவருடைய பிரச்னைகளைப் புரிந்து கொண்டு நாம் செயல்படுவதை உணர்த்த வேண்டும்.
2. போதை மருந்து தீங்கு விளைவிக்கும் என்பதைப் பக்குவமாக உணர்த்த வேண்டும்.
3. 'உனக்கு நான் உதவ விரும்புகிறேன்' என்பது புரியும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும்.
4. சண்டை போடவோ, திட்டவோ, அறிவுரை கூறவோ கூடாது.
5. அளவுக்கு மீறின பச்சாதாபத்தைக் கண்டிப்பாய்க் கொடுக்கக் கூடாது.
6. 'அடிமையானதற்கு'த் தேவையற்ற காரணங்களைச் சப்பைக்கட்டாகக் கூற இடமளிக்கக் கூடாது.
7. நாமாக கவனித்து விடலாம் — மருத்துவர் உதவி தேவையில்லை என்று எண்ணி விடக்கூடாது.

'போதை மருந்துப் பிரச்னை இந்தியாவில் அவ்வளவாக இல்லை; இது மேல்நாட்டு, மேல் தட்டு மக்களின் கலாசாரம். அதனால், வீணாகச் சுயலாபத்துக்கும், சுய விளம்பரத்துக்கும் ஆசைப்பட்டு, இல்லாததை இருக்கிற மாதிரி புரளி கிளப்புகிறான்' என்று சிலர் கடந்த காலத்தில் என்னைப் பழித்தது உண்டு.

இவர்களுக்கெல்லாம் நான் சொல்லும் பதில் இதுதான்:

குடிப் பழக்கம் இருபது வருடங்களில் ஒரு சமுதாயத்துக்குச் செய்யும் தீமைகளைப் போதை மருந்து இரண்டே வருடங்களில் செய்து விடுகிறது என்கிறார்கள் நிபுணர்கள். சீக்கிரம் அடிமைப்படுத்துவதோடு, மீள முடியாமல் புதைசேற்றில் அமுக்கும் குணம் கொண்ட போதை மருந்துப் பழக்கத்தை, வந்தபின் கட்டுப்படுத்த நினைப்பதைவிட, வரும்முன் காக்கும் நடவடிக்கைகளில் இறங்குவதே விவேகமான காரியம். எனவே...


உங்கள் குழந்தைகளிடம் அன்பு செலுத்துங்கள்; அக்கறை காட்டுங்கள். இவை மனத்தளவில், இருந்தால் போதாது; வெளிப்படுத்துங்கள். அவர்கள் வெளியூரில் இருந்தால் அடிக்கடி கடிதம் எழுதி அன்பைப் பரிமாறிக் கொள்ளுங்கள். அவர்களின் உள்ளுணர்வைப் புரிந்து கொண்டு உதவும் நண்பனாகச் செயல்படுங்கள். போதை மருந்துகளால் ஏற்படக் கூடிய அபாயங்களை அவர்கள் முழுமையாகப் புரிந்து கொண்டிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். இல்லையெனில் சமயம் பார்த்து எடுத்துச் சொல்லி எச்சரித்து வையுங்கள்.


அட்டை வண்ணப்படங்கள்:
யோகா, உத்ரா.

அடுத்த இதழில்...

தலைமைக்குத் தயாராகிறார்கள்..

—கவர்ஸ்டோரி





எங்கள் நோக்கம் தேசிய ஒற்றுமையே!
அத்வானி
தீவிர மத உணர்வுகள்
ஏகப்பட்ட டிராபிக்கு... ஜாக்கிரதையா ஊர் போய்ச் சேருங்க...!
ஐயோ, என்னையே முழுங்கிடும் போலிருக்கே!
மண்டல் அறிக்கை அமுல்
மெல்ல மெல்ல பூதங்க வளர்த்துவிட்டு நான் இருக்கேன்... வெட்டுங்க, வெட்டுங்க. இதுக்குப் போய் பயந்துக்கிட்டு!
இப்பதான் எனக்கு ஞானோதயம் உண்டாச்சு... இந்தப் பிரதமர் ஒண்ணும் சரியில்லே... ராஜினாமா செய்யப்படும்... வேறு யார் வந்தாலும் நம்ம ஆதரவு உண்டு!



கல்கி

1990 அக்டோபர் 7
மலர் : 49 இதழ் 10
பிரமோதூத புரட்டாசி 21



அரசுடைமையான வங்கிகளின் அவல நிலை!

அரசுடைமையான வங்கியில் ஒரு காசோலைக்குப் பணம் பெற அரை மணி ஆகும். அருகிலுள்ள ஒரு ஹோட்டலுக்குச் சென்று காப்பி சாப்பிட்டு விட்டு வரலாம். ஒரு டிராஃப்ட் வாங்க ஒரு மணி நேரமாவது ஆகும். வேறு ஏதாவது வேலை இருந்தால் முடித்துக் கொண்டு திரும்பலாம். இதெல்லாம் நமக்குப் பழகிய விஷயங்கள்.

நன்றி கூற வேண்டியது இந்திரா காந்திக்கு. அவர்தான் தமது கட்சியின் ஜனநாயக சோஷலிஸக் கொள்கையை வங்கிகள் மீதும் திணித்து, பதினாலு வங்கிகளை அரசுடைமையாக்கினார். அதன் பின்னர் வேறு பல வங்கிகளும் அரசுடைமையாக்கப்பட்டன. அரசியல் ஆதாய நோக்கில் லோன் மேளாக்கள் அமர்க்களப்பட்டன. சீர்குலைவு அப்போதே ஆரம்பமாகி, இப்போது ஓர் உச்ச கட்டத்தை அடைந்திருக்கிறது!

வெளியூரிலிருந்து உங்களுக்கு நூறு ரூபாய்க்கு ஒரு காசோலை வந்து அதை வங்கிக் கணக்கில் கட்டினால், முப்பது ரூபாய் கூட ''ஸர்வீஸ் சார்ஜ்'' என்பதாக அதில் பறிக்கப்படலாம். நீங்கள் மூச்சு விட முடியாது! சென்ற ஆண்டு ஒரு லாக்கருக்கு ரூ. 205 கொடுத்திருந்தால் இந்த ஆண்டு அதே லாக்கருக்கு ரூ. 540 கேட்பார்கள்! 'இப்படி லாக்கர் வாடகையை ஒரே சமயத்தில் ஒரேயடியாக 163 சதமா உயர்த்துவது?' என்று நீங்கள் கேட்கக் கூடாது! பணம் டெபாஸிட் செய்பவர்களுக்கு முதல்தர தனியார் நிறுவனங்கள் பதினாலு சதம் வட்டி தருகின்றன. வங்கியில் எட்டு முதல் பத்து சதம்தான் பெற முடியும். இப்படியெல்லாம் மக்கள் பணத்தை உறிஞ்சுவதால் வங்கிகள் அபரிமிதமான லாபத்தில் நடக்கும் என்றுதானே எதிர்பார்ப்போம்?

அதுதான் இல்லை! அரசுடைமை வங்கிகளில் பலப்பல நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக பாங்க் ஆஃப் இந்தியா 920 கோடி ரூபாய் நஷ்டத்தை இந்த ஆண்டு சந்திக்கிற சாதனை புரிந்திருக்கிறது! ஒருவேளை திரும்பப் பெற முடியாத கடன்களை அதிகமாக வழங்கி விட்டதோ என்று பார்த்தால், அதுவும் இல்லை! 'சந்தேகத்துக்குரிய கடன்கள்' என்பதாக ரூ. 250 கோடிதான் கணக்கில் காட்டப்பட்டிருக்கிறது. நியூ பேங்க் ஆஃப் இந்தியா மீது, ரிஸர்வ் வங்கி பாய்ந்து, நிர்வாகச் சீர்கேடுகளுக்காக அதனைக் கடுமையாக விமர்சித்துக் கண்டித்திருக்கிறது. வங்கியின் சொத்துக்களின் மதிப்பு கணிசமாகக் குறைந்திருப்பதையும் செலுத்த வேண்டிய வரிகளுக்காகக் கணக்கில் நிதி ஒதுக்கப்படாமல் இருப்பதையும் ரிஸர்வ் வங்கி எடுத்துக்காட்டியிருக்கிறது. யுனைடெட் கமர்ஷியல் வங்கியின் நிதி நிலைமை படுமோசமாக இருப்பதால், அதனை ஸ்டேட் பாங்குடன் இணைத்து விடுவதா, அல்லது இரண்டு மூன்றாகப் பிரித்து, இரண்டு மூன்று இதர வங்கிகளுடன் இணைப்பதா என்று ரிஸர்வ் வங்கி யோசித்து வருகிறது! கடந்த நிதி ஆண்டுக்கான கணக்குகளை இந்த வங்கி இன்னும் முடிக்காது போனாலும் ரூ. 40 கோடி வரை நஷ்டம் காட்டப்படலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இதையெல்லாம் கண்டு, நிதி அமைச்சர் மது தண்டவதே அரண்டு போயிருக்கிறார். வங்கிகளின் செயல்பாடு குறித்து விவாதிக்க அக்டோபர் மூன்றாம் தேதி ஒரு கூட்டம் ஏற்பாடு செய்து, அதில் வங்கி உயர் நிர்வாகிகளைச் சந்திக்கவிருக்கிறார்.

மோசமான நிலையில் உள்ள வங்கிகள், நியூ பாங்க் ஆஃப் இந்தியா, பஞ்சாப் மற்றும் சிந்து வங்கி, விஜயா வங்கி, ஸிண்டிகேட் வங்கி, பாங்க் ஆஃப் மகாராஷ்டிரா, யுனைடெட் கமர்ஷியல் வங்கி ஆகியன. 'ஆமை புகுந்த வீடும், அமீனா புகுந்த வீடும் உருப்படாது' என்பதுடன், 'அரசுடைமை ஆன எதுவும் உருப்படாது' என்றும் சேர்த்துக் கொள்ள வேண்டியதுதான்!

தனியார் வங்கி ஒன்று மோசமான நிலையில் இருந்தாலே அதனைச் சரியாகக் கண்காணிக்காத ரிஸர்வ் வங்கியும் அரசும் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகும். அரசுடைமையான வங்கிகளே நஷ்டத்தை அடைவது என்றால் நாடே திவாலா நிலை நோக்கி வெகு வேகமாக முன்னேறுகிறது என்றுதான் அர்த்தம்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

வி.பி.சிங்கின் துணிச்சல் குறித்து...?

* வே. செந்தில்குமார், கொங்கணாபுரம்.

? திருநாவுக்கரசு அணியினரை 'மரத்திலிருந்து ஒடித்துப் போடப்பட்ட கன்னிகள்' என்று நெடுஞ்செழியன் வர்ணனை செய்திருப்பது பற்றி?

! கொஞ்ச காலம் முன்பு தாம் உதிர்ந்த முடியாக இருந்ததை மறக்காததால் அதை விடச் சற்றே நாகரிகமான பதப் பிரயோகம் செய்திருக்கிறார்.

* எஸ். சேகர், அறந்தாங்கி.

? பாட்டில் சாராயத்துக்கும் பாக்கெட் சாராயத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன?

! கமிஷன்.

* எஸ். யோகலிங்கம், சென்னை — 82.

? நான் பத்திரிகைகளுக்குச் சில படைப்புக்கள் அனுப்பி அவை பிரசுரம் ஆகாத பட்சத்தில் அப்பத்திரிகை மீது வெறுப்பு வருகிறது... இது ஏன்?

! இது ஆரம்பம்தானே, விடாமுயற்சியுடன் தொடருங்கள். வெறுப்பு கோபமாக மாறும். அப்போதும் நம்பிக்கை இழக்காமல் தொடர்ந்தால் நாளடைவில் பழகிப் போய் விடும். அப்புறம் கோபம், வெறுப்பு எல்லாம் அடங்கிப் போக, சாந்த சமநிலைதான்!

* அ. முஸ்தபா, தக்கோலம்.

? கலைஞர் ஆட்சியில் பொருள்கள் தட்டுப்பாடு, விலைவாசி உயர்வு எல்லாம் ஏற்பட்டு விட்டதே...?

* கன்னிகள் வர்ணனை



* விலைவாசியா? அப்படியென்றால்...?



! தேசிய ஒருமைப்பாடு குழு கூட்டம் 'ஜாம் ஜாம்' என்று நடத்திவிட்டாரே! ஐம்பெரும் விழா 'தாம்தூம்' பண்ணி விட்டாரே! கன்னியாகுமரியில் 133 அடி உயர வள்ளுவர் சிலைக்குத் துவக்க விழா 'கல் கல்'லென்று உளியால் செதுக்கி நடத்தியிருக்கிறாரே...! என்ன கேட்டீர்...? விலைவாசியா...? அதைப் பற்றி அரசியலாருக்கு என்ன அக்கறை?

* என். வி. உச்சிமாகாளி, தச்சநல்லூர்.

? யாழ்ப்பாணத்தை யார் கைப்பற்றுவார்கள் — புலிகளா? ராணுவமா?

! அவர்களை முந்திக் கொண்டு எமன்.

* இரா. சண்முகசுந்தரம், கல்லிடைக் குறிச்சி.

? வி. பி. சிங்கின் துணிச்சல் குறித்து...?


! கேட்பார் பேச்சைக் கேட்டுத் தீர்க்க தரிசனம் இன்றி ஓர் அசட்டுக் காரியம் செய்த பிறகு, பின் விளைவுகளைக் கண்ட பிறகும் மூடப் பிடிவாதத்துடன் இருப்பது துணிச்சலாகாது. தவறுகளைத் திருத்திக் கொள்ளவும், விட்டுக் கொடுக்கவும்தான் அதிகத் துணிச்சல் வேண்டும். 'அவசரப்பட்டு விட்டேன்; மாணவர் சமுதாயத்தின் நம்பிக்கையைப் பெற முயற்சி மேற்கொள்வேன்; அதுவரை மண்டல் கமிஷன் அறிக்கையை அமுல்படுத்த மாட்டேன்' என்று கூறுகிற துணிவுதான் இப்போது தேவை.

* பா. புஷ்பமுருகேச ராஜன், சின்னமனூர்.

? பாரதீய ஜனதா, தேசிய முன்னணி அரசை மிரட்டுவது ஏன்?

! கண்மூடித்தனமான ஆதரவு தருவதாக என்றுமே பாரதீய ஜனதா கூறியதில்லை. 'காங்கிரஸ் ஆட்சிக்கு வருவதைத் தவிர்க்கும் நோக்கில் உங்களுக்கு எங்கள் ஆதரவு


* அற்புதச் சொற்பொழிவு




* கட்டியே தீருவேன்



* என்ன நடக்கும்?



* துணிச்சல் குறித்து...



உண்டு; ஆனால் உங்களை விமர்சிக்கும் உரிமையை விட்டுக் கொடுக்க மாட்டோம்' என்றுதான் ஆரம்பத்திலிருந்தே கூறி வருகிறார்கள். அதன்படிதான் நடந்து கொண்டும் வருகிறார்கள். இதில் 'மிரட்டல்' என்ற பேச்சுக்கு இடமில்லை. 'இடித்துரைத்தல்' என்று கூறலாம்.

* 'மல்லிகை'மன்னன், மதுரை.

? 'இட ஒதுக்கீட்டை ஆதரிக்கும் 90 சதம் மக்கள், இட ஒதுக்கீட்டை எதிர்க்கும் பத்து சதம் மக்களுடன் மோத வீதிக்கு வந்தால் நிலைமை என்ன ஆகும் என்பதைச் சிந்திக்க வேண்டும்' என்கிறாரே அமைச்சர் பாஸ்வான்?

! சிந்தித்து விட்டேன். வி. பி. சிங், பாஸ்வான் உருவில் ஹிட்லர் — கோயபெல்ஸ் ஆட்சி நடக்கும். சிறுபான்மையினர் உரிமையைப் பாதுகாப்பதுதான் ஜனநாயகம்; சிறுபான்மையினர் உரிமையைப் பறித்து, அவர்களை அழிப்பது அல்ல.

* நா. சுந்தர், மதுரை.

? உறுதியாக, 'ராமர் கோயிலைக் கட்டியே தீருவேன்' என்கிறாரே, அத்வானி?

! ராமர் கோயிலைக் கட்டுவதில் பிரச்னை இல்லை. 'எங்கே?' என்பதில்தான் பிரச்னை. தமது ரத யாத்திரை, 'ஒற்றுமையை வளர்க்கவே, குலைக்க அல்ல' என்கிறார். நமக்கென்னவோ நம்பிக்கை பிறக்கவில்லை. அரசியல்வாதிகள் ஒதுங்கிக் கொண்டு, காஞ்சி சங்கராச்சாரியார் கூறியது போல், பிரச்னையை ஆன்மிகத் தலைவர்களிடம் தீர்வுக்கு ஒப்படைப்பதே நல்லதாயிருக்கும். இவர்களால் முடியாதது, அவர்களாலாவது முடிகிறதா, பார்க்கலாம்.

* கிஷோர், திருச்சி.

? முண்டாகக் கவிஞருக்கு நடந்த முத்தான விழாவில் தாம் கூறிய சில கருத்துக்களுக்குக் குறிப்பிட்ட சிலர் மறுப்புத் தெரிவித்ததாகப் பெரியார் தாசன் கூறுகிறாரே?

! பெரியார் தாசன் அற்புதமாகச் சொற்பொழிவாற்றினார். அன்று அரங்கம் நிரம்பி வழிந்ததே அவர் பேச்சைக் கேட்கும் ஆர்வத்தில்தான் என்றால் மிகையாகாது. பேச்சின் இடை இடையே அவர் சார்ந்துள்ள இயக்கத்தின் கொள்கைகள் எட்டிப் பார்ப்பதை அவரால் தவிர்க்க முடியவில்லை. அதற்கு மறுப்புத் தெரிவிப்பதைத் (நயமாகத்தான்) தலைமை வகித்த ம.பொ.சி.யால் தவிர்க்க முடியவில்லை. எல்லாவற்றையுமே ரசனையோடு தலையாட்டிக் கேட்டுக் கைதட்டிப் பாராட்டுவதை ரசிகர்களால் தவிர்க்க முடியவில்லை!

* கு. கணேசன், காட்டாங்குளத்தூர்.

? சென்னையில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாடு குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் பாரதீய ஜனதா புறக்கணித்திருக்கிறதே...?

! 'பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகம் அஸ்தமித்து விடாது' என்ற சொல்லுக்கு இடமின்றி, அவர்கள் கலந்து கொண்டு, தங்கள் குற்றச்சாட்டையும் அந்தக் கூட்டத்திலேயே வெளியிட்டிருந்தால் அதற்கு அதிகமான மதிப்பு இருந்திருக்கும்.

* ஆர். சீனிவாசன், சேலூர்.*

? பாராளுமன்ற இடைத்தேர்தலில் பாரதீய ஜனதா தனித்து நின்றால் வெற்றி பெறுமா?

! மும்முனைப் போராட்டம், மீண்டும் ராஜீவ் ஆட்சிக்கு வழி வகுக்கும். அதைத்தான் அவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். அது சரி, இடைத்தேர்தல்தான் என்று நிச்சயித்து விட்டீர் போலிருக்கே!

* அ. கோபி, சென்னை.

? அரசியல்வாதியிடம் எதை எதிர்பார்க்கக் கூடாது?

! தொலைநோக்குப் பார்வையை, தன்னலமற்ற நேர்மையை, விசாலமான மனத்தை, அறிவாற்றலை, நல்லொழுக்கத்தை, பொருளாதார அறிவை, சுருங்கச் சொல்வதென்றால் ஆட்சித் திறனை எதிர்பார்க்கக் கூடாது!

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

ஆர். சீனிவாசன்,
"சாமியார் இல்லம்,"
சேலூர் அஞ்சல்,
கோவை மா. வ. — 638 655.

வைரமுத்து



கவிஞர்

வைரமுத்து எழுதும்

புதிய தொடர்கவிதை

சிகரங்களை நோக்கி

கல்கி 21.10.90

தீபாவளி சிறப்பிதழில்

டாக்டர் பதில்கள்:

போதைப் பழக்கத்தை விட்டுவிட்டாலும் பழைய வாழ்க்கை கிடைக்குமா?

● பி. ஹேமபிரபா, திருச்சி — 6.

போதை மருந்துக்கு அடிமையானவர்கள், அதை அறவே விட்டு விட்ட பிறகும் அவை முன்பு ஏற்படுத்திய தீமைகள் முழுமையாக மறைந்து விடுமா? எந்த அளவுக்கு அவர்கள் மற்றவர்களைப் போல் நார்மலாக இருப்பார்கள்?

டாக்டர் டி. ஆர். சுரேஷ், டாக்டர் டி. பிரபலகுமாரி (மனநோய்ச் சிகிச்சை நிபுணர்கள்) சென்னை:

போதைப் பொருள் வயப்பட்டவர்கள், அதை அறவே விட்டு விட்ட பிறகும், அவற்றால் வந்த தீமைகள், முழுமையாக, தானாக மறைந்து விடாது. இந்தத் தீமைகளை மனத்துக்கு ஏற்படும் தீமைகள், உடலுக்கு ஏற்படும் நோய்கள், கல்வி, தொழில், சமூக அந்தஸ்து ஆகியவற்றுக்கு ஏற்படும் பாதிப்புகள், குடும்பச் சூழ்நிலைக்கு உண்டாகும் சீர்குலைவுகள் என்று வகைப்படுத்தலாம்.

இவற்றில், மனத்துக்கு ஏற்படும் தீமைகளில் முக்கியமானது — மீண்டும் போதைப் பொருள் வயப்படத் தூண்டும் எண்ணமே ஆகும். பல ஆண்டுகள் போதைப் பொருளை விட்டு விலகி இருப்பவர்களிடம் கூட, இந்த ஏக்கம் முழுவதும் நீங்காமல் இருக்க முடியும். இந்த அபாயத்தைத் தெளிவாக ஒப்புக் கொண்டு, முன்னெச்சரிக்கையோடு இருப்பதே பாதுகாப்பு. 'எனக்கு முழு உறுதி உண்டு. மீண்டும் சறுக்கவே வழி இல்லை' என்று கண்மூடித்தனமாக வீராப்புப் பேசுவது, வழுக்கும் வாய்ப்பை அதிகரிக்கும்.

அடுத்து, போதைப் பொருள்களால் ஏற்படும் பல்வேறு உடல் நோய்களும், தத்தம் போக்கில்தான் செல்லும். பழக்கத்திலிருந்து விடுபட்டதால், அவை தாமாகவே மறைந்து விடும் என்று எதிர்பார்க்க முடியாது. உதாரணமாக, மஞ்சள் காமாலையோ எய்ட்ஸ் நோயோ இதனால் வந்தால், அவற்றின் விளைவுகளை நோயாளி அனுபவித்தே ஆக வேண்டும்.

மூன்றாவதாக, ஒருவனுடைய வாழ்க்கையில் கல்வித் தகுதியும், வேலை வாய்ப்பும் அமைவதற்கான மிக முக்கியமான காலம் போதைப் பொருள் பழக்கத்தால் வீணாகி விடுகின்றது. அதிலிருந்து ஒருவர் விடுபட்ட பிறகும், இழந்த வாய்ப்புக்களைத் திரும்பப் பெற்று, நஷ்டங்களை ஈடுசெய்வது மிகவும் அரிது; பெரும்பாலும் முழுமையாக முடிவதில்லை என்றே சொல்ல வேண்டும்.

போதைப் பொருள் பழக்கத்திலிருந்து விடுபட்டவர்கள், மற்றவர்களைப் போல் சாதாரணமாக இருப்பது என்பது, இந்த வரம்புகளுக்கு உட்பட்டுத்தான் முடியும் என்பதே கசப்பான, ஆனால் கட்டாயம் எதிர்கொள்ள வேண்டிய உண்மை.

● எஸ். பத்மாவதி கோவை — 1.

கடந்த ஆறேழு ஆண்டுகளாக நான் ஜலதோஷத்தால் அவதிப்படுகிறேன். ஒரு நாளும் என் மூக்கு வறண்டதே இல்லை. இதற்கு என்ன காரணம்? இதற்கு விடிவே கிடையாதா?

டாக்டர் ஜே. ஆர். சுப்பிரமணியம், சென்னை காளியப்பா மருத்துவமனை, சென்னை — 18.

ஜலதோஷம் என்பதும் அலர்ஜியால் உண்டாவதுதான். அலர்ஜி என்றால், இதில் எக்ஸிமா, ஆஸ்துமா எல்லாம் சேரும். முதலில் அறையை ஈரத் துணியால் சுத்தம் செய்வது, வாக்குவம் கிளீனரால் சுத்தம் செய்வது என்று தூசுத் தடுப்பு முயற்சிகளைச் செய்யலாம். மரம், செடி — கொடிகளிலிருந்து விழும் மகரந்தத் தாதுகூட அலர்ஜியைத் தோற்றுவிக்கும். சாப்பாட்டில் தக்காளி, எலுமிச்சம் பழம், முட்டை, கடல் உணவுகள், சாத்துக்குடி போன்றவை அலர்ஜி ஏற்படுத்தும். எனவே, எது உடலுக்கு ஒவ்வாது போகிறது என்பதைக் கண்டறிந்து, இவற்றைத் தவிர்ப்பது நல்லது. டாக்டர் ஆலோசனை பெற்று ஆன்டி — ஹிஸ்டமின் மாத்திரைகளை நீண்ட நாட்களுக்குத் தொடர்ந்து சாப்பிட்டால், ஜலதோஷம் குறையும். டாக்டர் **Skin Test for Allergy** பரிசோதனை செய்து, எதனால் அலர்ஜி உண்டாகிறது என்று கண்டறிந்து, அதற்கேற்ற சிகிச்சை அளிப்பார்.

தொகுப்பு: **எஸ். வி. என்.**





கல்கி தீபாவளி மலர் 1990

வண்ணப்படம்: தம்பையா.

பழங்கலையும் புதிய வண்ணங்களும் இணைந்தது போல் பாரம் பரியப் பெருமைகளைப் புதுமைக் கண்ணோட்டத்தில் அளிப்பது. கல்கி தீபாவளி மலர் 1990!

வனப்புமிக்க வண்ணத்தில் ஒளிப்படங்கள்:

- ஆறுபடை வீடு
- சிங்கப்பூர் — ஹாங்காங்
- ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் மகோற்சவம்
- இயற்கையின் எழிலில் இறைவனைக் காணலாம்!
- கேரளத்தில் ஒரு ராமர் கோயில்!

கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்கள்:

- கலைவாணியும் கவிஞர்களும்
- கிருஷ்ண லீலா தரங்கிணி
- சீர்காழி திருத்தலம்
- கவி மலர்

வண்ணப்படங்களில் பெரியோர்கள்:

- காஞ்சி மாமுனிவர்கள்
- முக்கூர் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மாச் சாரியார்

மற்றும்:

- கோகுலம் பக்கங்கள்
- மங்கையர் மலர்
- முதல்தரச் சிறுகதைகள்
- குறுநாவல்கள்
- நலம் தரும் கட்டுரைகள்
- நகைச்சுவைச் சிதறல்கள்

விலை ரூ. 30/-. உடனே உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளவும். அல்லது தபாலில் பெறக் கல்கி காரியாலயத்துக்கு எழுதவும். ரிஜிஸ்தர் தபால் செலவு ரூ. 8/- தனி.

மானேஜர், கல்கி, சென்னை — 32.

ஆரோக்கிய ரகசியம்:
வி. என். குமாரசாமி



24

காற்றிலும் அபாயம்; சோற்றிலும் அபாயம்!

மத்ஸ்யம் என்றால் மீன்; மத்ஸ்யாசனம் என்றால் மீனைப் போல இருக்கும் ஆசனம் என்று பெயர். ஆசன நிலை, பார்ப்பதற்கு மீனைப் போல இருப்பதாக ஒப்புக் கொண்டால் சரி; அப்படி ஒப்புக்கொள்ளாதவர்கள் கூட, இந்த ஆசனம் குணத்தில் மீனைப் போன்றதே என்பதை ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். உடலில் பிரவேசிக்கும் தொற்று நோய்க் கிருமிகளை நீக்கி, இந்த ஆசனம், உடலெனும் தடாகத்தை எப்போதும் சுத்தமாக வைத்திருக்கிறது – குளத்தின் பூச்சிகளையும் அழுக்குகளையும் மீன் கபளீகரிப்பது போல்!

தொற்று நோய்கள் பல விதங்களில் தொற்றுகின்றன. சில சருமத்தின் மூலம், சில ஆகாரம் மற்றும் குடிநீர் மூலம், வேறு சில காற்றின் மூலம்.

காற்றின் மூலமாகத் தொற்றும் வியாதிகளில் க்ஷயம் மிகவும் பயங்கரமானது. க்ஷயம் என்றால் குறைவு. க்ஷயத்தால் பிடிக்கப்பட்டவர்கள் குறைவுபட்ட மனிதர்களே. எடுக்க எடுக்கக் குறைவு படவே செய்யாத அக்ஷய பாத்திரம் என்று கேள்விப் பட்டிருப்பீர்கள். அக்ஷயம் என்பதற்கு எதிர்ப்பதம் க்ஷயம்.

க்ஷயம் உள்ள ஒருவன் விடும் மூச்சில் அக் கிருமிகள் கலந்திருக்கும். அவன் எச்சிலில் நிறைந்திருக்கும். எனவே அவர்களுடன் பழகும் போது காற்று மூலம் தொற்றலாம். அவர்கள் உபயோகித்த பாத்திரங்களை உபயோகிப்பதாலும் பிறருக்குத் தொற்றலாம்.

எத்தனையோ மருத்துவ முன்னேற்றம் இருந்தும் க்ஷயத்தை ஒழிக்க முடியவில்லை. பி.ஸி.ஜி. என்ற தடுப்பு ஊசி கண்டுபிடித்தார்கள். அதனால் நன்மையை விடத் தீமையே அதிகம் என்று அதற்கு ஏகப்பட்ட எதிர்ப்பு! எங்கும் பரவியுள்ள க்ஷயக் கிருமிகள் எல்லாரிடமும் உள்ளன. அதனை எதிர்த்து வெற்றி கொள்ளும் சக்தி உடலுக்கு இருந்தால் தப்பினோம் என்கிறார்கள். அதற்குப் புஷ்டியான ஆகாரம் சாப்பிட வேண்டும். அது மட்டும் போதாது. சாப்பிடுகிற ஆகாரம் சுத்தமாகத் தயாரிக்கப்படவும் வேண்டும்!

இன்று பல்லாயிரக்கணக்கானவர்கள் ஓட்டலில், மெஸ்ஸில் என்று சாப்பிடுகிறார்கள். இங்கெல்லாம் பாத்திரங்களை எப்படி கழுவுகிறார்கள்; எப்படி, எந்தச் சூழ்நிலையில் சமைக்கிறார்கள் என்று பார்த்தால் சாப்பாடே இறங்காது! சில வியாதியஸ்தர்களும் அந்தப் பாத்திரங்களை உபயோகித்திருக்கலாம். சரியாகக் கழுவப் படாத அந்தப் பாத்திரம் மீண்டும் இட்டிலி, சாம்பாருடன் நம் எதிரே வைக்கப்படலாம். என்ன செய்வது? பட்டினி கிடக்க முடியுமா? சாப்பிடத்தானே செய்கிறோம்? வயிற்றுப் பசியும் நாவின் ருசியும் மற்றதையெல்லாம் மறக்க அடித்து விடுகின்றன.

சாப்பிடாமலும் நீர் அருந்தாமலும் சுவாசிக்காமலும் மனிதனால் எப்படி

இருக்க முடியும்? நம் நாட்டில் இந்த மூன்றிலுமே அசுத்தங்கள்தான் நிறைந்துள்ளன. அதனால் வியாதிகள் பரவுகின்றன. நீரைக் காய்ச்சிக் குடிக்கலாம்; உணவை நன்றாக வேக வைத்துச் சாப்பிடலாம்; இதனால் கிருமிகள் மடியக்கூடும். ஆனால் காற்றை என்ன செய்வது? அசுத்தக் காற்றானாலும் சுவாசித்துத்தானே ஆக வேண்டும்? நாள் முழுவதும் கடற்கரையிலேயே காலம் கழிக்க முடியுமா என்ன?

ஜீவாதாரமான காற்றை இழுத்து நிரப்பும் நுரையீரலைத் தாக்கும் நோய் க்ஷயம்! முக்கியமாக நுரையீரல்களைத்தான் இந்த வியாதி தாக்கும் என்றாலும் இதர பல உறுப்புக்களிலும் வருவதுண்டு. 'போன் டீபி', 'கிளாண்டுலர் டீபி', என்று வகை வகையாகச் சொல்லுவார்கள்.

இலேசாய் ஜுரம், காலை மாலை நேரங்களில் வரும். இலேசாய் இருமல் ஆரம்பிக்கும். ஏதோ உஷ்ணம், கபம் என்று அலட்சியம் செய்ய, ஏகமாகக் கிருமிகள் வளர்ந்து, நுரையீரலை அரிக்கத் தொடங்கி விடும். நுரையீரல் குறைவு படும் (க்ஷயம்). வியாதி முற்றினால் கேட்கவே வேண்டாம். எக்ஸ்ரே, ஊசி, மாத்திரை, டானிக் என்று எக்கச்சக்க செலவு. செலவு ஒருபுறமிருக்க, மனச் சோர்வு, உடல் சோர்வு எல்லாம் சேர்ந்து ஆளை ஒருவழியாக்கி விடும்.

இதுபோன்ற துன்பங்கள் அனைத்துக்கும் யோகாசனம் ஓர் அரிய சஞ்சீவியாக இருக்கிறது. குறிப்பாக மத்ஸ்யாசனம் செய்து வருகிறவர்களை க்ஷயமோ இதர நுரையீரல் தொடர்பான வியாதிகளோ அண்டவே செய்யாது. உடல் பலத்துடன் மனோபலமும் பெற்று, டாக்டர்கள் உதவியில்லாமல், பணச் செலவு இல்லாமல், ஆரோக்கியம் தரும் ஆனந்தத்துடன் வாழலாம்.

'மத்ஸ்யாசனம் இதை எப்படி சாதிக்கிறது?' என்று கேட்டால், அதற்கு விஞ்ஞான பூர்வமான விளக்கம் இருக்கிறது. க்ஷயம் போன்ற வியாதிகளைப் பரப்பும் பலவித கிருமிகளும் பிராண வாயு எட்டிப் பாராத இண்டு இடுக்குகளில்தான் வாசம் செய்யும். அங்கு ஒன்று நூறாகி, நூறு பல்லாயிரம் ஆகி, பல்லாயிரம் கோடிக்கணக்கில் விருத்தியாகி அந்த உறுப்பை அரிக்கத் தொடங்கும். பிராணவாயுதான் இந்தக் கிருமிகளின் எமன். பிராண வாயு பட்டால் கிருமிகள் நசித்துப் போகும். மத்ஸ்யாசனம் செய்யும் போது, நுரையீரல் நன்கு விரிவடைந்து, அதன் சிறு பகுதி கூட பாக்கியில்லாமல் எல்லா இடங்களுக்கும் பிராண வாயு பாய்ந்து பரவுகிறது. கிருமிகள் நசித்துப் போகின்றன; அல்லது 'இந்த இடம் நமக்கு லாயக்குப்படாது' என்று டேரா தூக்கிக் கொண்டு பறந்தோடிப் போய் விடுகின்றன!

படத்தைப் பாருங்கள்! அதிலே மார்பு எப்படி உயர்ந்து விரிந்து காணப்படுகிறது என்பதைக் கவனியுங்கள். இந்த நிலையானது, நாள் முழுவதும் மேஜை முன் அமர்ந்து, குனிந்து எழுதி கூன் போட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு ஒரு மாற்று நிலை. அப்போதெல்லாம் போதிய அளவு கிடைக்காத பிராண வாயு, மத்ஸ்யாசன நிலையில் நிறையக் கிடைத்து ஈடு செய்வதால், நுரையீரல் புத்துணர்ச்சியும் புதிய சக்தியும் பெறுகிறது. காற்று, நுரையீரலின் இண்டு இடுக்குகளுக்கெல்லாம் பரவ, ஏராளமான பிராண வாயுவை நுரையீரல் கிரகித்துக் கொள்கிறது. ரத்தத்துக்கு அதனை அளிக்கிறது. ரத்தம், ஏகப்பட்ட பிராண வாயுவைச் சுமந்து கொண்டு உற்சாகத்துடன் உடலின் எல்லா உறுப்புக்களுக்கும் பாய்கிறது. ஒவ்வொரு உறுப்புக்கும் பிராண வாயு அல்லது பிராண சக்தி அபரிமிதமாகக் கிடைக்கிறது. அந்த உறுப்புக்கள் எல்லாம் புத்துயிர் பெறுவது மட்டுமல்ல, அங்கு இருக்கக்கூடிய கிருமிகளெல்லாம் இந்தப் பிராண வாயுவினால் தாக்கி அழிக்கப்படுகின்றன.

இப்போது சொல்லுங்கள், மத்ஸ்யாசனம் எவ்வளவு முக்கியமானது என்பது புரிந்திருக்குமே? இந்த அற்புதமான ஆசனத்தை எப்படிப் பழகுவது? அதனை விரிவாக அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)

படம்: உத்ரா

உதவி:
சிவானந்த யோக வேதாந்த கேந்திரம்



"என்ன மாமா, இது? 'மாலை' எல்லாம் போட்டு அமர்க்களப்படுத்திட்டீங்க?"
"அப்படியாவது ஊருக்குக் 'கிளம்பிப் போக மாட்டீங்களா'ன்னுதான், மாப்பிள்ளே...!"

— ஆர். அப்துல் சலாம்.



* தாரமங்கலம் கோவில்: முத்துமண்டபம் எங்கே?

தாரமங்கலம் தொகுதி எம். எல். ஏ. அர்ஜுனன் :

"குடிநீர் வழங்குவது எம்.எல்.ஏ. வேலை அல்ல!..."

தொகுதிப் பக்கம் போவதையே கௌரவக் குறைச்சலாக நினைக்கிறார் இந்த அ. இ. அ. தி. மு. க. எம். எல். ஏ......



துரைசாமிக் கவுண்டர்: "ஊசிக் என்ன வேலை?"

தாரமங்கலத்தில் இரண்டு கட்சிகள். 'சின்னக் கட்சி, பெரிய கட்சி' என்று பெயர். "எங்கள் நெசவாளர் சமூகத்துக்குள்ளேயே, இப்படி இரண்டு கோஷ்டிகள் செயல்படுவதுதான் பல பிரச்னைகளுக்கும் மூல காரணம்" என்று பிரச்னைகளை விளக்க ஆரம்பித்தார் டி.பி. ராஜமாணிக்கம்.

"ஆரம்பத்தில் 'தாரமங்கலம் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கம்' என்று ஒரேயொரு சங்கம்தான் இருந்தது. அதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நெசவாளர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள். சங்கமும் சங்க உறுப்பினர்களும் ஊடும் பாவும் போல் அத்தனை ஒற்றுமையாகச் செயல்பட்டதால் பிரச்

னைகளே எழவில்லை. பிறகு, எது பெரியது? சின்னக் கட்சியா, பெரிய கட்சியா? என்று பிளவுபட்ட போதுதான் எங்களூரிலேயே, 'தாரமங்கலம் திருவள்ளுவர் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கம்' என்று இரண்டாவதாக ஒரு சங்கம் முளைத்தது. பிறகென்ன.... பிரச்னைகளின் ஊர்வலம்தான்! இப்போது நெசவாளர்கள் படும் துயரம் சொல்லி மாளாது...'' என்றார் ராஜமாணிக்கம்.

அவர் சொன்னதை உறுதிப்படுத்துவது போல் பேசினார் கந்தசாமி: ''எங்கள் குடும்பமே நெசவை நம்பித்தான் இருக்கிறது. இப்போது சரிவர நூல் கிடைப்பதில்லை. அப்படியே நூல் கிடைத்தாலும் அதை நெசவு செய்து கொண்டுபோய்க் கொடுத்தால் உடனடியாகச் சங்கம் பணமும் கொடுப்பதில்லை. முன்பெல்லாம் நெசவாளர்களுக்கு உடனடியாகச் சங்கத்தால் நூல் சப்ளை செய்ய முடியவில்லையென்றாலும், நெசவாளர் குடும்பங்கள் பட்டினி கிடந்து விடப் போகிறதே என்று சங்கமே முன் பணம் கொடுக்கும்.... ம்.... அதெல்லாம் ஒரு காலம்...!''

''இதற்கு என்ன காரணம்?''

''எல்லாமே 'பர்சண்ட்டேஜ்'தான் காரணம்; ஊழல்தான் காரணம். இப்போது எங்கே போனாலும் 'எனக்கு எத்தனை பர்சண்ட் தருவாய்?' என்றுதானே கேட்கிறார்கள். அப்பறம் எதுதான் உருப்படும்?'' என்றார் தாரமங்கலம் தேர்வுநிலைப் பேரூராட்சித் தலைவர் எல்லப்ப முதலியார்.



* எல்லப்ப முதலியார்: ''தலைவராக இருந்து பயனில்லை!''

''தாரமங்கலத்திலுள்ள மூன்று துவக்கப் பள்ளிகளும் சொந்தக் கட்டடம் கூட இல்லாமல்தானே இயங்கிக் கொண்டிருக்கின்றன? நீங்கள்தானே தலைவர். ஏதாவது செய்தீர்களா?''

''தலைவராக இருந்து என்னங்க பிரயோஜனம்? அதிகாரம் சுத்தமாகக் கிடையாது. அதிகார வர்க்கமிருக்கிறதே, அது நாம் சொன்னபடி கேட்பதே இல்லை. எதைச் சொன்னாலும் செய்ய மாட்டேன் என்கிறார்கள். ஏதாவது தீர்மானம் போட்டு அனுப்பினால் அதது அந்தந்தத் தாவுலேயே (இடத்திலேயே) போய் நின்று விடுகிறது. அங்கங்கும் போய் 'பர்சண்ட்டேஜ்' தள்ளினால் தான் நடக்கும் என்கிற நிலை. என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?

''தாரமங்கலம் பஸ் நிலையத்தை நீங்களே பார்த்திருப்பீர்கள்... பஸ்நிலையம் மாதிரியா இருக்கிறது? ரொம்ப காலமாக இப்படித்தான் கிடக்கிறது. இப்போதுதான் ஏதோ மனசு வந்து உலக வங்கியின் கடன் உதவியோடு இருபது லட்சம் செலவில் புது பஸ்



* திருமதி ராஜேஸ்வரி: ''எல்லாம் வறண்டு போச்சு!''

* தாரமங்கலம் பஸ் நிலையம்: புதிதாகக் கட்டப்படுமா?





●● ஆனந்தம் அடைய இரு வழிகள் உண்டு: தேவைகளைச் சுருக்கலாம் அல்லது வரவைப் பெருக்கலாம். இவ்விரண்டில் எது சாத்தியமோ அதனை நாடுங்கள். — பெஞ்சமின் பிராங்க்ளின்.

— எஸ். முகம்மது யூசுப்.

நிலையம் கட்டப்படுமென்று சொல்கிறார்கள்.

"ஊரெல்லாம் சாக்கடை வசதியில்லாத குறை. அதைத் தீர்க்க, ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் டிச் வெட்டலாம் என்று எஸ்டிமேட்டெல்லாம் போட்டுத் தோண்டவும் ஆரம்பித்து விட்டோம். அந்த நிலையில் வந்து, 'டிச் கட்டவெல்லாம் நிதி தர முடியாது. ரோடு போடத்தான் தர முடியும்' என்றார்கள். இப்படி ஏகப்பட்ட குளறுபடிகள்.... ஆனால் ஜனங்கள் என்ன நினைக்கிறார்கள்? தலைவர் தான் எதுவும் செய்யவில்லை; அவரால்தான் எல்லாக் குளறுபடிகளும் என்கிறார்கள்..... என்ன செய்வது? நான் கும்பிடும் அந்த முருகப் பெருமானின் மேல் பாரத்தைப் போட்டு விட்டுப் பேசாமலிருக்கிறேன். வேறு வழி?"

"மற்ற பிரச்னைகள் எப்படியிருந்தாலும் தாரமங்கலத்துக்கான குடிநீர்ப் பிரச்னை, உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்னையாயிற்றே?"

"உண்மைதான். மேட்டூரிலிருந்து சேலத்துக்குச் செல்லும் குடி நீரில் நாளொன்றுக்கு முப்பதாயிரம் காலன் தாரமங்கலத்துக்கு வழங்குவதாகப் பேச்சு. ஆனால் இப்போது அப்படித் தருவதில்லை. ஒரு நாள் விட்டு ஒரு நாள்தான் தருகிறார்கள். அதுவும் கால் மணி, அரைமணி நேரம்தான் தருகிறார்கள். அதனால் தாரமங்கலத்தில் கடுமையான குடி நீர்ப் பஞ்சம்தான். சேலம் நகரசபைத் தலைவருடன் பேசினேன். அங்கும் பற்றாக்குறை தான் என்கிறார் அவர்!

"இப்போது மேட்டூரிலிருந்து ஆத்தூருக்குக் குடிநீர் கொண்டு செல்லும் திட்டத்திற்கான வேலைகள் நடந்து கொண்டுள்ளன. அதில், தாரமங்கலம், நங்கவல்லி, வனவாசி, ஜலகண்டாபுரம் ஆகிய பகுதிகள் பயனடையுமாறும் ஒரு தனித் திட்டம் உள்ளது. அது நிறைவேறும் போதுதான் பிரச்னை தீரும்..." என்றார் எல்லப்ப முதலியார்.

இவையெல்லாம் ஒரு புறமென்றால் மறுபுறம், கோயில். "எங்களூரிலுள்ள அருள்மிகு கைலாசநாதர் கோயிலைப் பற்றி நான் சொல்லவே தேவையில்லை. வெளி நாட்டவர்களையெல்லாம் கவர்ந்திழுக்கக் கூடிய அளவுக்கு நுணுக்கமான சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த கோயில். காலை ஏழரை மணிக்குத் திறக்கப்படும் இக்கோயில் மதியம் பன்னிரண்டரை மணிக்குச் சாத்தப்பட்டுவிடும். பிறகு, மாலை நான்கரை மணிக்குத்தான் திறப்பார்கள். இந்த இடைப்பட்ட நேரத்தில் வரும் பயணிகளும் பக்தர்களும், கோயில் திறக்கப்படும் வரை என்ன செய்வார்கள்? இங்கே நிழலுக்கு ஒதுங்கக் கூட இடமில்லை.

"இந்த நிலையில்தான் கோயிலுக்கு முன்பு முத்து மண்டபம் ஒன்று கட்டுவதற்காக ஆர். எம். வீ. அறநிலையத்துறை அமைச்சராக இருந்த போது வந்து அடிக்கல் நாட்டி விட்டுச் சென்றார். ஆனால், இது வரை அது என்னவாயிற்றென்றே எங்களுக்குத் தெரியவில்லை..." என்றார் ராஜமாணிக்கம்.

"உண்மைதான். முத்து மண்டபம் கட்டுவதற்காக நாற்பதாயிரம் ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டது. அதன் பிறகுதான் ஒரு கேள்விக்குறி எழுந்தது. அதாவது, ஒவ்வோர் ஆண்டும் மாசி மாதம் 9, 10, 11 ஆம் தேதிகளில் மாலைச் சூரிய ஒளி சந்நிதானத்தின் முன்புள்ள நந்தியின் கொம்புகளுக்கிடையில் நுழைந்து, கர்ப்பக்கிரகத்திலுள்ள இறைவனின் நெற்றியில் பிறை வடிவமாக விழுந்து காட்சி தரும். இந்த நிலையில் கோயிலுக்கு முன்பு முத்து மண்டபம் கட்டினால், அதன் மூலம் சூரிய ஒளிக் கீற்று இறைவனின் நெற்றியில் விழும் நிகழ்ச்சி பாதிக்கப்படலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. அதனால்தான் முத்து மண்டபத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு, வரும் பக்தர்களுக்கான ஓய்விடம் கட்டலாம் என்று தீர்மானித்திருக்கிறோம்..." என்றார்கள் கோயில் நிர்வாகத்தினர்.

சரி இந்தப் பிரச்னைகளைப் பற்றித் தொகுதி எம். எல். ஏ. வான கே. அர்ஜுனன் (அ. இ. அ. தி. மு. க. — ஜெ. அணி) என்னதான் சொல்கிறார்? கேட்போம்.

"தாரமங்கலத்தில் குடிநீர்ப் பிரச்னை இருப்பது உண்மைதான். மேட்டூரிலிருந்து ஆத்தூருக்குக் குடிநீர் கொண்டு செல்லும் திட்டம் பூர்த்தியாகும் போது, தாரமங்கலத்தில் மட்டுமல்ல; தொகுதி முழுவதிலும் சுமார் மூன்றில் ஒரு பங்கு அளவுக்குக் குடிநீர்ப் பிரச்னை தீரும் வாய்ப்புள்ளது."

"எவ்வளவு ரூபாய்ச் செலவில் அத்திட்ட வேலைகள் நடந்து கொண்டுள்ளன?"

"தெரியவில்லை."

"தாரமங்கலத்திலுள்ள நெசவாளர்களுக்குச் சரியானபடி நூல் கிடைக்கவில்லை. காரணம், கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள குளறுபடிகள்தான் என்று சொல்லப்படுகிறதே?"

"அதற்கு நான் என்ன செய்ய முடியும்? அதோடு இப்போது தாரமங்கலத்தில் கைத்

தறிகள் மிகமிகக் குறைவு. இப்போது அனைவரும் விசைத்தறிகளைத் தான் விரும்புகிறார்கள்.''

''உங்கள் கூற்றுப்படியே வைத்துக்கொண்டாலும், இருக்கிற குறைந்த கைத்தறிகளுக்கே சரிவர நூல் கிடைக்கவில்லை என்கிறார்களே?''

''இப்போது யாரும் கைத்தறித் துணியை விரும்புவதில்லை. அதனால்தான் கைத்தறிகளுக்கு நூல் கிடைப்பதில்லை. அவர்களெல்லாம் விசைத்தறிகளுக்கு மாறிவிட்டால் பிரச்னையே இருக்காது. அதற்கெல்லாம் நூல் நிறையவே கிடைக்கிறது!'' என்று, 'ரொட்டி கிடைக்காவிட்டால் என்ன, கேக் சாப்பிடுவது தானே' என்கிற மாதிரி சொன்னார் எம். எல். ஏ. அர்ஜுனன்.

''**நா**ங்களெல்லாம் பேசாமல் தோட்டம் துரவு, விடு வாசல்களையெல்லாம் விட்டு விட்டு மேட்டூருக்கே குடி போய் விடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்...'' என்றார் கதிர் செட்டிப்பட்டியைச் சேர்ந்த துரைசாமிக் கவுண்டர்.

''ஏன்?'' என்று கேட்டோம்.

''பின்னே என்னங்க... ஊர்ப் பொதுக் கிணறு வறண்டு போச்சுன்னுதான் போர் போட்டாங்க. அதுவும் வறண்டு போச்சு. பக்கத்திலிருக்கும் ஒலைப்பட்டியிலிருந்து எங்க ஊருக்குக் குடிநீர் சப்ளை செய்த கிணறும் வறண்டு போச்சு. எங்க தோட்டக் கிணறுகளிலும் தண்ணி இல்லை. இருக்கிற போர்களை ஆழப்படுத்திக் கொடுக்கச் சொல்லிப் பார்த்துட்டோம். ஒண்ணும் நடக்கலை... குடிக்கக் கூடத் தண்ணி இல்லாம் இருக்கும் போது ஊர்ல என்னங்க செய்ய முடியும்?'' என்றார் அவர்.

பஞ்சாயத்துத் தலைவர் அய்யண்ணனிடம் இது பற்றிக் கேட்டோம். ''ஆமாங்க. நானும் சொல்லிச் சொல்லிப் பார்த்திட்டேன். இதோ அதோங்கறாங்களே தவிர, போர் போட மாட்டேங்கறாங்க...'' என்றார் அவர்.

இதே மாதிரி குடிநீர்ப் பிரச்னைதான் வெள்ளாள்தோப்பூரிலும். ''ஊர்க் கிணறும் வத்திப் போச்சு. போட்டுக் கொடுத்த ஆழ் குழாய்க் கிணறும் வறண்டு போச்சு. ஏதோ பக்கத்துத் தோட்டத்துக்காரர்தான் எங்க ஊருக்கே பெரிய மனசு பண்ணி தனது சொந்தக் கிணத்தில தண்ணி எடுக்க விட்டுக்கிட்டிருக்கார்...'' என்றார் அவ்வூரைச் சேர்ந்த திருமதி. ராஜேஸ்வரி பெருமாள்.

எம். எல். ஏ. விடம் கேட்டோம்.

''எங்கள் புரட்சித் தலைவர் காலத்தில் தொப்பையாறு அணை கட்டப்பட்டது. அதன் மூலம் பல ஊர்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காகப் பல இடங்களில் மேல் நிலை நீர்த் தொட்டிகளும் கட்டப்பட்டன. இப்போதுள்ள தி. மு. க. அரசு அணையிலிருந்து குடிநீர் வழங்குவதற்கான எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. என்ன செய்வது?''

''உங்கள் தாரமங்கலம் தொகுதியில் குடிநீர்ப் பிரச்னை என்பது பெரிய பிரச்னையாக இருக்கிறது. இது அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்னை. எம். எல். ஏ. என்கிற முறையில் நீங்கள் இதற்காக என்னென்ன முயற்சிகள் எடுத்திருக்கிறீர்கள்?''

''மழை பொய்த்துப் போனதால் நிலத்தடி நீர் மிக மிக ஆழத்தில் போய் விட்டது. வானம் பொய்த்துப் போனால் எம்.எல்.ஏ. என்ன செய்ய முடியும்? குடிநீர் வழங்குகிற வேலையெல்லாம் எம். எல். ஏ. வேலையில்லை...''

''இருந்தாலும் சம்பந்தப்பட்டவர்களிடம் உங்கள் தொகுதி மக்களின் சார்பாக வாதாடலாம்; வற்புறுத்தலாமல்லவா?''

''நான் எதிர்க்கட்சி எம். எல். ஏ. அதனால் நான் என்ன சொன்னாலும்



• டி. பி. ராஜமாணிக்கம்: ''நெசவாளர் துயரம் சொல்லி மாளாது!''

எடுபடுவதில்லை. இங்குள்ள மாவட்டக் கலெக்டர் தி. மு. க. வின் மாவட்டச் செயலாளர் போல்தான் செயல்படுகிறார். உதாரணத்திற்கு 85—ம் ஆண்டு வரை பஸ் விடப்பட்ட சாலைகளுக்குத் தார் போட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால் என் தொகுதியில் அது நடக்கவில்லை. ரோடுகள் பராமரிக்கப்படாமலேயே இருப்பதால், அதையே காரணம் காட்டி, இப்போது ஓடுகிற பஸ்கள் 'கூடப் பல இடங்களில் நிறுத்தப்படவும் வாய்ப்பிருக்கிறது. என்ன சொன்னாலும் எதிர்க்கட்சிக்காரர்களின் தொகுதி என்றாலே அரசு கவனிப்பதில்லை....''

''செங்காட்டூர்ப் பக்கமுள்ள கிராமங்களிலிருந்து மாதநாய்க்கன்பட்டிக்குச் சரியான சாலை வசதி இல்லாததால், அங்கிருந்து மாதநாய்க்கன்பட்டிக்குப் படிக்க வரும் சிறுவர், சிறுமியர் மிகவும் கஷ்டப்படுவதாகச் சொன்னார்கள்...''

''அந்தப் பகுதி மக்கள் இப்படிச் சொன்னார்களா? அவர்கள் எனக்கு ஓட்டே போட



எம். எல். ஏ. அர்ஜுனன்: ''தொகுதிக்குள்ளேயே குடியிருக்க முடியாது''

வில்லை. எதற்காக நான் மட்டும் அவர்களுக்குச் செய்ய வேண்டும்?''

''நீங்களே இப்படிச் சொல்லுகிற போது, எங்கள் கட்சிக்கு வோட்டுப் போடாமல் எதிர்க் கட்சிக்கு வோட்டுப்போட்ட தொகுதி மக்களுக்கு நாங்கள் எதற்காகச்செய்ய வேண்டும் என்று ஆளுங்கட்சியினர் உங்களைப் பார்த்துச் சொல்லலாமே? அப்படிச் சொல்வதும் நியாயமாகி விடுமே! இது தவறு. அரசாங்கம் என்பது அனைவருக்கும்தான். அதே போல் தொகுதியிலுள்ள அனைவருக்கும்தான் நீங்கள் எம். எல். ஏ. உங்கள் தொகுதியைச் சுற்றிப் பார்த்துப் பலரிடமும் பேசியபோது, நீங்கள் வெற்றி பெற்ற பிறகு, தொகுதிப் பக்கமே வரவில்லை என்பதைத் தான் பெரிய குறையாகச் சொன்னார்கள். உங்களால் முடியாத காரியத்தைக் கூட நீங்கள் மக்களை நேரடியாகச் சென்று சந்தித்துச் சொன்னால் அவர்களுக்கும் ஆறுதலாக இருக்குமல்லவா?''

''என்னால் தொகுதிக்குள்ளேயே குடியிருந்து கொண்டு மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்க முடியாது. நான் சேலத்தில் தான் குடியிருப்பேன். நான் அ. இ. அ. தி. மு. க.வின் மாவட்டச் செயலாளராகவும் இருப்பதால் எனக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன. தொகுதிப் பக்கமெல்லாம் போய்க் கொண்டிருக்க முடியாது.''

''அடுத்த தேர்தலில் நீங்கள் போட்டியிடும் போது, என்ன சாதனைகளைச் செய்து முடித்ததற்காக வோட்டுப் போடச் சொல்லி மக்களிடம் கேட்பீர்கள்?''

''நான் நிறையப் பேருக்கு லோனெல்லாம் வாங்கிக் கொடுத்திருக்கிறேனே...''

''இதைப் பெரிய சாதனையாகக் கருத முடியுமா? உங்கள் தொகுதியில் தொழிற்சாலைகள் ஏதும் கிடையாது. வறட்சியால் விவசாயமும் பாதிக்கப்பட்ட நிலையில் குறைந்தபட்சம் சிறு சிறு தொழில்கள் துவங்கப்பட நீங்கள் ஏதேனும் முயற்சி எடுத்தால் பலருக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கும். உங்களுக்கும் நல்ல பெயர் கிடைக்குமே?''

''சில இடங்களில் கோரைப் பாய்கள் நெய்கிறார்களே...''

''நாங்களும் பார்த்தோம். அதெல்லாம் தனிப்பட்டவர்கள் தனிப்பட்ட முறையில் செய்து கொண்டிருப்பது. நாங்கள் சொல்வது பலரையும் ஒருங்கிணைத்துக் கூட்டுறவு முறையில் தொழில்கள் தொடங்க நீங்கள் வழிகாட்டலாமல்லவா? அல்லது வசதி படைத்தவர்களைத் தொழில் தொடங்க அழைக்கலாம் அல்லவா?''

''பெரியகாடன்பட்டியில் 38 லட்ச ரூபாயில் ஜவ்வரிசித் தொழிற்சாலை துவங்கப்பட்டது. அதற்குத் தண்ணீர் வசதியில்லாததால் மூடப்பட்டுக்கிடக்கிறது. அது திறக்கப்பட்டால் சுமார் இருநூறு பேருக்கு வேலை கிடைக்கும். ஆனால், தி. மு. க. அரசு கேட்கவில்லையே... உதாரணத்திற்கு ஒன்று. ஏற்காட்டில் தொழில்கள் துவங்க முடியுமா? ஆனால், அதைத்தான் தொழிலில் பின்தங்கிய மாவட்டமாக அறிவித்திருக்கிறது அரசு. இந்த நிலையில் என்ன செய்ய முடியும்?''

''நீங்கள் எதிர்க்கட்சி எம். எல். ஏ. என்பதால், உங்கள் தொகுதி மக்களின் நலன், வேண்டுமென்றே அரசாங்கத்தால் புறக்கணிக்கப்படுகிறது என்கிற உங்கள் கூற்றை நாங்கள் ஒப்புக் கொள்வதாகவே வைத்துக் கொள்ளுங்கள். ஆனால், நீங்கள் உங்கள் தொகுதி மக்களைச் சென்று சந்திப்பதற்கு அரசாங்கத்தின் தயவு எந்த வகையிலும் தேவையில்லையே...''


''சேலத்திலிருந்தாலும் நான் யாரையும் சந்திக்க மறுப்பதில்லையே! தேவையானால் அவர்கள் வந்து என்னைப் பார்க்கட்டுமே!''

இப்படி, தாரமங்கலம் தொகுதி எம். எல். ஏ. வான கே. அர்ஜுனனிடம் எத்தனை நேரம் நாம் வாதாடியும் அவர் வாயிலிருந்து 'நான் தொகுதிப் பக்கம் போகிறேன்' என்கிற வார்த்தையை நம்மால் வரவழைக்கவே முடியவில்லை! ஒருவேளை வெற்றி பெற்ற பிறகு, தொகுதிப் பக்கம் போய் மக்கள் குறைகளைக் கேட்பதென்பதெல்லாம் எம். எல். ஏ. என்னும் தமது தகுதிக்குக் கௌரவமானதல்ல என்று அவர் நினைக்கிறாரோ என்னவோ!

— இளங்கோவன்

வண்ணப்படங்களும், படமும்: சுபா

சிவராமனும் ஐந்து நண்பர்களும்



சிவராமனுக்கு ராஜஸ்தானில் வேலை கிடைத்தது. மொழி தெரியாத ஊர். தனிமையில் மாட்டிக் கொண்டு தவித்தான். பொழுது போக்குவதென்பது மிகவும் சிரமமான விஷயமாக இருந்தது.

அவன் தங்கியிருந்த இடத்தில் கூட பேச்சுத் துணைக்கென்று ஒருவரும் இல்லை. பெரும்பாலும் ஹிந்திக்காரர்களே தங்கியிருந்தார்கள். சாப்பாட்டு விஷயத்திலும் அந்தோ பரிதாபம். எந்த ஹோட்டலுக்குச் சென்றாலும் சுக்கா ரொட்டியே விசேஷமான ஐட்டமாகக் கொண்டு வந்து வைத்தார்கள். அவனுக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது. தினமும் வேலைக்குப் போவதும் அங்கிருந்து இயந்திரத்தனமாய் ரூமுக்குத் திரும்புவதும் சங்கடமாக இருந்தது.

கிஷன்லால் அவனுடன் வேலை பார்ப்பவன். ஆங்கிலத்தில் சரளமாய்ப் பேசுவான். கதவைத் திறந்து கொண்டு வந்தான். நண்பனைக் குசலம் விசாரித்தான்.

''என்ன சிவராம், எப்படியிருக்கிறாய்?''

''ஏதோ இருக்கிறேன். புதுசாய்ச் சொல்ல என்ன இருக்கிறது! எல்லாம் தெரிந்த கதைதானே, உட்கார்.''

நாற்காலியை இழுத்துப் போட்டான்.

கிஷன்லாலுக்கும் நண்பனின் நிலையைக் கண்டு வருத்தமாக இருந்தது.

''அடடே! நீ ரொம்பவும் நொந்து போயி

ருக்கிறாய் போலிருக்கிறது. உனக்கொரு முக்கியமான விஷயத்தைச் சொல்லவே இங்கு வந்தேன்.''

''என்ன யூனியன் விஷயமா?''

''அதில்லை. நம் தொழிற்சாலை இருக்கிறதல்லவா... அதற்கு அந்தப் பக்கமாய் ஒரு நான்கு பர்லாங் தூரத்தில் பெரிய தூண்கள் கொண்ட பழைய கட்டடம் ஒன்று இருக்கிறது. அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐந்து தமிழர்கள் தங்கியிருக்கிறார்கள்.''

சிவராமனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அதே சமயம் மகிழ்ச்சியாகவும் இருந்தது. அன்று மாலையே அந்த இடத்திற்குப் புறப்பட்டான்.

அவர்கள் முகமலர்ந்து அவனை வரவேற்றார்கள். மரியாதை கொடுத்துப் பேசினார்கள்.

''உட்காருங்க சார். நாங்க உங்களை இந்த ஊர்க்காரர்னு நினைச்சிட்டோம். நாங்க இங்கே வந்து ஆறு மாதங்கள் ஆகின்றன. அதோ தெரியுதே... அந்தக் கம்பெனியிலதான் எல்லோரும் மெக்கானிக்கா இருக்கோம்.''

சிவராமனுக்கு அவர்களது சுபாவம் பிடித்திருந்தது. ஒவ்வொருவராய்த் தங்கள் பேரையும் ஊரையும் சொல்லத் தெரிந்து கொண்டான். எல்லோருமே மணமாகாத துடிப்பான இளைஞர்களாய் இருந்தனர்.

அதில் கேசவன் என்பவன் கேட்டான், ''இங்கே உங்களுக்குப் பொழுது போறது கஷ்டமா இருக்குமே...?''

''அதை ஏன் கேட்கிறீங்க? இங்கே ஜூனியர் இன்ஜினியர் வேலைக்கு வந்து சேர்ந்து ரெண்டு மாசம் ஆயிப் போச்சு. விதியேன்னு காலத்தைத் தள்ளிக்கிட்டிருக்கேன்.''

சம்பத் என்பவன் துடுக்குத்தனமாய்க் கேட்டான்: ''கல்யாணம் ஆயிடுச்சா சார்?''

''இன்னும் இல்லை.''

''அப்ப நீங்களும் நம்ம லிஸ்டுதான்னு சொல்லுங்க. நாளைக்கு லீவுதானே உங்களுக்கு?''

''ஆமா...''

''அப்படின்னா இன்றைக்குத் தங்கிச் சாப்பிட்டுட்டு நாளைக்குப் போகலாமே?''

சங்கடத்தில் நெளிந்தான் சிவராமன்.

''இருக்கட்டும். இன்னொரு நாள் வர்றேன்.''

ஆனால் மற்ற நண்பர்கள் அவனை விடவில்லை. கட்டாயப்படுத்தினார்கள்.

''அதெல்லாம் முடியாது சார். நீங்க இன்றைக்கு இருந்து சாப்பிட்டுட்டுத்தான் போகணும்.''

அன்புத் தொல்லை அதிகமாயிற்று. அவர்களது தோரணையைப் பார்த்தால் கையைப் பிடித்து உட்கார வைத்துவிடுவார்கள் போலிருந்தது. ''சரி'' என்றான்.

இரவுச் சமையல் தடபுடலாய் இருந்தது. மிகவும் சுவைத்துச் சாப்பிட்டான். ஆண்களால் கூட இப்படியெல்லாம் சமைக்க முடியுமா என்று அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. சாப்பிட்டு முடித்ததும் நீண்ட நேரம் வரை அவர்களுடன் ஜாலியாய்ப் பேசிக் கொண்டிருந்தான்.

பிறகு அவர்கள் இவன் அறைக்கு வருவதும், இவன் அவர்களைத் தேடிப் போவதுமாக நட்பு மேலும் மேலும் வளர்ந்தது.

சில நாட்களுக்குப் பிறகு கேசவன் பதற்றத்துடன் வழியில் தோன்றினான். மூச்சு வாங்கப் பேசினான்.

''சார், ஒரு நிமிஷம். உங்களைத்தான் தேடி வர்றேன்.''

''என்ன விஷயம்?''

''நம்ம சம்பத் இல்லே... ஒரு லவ் மேட்டர்ல மாட்டிக்கிட்டான். அந்தப் பொண்ணோட அப்பா வீட்டுக்கிட்ட வந்து சத்தம் போட்டுக்கிட்டிருக்காரு. போலீஸ் ஸ்டேஷன்லே ரிப்போர்ட் கொடுக்கிறதாச் சொல்றார்.''

''சம்பத்துக்கு ஹிந்தி பேசத் தெரியுமா?''

''ஒண்ணுரெண்டுபேசுவான். எப்படியோ யார் மூலமாவோ அவளுக்கு லவ் லெட்டர் எழுதிட்டான். முதல்ல அவனை எப்படியாவது காப்பாத்தணும் சார்.''

''சரி, இதோ வந்துட்டேன். நீங்க அங்கே வெய்ட் பண்ணுங்க.''

நேரே நண்பன் கிஷன்லால் வீட்டுக்குச் சென்றான் சிவராமன். அவனிடம் நடந்ததை எடுத்துச் சொன்னான். இருவரும் உடனே அந்த இடத்திற்கு ஸ்கூட்டரில் பறந்து வந்தார்கள்.

ஒரு பெரியவர் தம் மகளுடன் வந்து அந்த ஐந்து பேர் தங்கியிருந்த வீட்டை நோக்கிச் சப்தம் போட்டுக் கொண்டிருந்தார். வேடிக்கை பார்க்க இன்னும் நான்கைந்து பேர் சேர்ந்திருந்தார்கள்.

மதுமனோ



''மேஜைக்கு மேலே லஞ்ச் பாக்ஸ் வெச்சிருக்கீங்க, சரி; அதென்ன மேஜைக் கடியில்?''

''ஹி... ஹி... அது... கிடைக்கிறதைப் போட்டு வைக்கிற 'லஞ்ச' பாக்ஸ்!''

— வேதபுரி எஸ். இரமேஷ்.

கிஷன்லால் வேகமாய் அந்தப் பெரியவரிடம் சென்று விசாரித்தான்.

பெரியவருடன் நின்றிருந்த பெண் சிவராமன் பக்கம் திரும்பியதும் அவனுக்குச் சிவுக்கென்றது.

ஒரு மாதத்திற்கு முன்பு இவன் காலாற வாக்கிங் போன இடத்தில், தோழிகளுடன் தலையில் தண்ணீர்க் குடம் ஏந்திச் சென்றவாறு அவனைக்கிண்டல்செய்தவள். அவனுக்கு வியப்பாக இருந்தது.

இவளுக்கா சம்பத் லவ் லெட்டர் எழுதினான்? இவளை லவ் பண்ணி என்ன செய்வது? கல்யாணம் செய்து கொள்ள முடியுமா? இல்லை! இது காதலில்லை. இவள் உடம்பைப் பார்த்ததால் வந்த ஆசை. சரீர இச்சை. அவர்கள் இருவரும் சற்று நேரம் பேசி முடித்ததும் பெரியவர் ஒரு தீர்மானத்துடன் மகளை அழைத்துச் சென்றார்.

''என்ன சொன்னாய் அவரிடம்?'' சிவராமன் கேட்டான்.

'''உன் நண்பனுக்கு ஹிந்தியிலெல்லாம் கடிதம் எழுத வராது. யாரோ வேண்டுமென்றே சதி செய்திருக்கிறார்கள். உன் பெண்ணைக் காதலிக்க அவனொன்றும் முட்டாளில்லை. வேண்டுமானால் நானும் உன்னுடன் போலீஸ் ஸ்டேஷன் வருகிறேன். வந்தால் உன் பெண்ணுடைய பேர்தான் கெட்டுவிடும்' என்றேன். ஆள் ஜகா வாங்கிவிட்டார். என்ன இருந்தாலும் இது போன்ற பெண்களிடம் வைத்துக் கொள்வது என்றைக்குமே வம்புதான். உன் நண்பர்களை எச்சரித்து வை.''

சிவராமன் உள்ளே சென்று, அந்த ஐவரிடமும் விஷயம் எந்த அளவுக்கு விபரீதமாய்ப் போயிருக்கிறது என்பதை விளக்கினான். இனி அவள் விஷயத்தில் தலையிடாமல் இருக்கும்படி உபதேசித்தான்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை கிஷன்லால் வந்தான். சிவராமனிடம் இயல்பாய் விசாரித்தான்.

''உன் நண்பர்கள் கூட்டம் இப்போது எப்படியிருக்கிறது?''

''எப்போதும் போலத்தான் இருக்கிறது.''

''நீ இப்போதெல்லாம் முன்பு மாதிரி இல்லை. அடிக்கடி அவர்கள் உன்னைத் தேடி வருவதும் நீ அங்கு ஏதோ பிரச்னையாய் அலைவதும் உன் பாடு ஒரே திண்டாட்டமாய் இருக்கிறது. உன்னிடம் கடன் வாங்கிச் சென்ற இருநூறு ரூபாயை மாதவன் தந்து விட்டானா?''

''இல்லை. அவன் சம்பளம் வாங்கியதும் தந்துவிடுவான்.''

''நீ முன்பு நிம்மதியாய் இருந்தாய். இப்போது அவர்களால் அடிக்கடி உனக்குத் தொல்லைதான். தனிமையில் இருந்த போது, எந்தச் சச்சரவும் சங்கடமும் இல்லாமல் எவ்வளவு அமைதியாய்க் காலத்தைத் தள்ளிக் கொண்டிருந்தாய்? இப்போது எல்லாம் மாறிவிட்டது. பெண் விவகாரத்தில் கூட அவர்கள் உன்னை இழுத்து விட்டார்கள்.''

''என்ன செய்வது கிஷன்? எல்லோருக்கும் பெண் சபலம் இருக்கத்தான் செய்கிறது. அந்தப் பெண் பார்க்கும் ஆண்களையெல்லாம் சீண்டிப் பார்க்கிறாள். தளதளவென்று உடம்பு வேறு.''

''சரி, அது இருக்கட்டும். இனி நீ அவர்களைத் தேடிச் செல்வதை நிறுத்திக் கொள். அவர்களும் உன்னைப் புரிந்து கொள்ளட்டும்.''

சிவராமன் புறப்படத் தயாரானான். பேண்ட் சட்டையை அணிந்து கொண்டு நண்பனிடம் வந்தான்.

''நான் உன்னைப் பிறகு வந்து சந்திக்கிறேன் கிஷன்.''

''இப்போது எங்கே செல்கிறாய்?''

''அந்த நண்பர்களிடம்தான். ஒரு வாரமாய் அவர்களைப் பார்க்கவில்லை.''

''நான் சொன்னதை மறந்து விட்டாயா?''

''உனக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன் கிஷன். எப்போதும் சச்சரவும் பிரச்னையும் இல்லாதது வாழ்க்கையில்லை. மனிதன் சில பிரச்னைகளையும் சிக்கல்களையும் சந்திக்கும் போதுதான் 'ஏன்' என்ற கேள்வி எழுகிறது. அதற்கான தீர்வும் காண முடிகிறது. ஜீவனுள்ள வாழ்க்கை என்பது இதுதான். தனிமையே கதியாய்க் கிடந்து, அமைதியாய் வாழ்வதில் எந்தச் சுவாரசியமும் இல்லை. மனித உணர்வுகளையும் உறவுகளையும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதுதான் நிஜமான வாழ்க்கை, அர்த்தமுள்ள வாழ்க்கை.''



புதிய
மோத்தி ஸாண்டல் சோப்பு
NEW
MOTI
LUXURY BATH SOAP
SANDAL
உங்களுக்காக . . .
உங்கள் மேனி
எழிலுக்காக
மோத்தியில் நிறைந்
திருக்கு-சந்தன குணம்
மோத்தியில் மணக்குது
சந்தனம்... சந்தனம்.
மேனி
எழிலின்
பிரதிபலிப்பு
டாடா தயாரிப்பு
CLARION/8/T/47/203 TML

சிவகாமியின்

இருபதாம் அத்தியாயம்

அஜந்தாவின் இரகசியம்!

சற்று நாம் பின்னால் சென்று, சிவகாமி மனச் சோர்வுடன் மான்குட்டியை அழைத்துக் கொண்டு, தாமரைக் குளத்தை நோக்கிப் போன பிறகு, ஆயனர் வீட்டில் என்ன நடந்தது என்பதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.

தம் அருமை மகளைப்பற்றி, புத்த பிக்ஷு சிறிது விரஸமாகப் பேசியது ஆயனருக்குப் பிடிக்கவில்லை. எனவே, பிக்ஷுவிடம் அவர் பேசுவதை நிறுத்திவிட்டு, பரஞ்சோதியைப் பார்த்து, "தம்பி! உனக்கு என்னால் ஆக வேண்டிய உதவி ஏதாவது இருந்தால் சொல்லு!" என்றார்.

"நாவுக்கரசர் மடத்தில் சேர்ந்து கல்வி பயிலும் நோக்கத்துடன் காஞ்சிக்கு வந்தேன், ஐயா! சிற்பக்கலை கற்றுக் கொள்ளும் விருப்பமும் இருக்கிறது. தங்களைக் கண்டு தங்கள் கட்டளைப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று மாமா எனக்குச் சொல்லி அனுப்பினார். ஓலையில் எல்லாம் விவரமாக எழுதியிருந்தார்" என்றான் பரஞ்சோதி.

"ஓலை என்னத்துக்கு, தம்பி? என் அருமைச் சிநேகிதருக்காக நான் எதுவும் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். நாவுக்கரசர் பெருமான் தற்சமயம் காஞ்சியில் இல்லை; ஸ்தல யாத்திரை சென்றிருக்கிறார். அதனால் என்ன! — நானே நேரில் உன்னை அழைத்துப்போய் அந்தச் சிவநேசரின் மடத்தில் சேர்த்துவிட்டு வருகிறேன். உன்னைச் சக்கரவர்த்தியிடமும் அழைத்துப்போக வேண்டும். வீரச் செய்ல் புரிந்து எங்களைக் காத்த உன்னைப் பார்த்தால், சக்கரவர்த்தி பெரிதும் சந்தோஷப்படுவார்...."

"அதுமட்டும் வேண்டாம் ஆயனரே, இந்த இளைஞனிடம் உமக்கு அபிமானம் இருந்தால்..." என்று புத்த பிக்ஷு குறுக்கிட்டார்.

"ஏன், அடிகளே?" என்று ஆயனர் வியப்புடன் கேட்டார்.

"காஞ்சி சக்கரவர்த்தியின் காராகிருகத்திலிருந்து தப்பி வந்தவர்களுக்கு என்ன தண்டனை என்று உங்களுக்குத் தெரியாதா?"

"ஏன் தெரியாது? — மரண தண்டனைதான்! இந்தக் கேள்வி எதற்காகக் கேட்கிறீர்கள் என்றுதான் தெரியவில்லை."

"இவன் சக்கரவர்த்தியிடம் சென்றால் அந்தத் தண்டனைக்கு உள்ளாகும்படி நேரிடும்!"

"சிவ சிவா! — இதென்ன சொல்கிறீர்கள்? இவன் காராகிருகத்தில் இருந்தானா? எப்போது? எதற்காக?"

"உங்களை இவன் தப்புவித்த அன்று இரவு நகரில் திக்குத்திசை தெரியாமல் அலைந்து கொண்டிருந்தான். இவனை ஒற்றன் என்பதாகச் சந்தேகித்து, நகர்க் காவலர்கள் சிறையில் அடைத்து விட்டார்கள்...."

"அடடா! அப்புறம்?"

"அன்றிரவு இவன் சிறையிலிருந்து தப்பி விட்டான்!"

"என்ன? என்ன? எப்படித் தப்பினான்?"

"கூரை வழியாக வெளியே வந்துவிட்டான்..."

ஆயனர் அதிசயத்துடன் பரஞ்சோதியைப் பார்த்த வண்ணம், "ஆகா! என் சிநேகிதருடைய மருமகன் இலேசுப்பட்டவன் இல்லைபோலிருக்கிறது! பெரிய கைகாரனாயிருக்கிறானே! அதனால் பாதகமில்லை, அடிகளே! இவனை நானே சக்கரவர்த்தியிடம் அழைத்துச் சென்று, இவனை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இவன் எங்களைப் பெரும் விபத்திலிருந்து காப்பாற்றியவன் என்று அறிந்தால் சக்கரவர்த்தி கட்டாயம் மன்னிப்பார்!" என்றார்.

"உங்களுக்காக மன்னித்துவிடுவார்; உண்மைதான்! ஆனால் இவன் உடனே

சபதம்

போர்க்களம் போகும்படி நேரிடும். பல்லவ ராஜ்யத்தில் எங்கே பார்த்தாலும் படை திரட்டுகிறார்கள் என்று தெரியுமோ, இல்லையோ?''

இதைக் கேட்ட ஆயனர் மௌனமாக யோசிக்கலானார். அதைப் பார்த்த பிக்ஷு மேலும் கூறினார்;

''ஒரு தாய்க்கு ஒரு பிள்ளையான இவனுக்குப் போர்க்களத்தில் ஏதாவது நேர்ந்துவிட்டால், பாவம், இவன் தாயார் உம்மைச் சபிப்பாள். அதுமட்டுமல்ல; தர்மசேனரின் தமக்கையைப் போல் இன்னொரு பெண் கன்னிகையாகக் காலங் கழிக்க நேரிடும்!''

ஆயனருக்குச் சுருக்கென்றது. புத்த பிக்ஷு, தம் மகளைத்தான் அவ்விதம் குறிப்பிடுகிறார் என்று அவர் எண்ணினார். ஒரு வேளை அவருடைய கூற்றில் ஏதேனும் உண்மை இருக்குமோ? சிவகாமி மூன்று நாட்களாய் ஒருவிதமாக இருப்பதற்குக் காரணம் இந்த வாலிபன்மேல் அவளுடைய மனம் சென்றதாக இருக்கலாமோ? — அப்படியிருந்தால் ஒருவிதத்தில் நல்லது தானே! சிவகாமியை எப்படியும் மணம் செய்து கொடுக்கத்தான் வேண்டுமென்றால், தம் அருமைச் சிநேகிதரின் மருமகனுக்குக் கொடுத்து, அவனைத் தம் சீடனாக்கிக் கொள்ளுதல் நல்லதல்லவா? — இவ்வாறெல்லாம் சில விநாடி நேரத்துக்குள் எண்ணியவராய் ஆயனர் பரஞ்சோதியைச் சற்று கவனமாக உற்றுப் பார்த்தார்.

அவருடைய எண்ணப் போக்கை அப்படியே தெரிந்து கொண்ட புத்த பிக்ஷு, ''இல்லை, ஆயனரே! நீங்கள் நினைப்பது போல் நடப்பதற்கில்லை. அவனுடைய மாமன் மகள் இவனுக்கென்று பிறந்து வளர்ந்து திருவெண்காட்டில் காத்துக் கொண்டிருக்கிறாள்!'' என்றார். இதைக் கேட்ட ஆயனர் புத்த பிக்ஷுவை, ''உமக்கு என் எண்ணம் எப்படித் தெரிந்தது?'' என்று கேட்கும் பாவனையில் ஒரு தடவை பார்த்துவிட்டு, மீண்டும் பரஞ்சோதியை நோக்கி, ''அப்படியா, தம்பி! உன் சிநேகிதரின் பெண்ணைக் கட்டிக் கொள்ளப் போகிறாயா?'' என்று கேட்டார்.

பரஞ்சோதி சிறிது நாணத்துடன், ''ஆம், ஐயா'' என்றான்.

புத்த சந்நியாசி மேலும் சொன்னார்: ''நாவுக்கரசர் மடத்தில் தற்போது இவனைச் சேர்ப்பதும் நல்லதில்லை. காஞ்சிக் கோட்டையை முற்றுகைக்கு ஆயத்தம் செய்து வருகிறார்கள். நாவுக்கரசர் இப்போதைக்கு மடத்துக்குத் திரும்பி வரமாட்டார். அவரைச் சோழ நாட்டுக்கு ஸ்தல யாத்திரை போகும் படியாகச் சக்கரவர்த்தியே சொல்லியனுப்பி விட்டாராம்.''

''அடிகளே! தங்களுக்கு எத்தனையோ விஷயங்கள் தெரிந்திருக்கின்றன. எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே!'' என்று ஆயனர் அடங்காத ஆச்சரியத்துடன் கூறினார்.

''நீங்கள் இந்தக் காட்டுக்குள்ளே வந்து உட்கார்ந்திருக்கிறீர்கள்; அதனால் தெரியவில்லை. நான் நாடெல்லாம் சுற்றுகிறேன். அதனால் தெரிகிறது'' என்றார் பிக்ஷு.

ஆயனர் சிறிது யோசனை செய்து, ''தம்பி, இங்கேதான் இப்படியெல்லாம் குழப்பமாயிருக்கிறதே? உன் விருப்பம் என்ன?'' என்று கேட்டார்.

''ஐயா! கல்வி கற்றுக் கொண்டு திரும்பி வருகிறேன் என்று என் ஊரில் சொல்லிவிட்டு வந்தேன். ஏதாவது ஒரு கலை பயிலாமல் திரும்பிப் போக எனக்கு விருப்பமில்லை. தங்களிடம் கல்வியும் சிற்பமும் பயில விரும்புகிறேன். கருணை கூர்ந்து என்னைத் தங்களுடைய சீடனாக அங்கீகரிக்க வேண்டும்'' என்றான்.

பரஞ்சோதியின் பணிவான பேச்சைக் கேட்டு ஆயனர் பூரித்தவராய், ''அப்படியே ஆகட்டும்! நீ இங்கேயே இருந்து என்னிடம் சிற்பக்கலை கற்றுக் கொள்!'' என்றார்.

''ஆசாரிய தட்சிணை விஷயம் என்ன? அதை முன்னாலேயே வாங்கிக் கொள்ள வேண்டும், ஆயனரே!'' என்று பிக்ஷு கூறியதும் அவர் பரிகாசமாய்ச் சொல்வதாய் எண்ணி ஆயனர் நகைத்தார்.

''நான் வேடிக்கை பேசவில்லை. உண்மையாகத்தான் சொல்லுகிறேன். பரஞ்சோதி உங்களுக்கு அளிக்க வேண்டிய குருதட்சிணை அஜந்தா சித்திர இரகசியந்தான்!'' என்று பிக்ஷு கூறினாரோ இல்லையோ, ஆயனரின் முகத்தில் ஏற்பட்ட ஆவலையும் பரபரப்பையும் பார்க்க வேண்டுமே! அந்த க்ஷணத்தில் அவர் புதிய மனிதராக மாறிவிட்டதாகத் தோன்றியது.

''அடிகளே! முன்னமே அதைப் பற்றிக்

அமரர் கல்கி



''அஜந்தா ஓவியங்கள்'' என்று நாகநந்தி சொன்னதுமே பரபரப்பு அடைகிறார் ஆயனர். அஜந்தா ஓவியங்களின் அழியா வண்ண ரகசியங்களை அறிந்து கொள்வதில்......

கேட்டேன்; தாங்கள் சொல்லவில்லை. ஆனால், இந்தப் பிள்ளைக்கும் அஜந்தா சித்திர இரகசியத்துக்கும் என்ன சம்பந்தம்? இவனால் என்ன செய்ய முடியும்?'' என்று ஆயனர் கேட்டார்.

''நாகார்ஜுன மலையிலுள்ள புத்த ஸங்கிராமத்துக்கு அந்த இரகசியம் வந்திருக்கிறது. அவ்விடத்துக்கு யாரையாவது அனுப்பி வாங்கி வரச்சொல்ல வேண்டும். உம்முடைய புதிய சீடனைப் போல் அந்தக் காரியத்துக்குத் தகுதியான ஆளைக் காண முடியாது.''

''நாகார்ஜுன மலையா? கிருஷ்ணா நதிக் கரையில் அல்லவா இருக்கிறது? வழியில் எவ்வளவோ அபாயங்கள் ஏற்படுமே?''

''அபாயங்களையெல்லாம் கடந்து போய் வரக்கூடிய வீரனாகையால்தான் பரஞ்சோதியைச் சொன்னேன். இந்தப் பிள்ளை யானைமேல் வேலை எறிந்த விதத்தைத் தான் கண்ணால் பார்த்தீரே?''

''ஆனாலும், வெகுதூரம் இருக்கிறதே? இவனால் கால்நடையாகப் போய்விட்டு வர முடியுமா?''

''முடியாது. நல்ல குதிரை ஒன்று இவனுக்கு வாங்கித் தர வேண்டும். குதிரை மட்டும் இருந்தால் ஒரு மாத காலத்தில் காரியத்தைச் சாதித்துக் கொண்டு திரும்பி விடலாம்.''

ஆயனர் மிக்க ஆவலுடன் பரஞ்சோதியைப் பார்த்து, ''தம்பி! உன்னால் முடியுமா? போய் வருகிறாயா?'' என்று கேட்டார்.

பரஞ்சோதி பரக்க விழித்த வண்ணமாய், ''ஆகட்டும் ஐயா! தங்கள் கட்டளை எதுவானாலும் நிறைவேற்றக் காத்திருக்கிறேன். ஆனால் எங்கே போக வேண்டும்... எதற்காக? என்பது ஒன்றும் எனக்குத் தெரியவில்லையே!'' என்றான்.

''உண்மைதான்! இவனுக்கு விவரம் தெரியாதல்லவா? தாங்களே சொல்லுங்கள், ஸ்வாமி!''

இவ்விதம் ஆயனர் கூற, புத்த சந்நியாசி பரஞ்சோதியைப் பார்த்துச் சொன்னார்: ''கேள், அப்பனே! வடக்கே வெகு தூரத்தில், கோதாவரி நதிக்கும் அப்பால் அஜந்தா என்ற மலை இருக்கிறது. வெகு காலத்துக்கு முன்னால் அந்த மலையைக் குடைந்து புத்த சைத்தியங்களை அமைத்திருக்கிறார்கள். அந்தச் சைத்தியங்களில் புத்த பகவானு



டைய வாழ்க்கையையும், அவருடைய பூர்வ அவதாரங்களின் மகிமையையும் விளக்கும் அற்புதமான சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. ஐந்நூறு வருடங்களுக்கு முன்னால் வரைந்த அந்த ஓவியங்கள் இன்றைக்கும் வர்ணம் அழியாமல் புதிதாய் எழுதியவை போலவே இருக்கின்றன. அந்த அற்புதச் சித்திரங்களை எழுதிய சித்திரக்கலை மேதாவிகளின் சந்ததிகள் இன்னமும் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் அஜந்தா குகையில் பழைய சித்திரங்களுக்குப் பக்கத்தில் புதிய சித்திரங்களை வரைந்து வருகிறார்கள். ஆயிரம் வருடங்கள் ஆனாலும் அழியாமலிருக்கக் கூடிய வர்ணச் சேர்க்கையின் இரகசியம் அவர்களுக்குத் தெரியும். அந்த இரகசியத்தை அறிந்து தமக்குச் சொல்ல வேண்டுமென்று ஆயனர் என்னை வெகு நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார். நானும் முயற்சி செய்து வந்தேன். அந்த இரகசிய முறையை அறிந்த அஜந்தா சித்திரக்காரர் ஒருவரை எனக்குத் தெரியும். நாகார்ஜுன மலையிலுள்ள புத்த ஸங்கிராமத்தில் இப்போது அவர் இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. நீ போனாயானால் அந்த இரகசியத்தை அவரிடம் அறிந்து கொண்டு வரலாம்.''

பிக்ஷு இவ்விதம் சொல்லி நிறுத்தியதும், ஆயனர், ''தம்பி! நீ போய் வருகிறாயா? போய் அந்த இரகசியத்தைக் கொண்டு வந்தாயானால் என் வாழ்க்கை மனோரதங்களில் ஒன்றை நிறைவேற்றியவனாவாய். ஆனால், உன்னை நான் வற்புறுத்தவில்லை!'' என்றார்.

பிக்ஷுவும் ஆயனரும் பேசி வந்த போது பரஞ்சோதி உள்ளத்தில் விதவிதமான கிளர்ச்சிகள் உண்டாகி மறைந்து வந்தன. அவை பெரும்பாலும் குதூகலக் கிளர்ச்சிகளாகத்தான் இருந்திருக்குமென்று நாம் சொல்ல வேண்டியதில்லை; நல்ல ஜாதிக் குதிரைமேல் ஏறி நெடுந்தூரம் பிரயாணம் செய்வது என்ற எண்ணமே அவனுக்கு உற்சாகத்தை உண்டாக்கிற்று; அதோடு இவ்வளவு முக்கியமான

* ...அவ்வளவு ஆர்வம் அவருக்கு. அத்தகைய அற்புத அஜந்தா ஓவியங்கள் இரண்டினை இங்கே அமரர் மணியத்தின் கைவண்ணத்தில் காண்கிறோம்.





நமது கலைச்செல்வம்

சுமார் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் பாரத நாட்டின் தக்ஷிண பாகத்தில் அதிசயமான கலை மறுமலர்ச்சி தோன்றியிருந்தது. சிற்பக்கலையும், சித்திரக்கலையும் மன்னர்களாலும் மக்களாலும் போற்றப்பட்டு அபரிமிதமான வளர்ச்சியும் இணையில்லாத மேன்மையும் அடைந்திருந்தன. மகா சிற்பிகள் பலர் நாடெங்கும் தோன்றிக் குன்றுகளைக் குடைந்து பல்லாயிரம் வருஷமானாலும் அழியாத கோயில்களை நிர்மாணித்தார்கள்; ஜீவ களை பொருந்திய கற்சிலைகளையும் காட்சிகளையும் அமைத்தார்கள்.

அத்தகைய குகைக் கோயில்களை வடக்கே எல்லோராவிலும், நாகார்ஜுன மலை என்னும் ஸ்ரீ பர்வதத்திலும், தெற்கே மாமல்லபுரம், மாமண்டூர், திருச்சிராப்பள்ளி, சிற்றன்னவாசல் முதலிய இடங்களிலுள்ள குன்றுகளிலும் இன்றைக்கும் நாம் காணலாம்.


அதே காலத்தில் தென்னாட்டில் சித்திரக் கலையும் செழித்தோங்கியிருந்தது. பல நூறு ஆண்டுகள் ஆனாலும் அழியாத வர்ணச் சேர்க்கை முறையை ஓவியக்கலை வல்லவர்கள் கண்டுபிடித்துக் கையாண்டார்கள். அந்த அழியாத வர்ணங்களைக் கொண்டு அற்புதமான உயிரோவியங்களை — ரஞ்சிவிச் சித்திரங்களை — மேற்கூறிய குகைக் கோயில்களில் தீட்டினார்கள்.

அத்தகைய பழங்காலத்துச் சித்திரங்கள் அதிகமாக அழியாமலும் மாக படாமலும் இன்றைக்கும் காணப்படும் இடங்களில் முக்கியமானது, தற்போதைய நைஜாம் ராஜ்யத்தில் உள்ள அஜந்தா மலையாகும்.

உடல் அமைப்பை உள்ளபடி சித்திரிப்பதைக் காட்டிலும், உள்ளத்தின் உணர்ச்சிகளை — மனோபாவங்களை — வெளியிடுவதையே முக்கிய நோக்கமாய்க் கொண்டவை அஜந்தா சித்திரங்கள். அந்த அஜந்தா ஓவிய முறையையே முழுமையும் தழுவிய ஓவியங்கள் தமிழ்நாட்டிலே மாமல்லபுரத்திலும் காஞ்சியிலும் ஓரளவு காணப்படுகின்றன. புதுக்கோட்டைக்கருகிலுள்ள சிற்றன்னவாசலில் அத்தகைய சித்திரங்கள் சில மிகத் தெளிவுடன் விளங்குகின்றன. இன்னும் தெற்கே, இலங்கைத் தீவில், ஸிக்ரி என்னும் இடத்திலுள்ள குன்றில், மனிதர்கள் நெருங்க முடியாத உயரத்திலுள்ள குகையில், அஜந்தா சித்திரத்தையொத்த சில சித்திரங்கள் காணப்படுகின்றன. அபூர்வச் சித்திரங்கள் எல்லாம் பெரும்பாலும் கி. பி. 550 — ஆம் வருஷத்துக்கு மேல் கி. பி. 650 ஆம் வருஷத்துக்குள்ளிட்ட நூறு வருஷ காலத்தில் தீட்டப்பட்டவையென்பது குறிப்பிடத் தக்கதாகும்.

நமது புராதனக் கலைச் செல்வங்கள் இன்றளவும் அழியாமல் நமக்குக் கிடைத்திருக்கும் சில முக்கியமான இடங்களைப் பக்கத்திலுள்ள தக்ஷிண பாரத நாட்டுப் படத்தில் காணலாம்.

"சிவகாமியின் சபத"த்தில் வரும் சில முக்கிய ஸ்தலங்கள்



ஒரு காரியத்திற்காக ஆயன மகாசிற்பியினால் ஏவப்பட்டு யாத்திரை போகிறதென்பது அவனுக்கு மிக்க பெருமை உணர்ச்சியையும் அளித்தது. எழுத்தாணியால் ஏட்டில் எழுதிக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக்காட்டிலும் இம்மாதிரி காரியந்தான் அவனுடைய இயல்புக்கு ஒத்தது என்பதை நாம் அறிவோமல்லவா?

''ஐயா! தங்களுடைய விருப்பம் எதுவோ, அதன்படி நடந்து கொள்ளுமாறு என் மாமா சொல்லியிருக்கிறார். தாங்கள் போகச் சொல்லிக் கட்டளையிட்டால் அப்படியே போய் வருகிறேன்'' என்றான்.

அப்போது நாகநந்தி அடிகள், ''தாமதிக்க நேரமில்லை, ஆயனரே! வாதாபி படைகள் காஞ்சிக்கு வருவதற்குள் இவன் போய் வந்தால் நல்லது. குதிரைக்கு என்ன ஏற்பாடு?'' என்று கேட்டார்.

''அதுஒன்றும்கஷ்டமில்லை.சக்கரவர்த்தியிடம் விண்ணப்பித்துக் குதிரை வாங்குகிறேன். அஜந்தா வர்ணச் சேர்க்கை இரகசியத்தை அறிந்து கொள்வதில் எனக்கு எவ்வளவு ஆசையோ அவ்வளவு ஆசை மகேந்திர சக்கரவர்த்திக்கும் உண்டு.''

''அப்படியானால், சக்கரவர்த்தியிடம் பிரயாண அனுமதி இலச்சினையும் வாங்கி விடுங்கள். யுத்த சமயமானதால், பரஞ்சோதி போகும் வழியில் ஏதாவது இடையூறு ஏற்படலாம்.''


''உண்மைதான், இலச்சினையும் வாங்கி விடுகிறேன்.''

''இதில் என்னைப் பற்றிப் பிரஸ்தாபிக்கவே வேண்டாம். பௌத்தசமயிகள் விஷயத்தில் சக்கரவர்த்தியின் மனோபாவந்தான் உங்களுக்குத் தெரியுமே!''

புத்த பிக்ஷு இவ்விதம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே தூரத்தில் பேரிகை முழக்கமும் சங்கநாதமும் கேட்டன.

''அடிகளே! கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வருகிறது! இதோ மகேந்திர சக்கரவர்த்தியே வருகிறார்!'' என்று குதூகலத்துடன் கூறினார் ஆயனர்.

நாகநந்தி அடிகளின் கடுகடுப்பான முகத்தில் புன்னகை தோன்றியது. அவர் சிறிது யோசித்த வண்ணமாய் அங்குமிங்கும் பார்த்தார். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவரைப் போல், ''ஆயனரே, நல்ல சகுனந்தான். இந்தச் சமயத்தில் இவ்விடம் சக்கரவர்த்தியே விஜயம் செய்வதானது நமது காரியம் ஜயமாகப் போகிறதென்பதற்கு அறிகுறி. ஆனால், நானும் பரஞ்சோதியுந்தான் இச்சமயம் பூஜை வேளையில் கரடிகளாக



அருள்வாக்கு

ஒவ்வோர் அவயவத்தாலும் ஏற்படக்கூடிய தோஷத்தைப் போக்கிக் கொள்ள, அந்த அவயவத்தாலேயே செய்யக் கூடிய புண்ய கர்மாக்கள் இருக்கின்றன. குப்பைத் தொட்டியான மனஸைச் சுத்தம் பண்ண, அந்த மனஸாலேயே த்யானம் செய்ய முடிகிறது. கண்டதைப் பேசுகிற நாக்கைச் சுத்தப்படுத்திக் கொள்ள, அந்த நாக்காலேயே பகவத் நாமாவைச் சொல்ல முடிகிறது. குயுக்தி எல்லாம் பண்ணும் மூளையைச் சுத்தமாக்கிக் கொள்ள, அந்த மூளையாலேயே தத்வ ஆராய்ச்சி பண்ண முடிகிறது. இப்படியே, இந்த சரீரத்தால் — கையாலும், காலாலும், உடம்பாலும் — எத்தனையோ தப்பு — தண்டா பண்ணுகிறோமல்லவா? அதை இந்தச் சரீரத்தாலேயேதான் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். சரீரப் பிரயாஸையாலேயே பண்ணிக் கொள்ளும் இந்தச் சுத்திதான் பொதுக்கார்யங்களான பூர்த்த தர்மங்கள் — ஸோஷல் ஸர்விஸ் — அத்தனையும். சரீரப் பிரயாஸையாலேயே இது சித்த சுத்தியையும் தரக் கூடியது. ஏனென்றால் சரீரத்தால் செய்கிற இந்தக் கார்யங்களுக்கு மூலமாகப் பரோபகாரம் என்ற எண்ணம் நம் சித்தத்தில் இருப்பதுதான்.

தயை என்பது ஒவ்வொருவர் மனஸிலும் இருக்க வேண்டிய உயர்ந்த குணம். அந்த தயைக்கு உருக்கொடுக்கும்படியான ஒரு கார்யத்தைச் சரீரத்தினாலும் அவசியம் செய்ய வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

இருக்கிறோம். எங்களைச் சக்கரவர்த்தி பார்த்து விட்டால் எல்லாக் காரியமும் கெட்டுவிடும். சக்கரவர்த்தி வந்துவிட்டுப் போகும்வரையில் நாங்கள் புத்த பகவானைச் சரணடைகிறோம். புத்த பகவானுடைய சிலையை எப்போதும் பெரிதாகச் செய்ய வேண்டுமென்று ஏற்படுத்திய மகாபுருஷர் நாகார்ஜுன பிக்ஷுவின் தீர்க்க திருஷ்டியை என்னவென்று புகழ்வது?'' என்றார்.

ஆயனர் தயங்கி, ''ஒருவேளை தெரிந்து விட்டால்...?'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது பிக்ஷு பரஞ்சோதியின் கையைப் பிடித்து அழைத்துச் சென்று புத்தர் சிலையின் பின்னால் மறைந்து கொண்டார்.

இதற்குள் குதிரைகளின் காலடிச் சப்தம் நெருங்கி விடவே, ஆயனருக்கு யோசிப்பதற்கே நேரமில்லாமல் போயிற்று. ''ஜாக்கிரதை, அடிகளே!'' என்று சொல்லிவிட்டுச் சக்கரவர்த்தியை வரவேற்பதற்காக விரைந்து வாசற்பக்கம் சென்றார்.

சக்கரவர்த்தியும் குமாரரும் விடைபெற்றுச் சென்ற பிறகு வீட்டுக்குள் நுழைந்த சிவகாமிக்கு, புத்தர் சிலைக்குப் பின்னாலிருந்து நாகநந்தியும் பரஞ்சோதியும் கிளம்பியது மிக்க வியப்பையளித்தது என்று சொன்னோம் அல்லவா? ஆனால் அதே காட்சியானது ஆயனருக்குச் சிறிதும் வியப்பையளித்திராது என்பதை மேலே கூறிய விவரங்களிலிருந்து வாசகர்கள் அறிந்து கொண்டிருப்பார்கள்.

எனினும், சிவகாமியைக் காட்டிலும் ஆயனரிடத்திலேதான் பரபரப்பு அதிகமாகக் காணப்பட்டது.

''அடிகளே! நல்ல வேளையாய்ப் போயிற்று. எப்பேர்ப்பட்ட அபாயத்திலிருந்து தப்பினோம்?'' என்றார் ஆயனர்.

''புத்த பகவானைச் சரணமாக அடைந்தவர்களுக்கு அபாயமே கிடையாது. இருக்கட்டும். அசுவமேத யாகத்தில் குதிரையை மறந்து போன கதையாக, நீரும் சக்கரவர்த்தியிடம் குதிரை கேட்க மறந்துவிட்டீரல்லவா?'' என்றார் புத்த பிக்ஷு.

''மறக்கவில்லை, அடிகளே! இந்த இடத்துக்கு வந்ததும் சக்கரவர்த்தி கூறிய வார்த்தை என்னைக் கதிகலங்கச் செய்துவிட்டது. அப்புறம் குதிரையைப் பற்றிக் கேட்க எனக்கு நா எழவில்லை!''

''ஆமாம்; சக்கரவர்த்தி இராஜாங்கத் துரோகத்துக்காக உம்மைத் தண்டிக்கப் போவதாகச் சொன்ன போது என்னைக் கூட ஒருகண நேரம் தூக்கி வாரிப் போட்டு விட்டது!''

பிக்ஷுவும் பரஞ்சோதியும் புத்தர் சிலைக்குப் பின்னாலிருந்து வெளியே வந்தவுடன், மூன்று பேரும் ஏற்கெனவே உட்கார்ந்துபேசிக்கொண்டிருந்தஇடத்துக்கு வந்து அமர்ந்தார்கள். அப்போது சிவகாமியும் அந்த இடத்துக்கு வந்து சேரவே, புத்த பிக்ஷு அவளை ஏறிட்டுப் பார்த்து விட்டு, ''சிவகாமியிடம் நீங்கள் எல்லா விவரங்களையும் சொல்ல வேண்டும். எங்களை ஏதோ பேயோ, பிசாசோ என்று அவள் சந்தேகிக்கிறாள் போலிருக்கிறது!'' என்றார்.

(தொடரும்)

பத்திரிகை ஆசிரியர்: புனை பெயர்ல துணுக்குஎழுதறஇந்தஆசாமிபோலீஸ்காரரா இருப்பார் போலிருக்கே!

உதவி ஆசிரியர்: எப்படிச் சொல்றீங்க?

பத்திரிகை ஆசிரியர்: 'மாமூல் பிரியர்'னு பேர் வெச்சுக்கிட்டிருக்காரே!

— எஸ். முகம்மது யூசுப்.





மனைவி: லல்லி, லல்லின்னு தூக்கத்தில உளறினீங்களே, என்ன?

கணவன்: புதுசா ஆபீசுக்கு வந்திருக்கிற டைப்பிஸ்ட்!

மனைவி: நல்லவேளை... பக்கத்து வீட்டு நாயோன்னு நெனச்சேன்!

— பொடுசி.

இல்லமெல்லாம் ஒளி வீசிடும்
தூய பட்டுச் சேலைகள்

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

தள்ளுபடி

20% - 40%

கோ-ஆப்டெக்ஸ்

- உங்கள் அலுவலக மூலமாக கடன் வசதியைப் பெறுங்கள்.
- அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்திற்கு வருகை தாரீர்!
- ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களிலும் விற்பனை உண்டு.



DIPR/2020/MS/90/ELEGANT



* ஜெயபாரதி: கனடாவில் உச்சி வெயில்!

உலகத் திரைப்பட விழாவில் உச்சி வெயில்

●● டைரக்டர் ஜெயபாரதியின் 'உச்சி வெயில்,' கனடா நாட்டில் நடைபெறுகின்ற உலகத் திரைப்பட விழாவுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. நபர் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரம் வீதம் ஐந்நூறு பேர்களிடம் வசூல் செய்து இந்தப் படத்தினைத் தயாரிக்கத் திட்டமிட்டிருந்தார் ஜெயபாரதி. அந்த முயற்சி கைகூடாமல் சோர்வடைந்த நேரம், ஒரு பத்திரிகையில் ஜெயபாரதியின் பேட்டியைப் படித்துவிட்டுச் சுந்தரம் என்பவர், 'நீங்கள் பணத்திற்குக் கஷ்டப்பட வேண்டாம். நானே முழுப் பணத்தையும் தருகிறேன்' என்று கூறியிருக்கிறார். சுந்தரம் வீடு வீடாகப் பால் ஊற்றி வருகின்ற பால் வியாபாரி! ஒன்றே முக்கால் மணி நேரம் ஓடக் கூடிய 'உச்சி வெயில்' ஏழு லட்ச ரூபாய் செலவில் உருவாயிற்று! இந்தப் படத்தில் நடிக்க ஸ்ரீவித்யா பணமே வாங்கவில்லை. மற்ற நடிகர்களுக்கு ஏதோ ஒப்புக்குப் பணம் கொடுத்திருக்கிறார்கள். ஹீரோ எழுபத்தி எட்டு வயது குப்புசாமி! "இந்தப் படம் டீ. வி. யில் ஒளிபரப்பானால் தயாரிப்புச் செலவு கிடைத்துவிடும்" என்கிறார் ஜெயபாரதி!

●● 'கண் சிமிட்டும் நேரம்' படத்திற்குப் பிறகு இரண்டு படங்கள் எடுத்தும் டைரக்டர் கலைவாணன் கண்ணதாசனுக்குச் சினிமா உலகம் தூரத்திலேயே இருந்தது. அதனால்தானோ என்னவோ, இப்போது 'வா அருகில் வா!' என்று ஒரு படத்தை இயக்கியுள்ளார். இந்தப் படத்தில் முக்கிய காரெக்டரே ஒரு பொம்மைதானாம்! படத்தில் ஐந்து கொலைகளைச் செய்யும் இந்தப் பொம்மையை ஸ்பெஷலாக அமெரிக்காவில் ஆர்டர் கொடுத்து வாங்கினார்களாம்! ஆக, ஹீரோ — ஹீரோயின்களை நம்புகிற காலம் போய் இனி பொம்மைகளை நம்புகிற காலமும் வரக் கூடுமோ!



* மென்மையான வாத்தியார் ரோலில்...

●● இரண்டு விஷயங்களை உடைத்துத் தவிடு பொடியாக்கிக் காட்ட வேண்டும் என்பது ராதாரவியின் ஆசை. 1. ராதா ரவி என்றாலே வில்லன் ரோலுக்குத்தான் லாயக்கு என்பதை உடைப்பது 2. எம். ஆர். ராதா குடும்பத்திற்கும் படத் தயாரிப்புத் தொழிலுக்கும் ராசியே இல்லை என்பதை நொறுக்குவது. இதற்காகவே, 'தை மாசம் பூ வாசம்' படத்தைத் தயாரித்துள்ளார் ராதா ரவி. இதில் மென்மையான சுபாவம் கொண்ட வாத்தியார் ரோலில் நடிக்கிறார்.

●● சத்ருக்கன் சின்கா முதன் முதலாகத் தமிழில் அறிமுகமாகப் போகிறார். படம்: 'உன்னை அறிந்தால்.' இது பிலிம் இன்ஸ்டிட்யூட் மாணவர்களின் கூட்டுத் தயாரிப்பு. ரொம்ப காலமாகத் தமிழ்த் திரையுலகிலிருந்தே விலகிப் போயிருந்த சுதா சந்திரன் தான் கதாநாயகி. இந்தப் படம் கொடுத்திருக்கும் தைரியத்தாலோ என்னவோ, இனி, பம்பாய் வீட்டைக் காலி செய்துவிட்டுச் சென்னைக்கே வந்து குடியேறித் தமிழில் மட்டுமே கவனம் செலுத்தப் போவதாகச் சொல்கிறார் சுதா சந்திரன்.

— எஸ். பாலு.



* இனி சென்னைக்கே வரப்போகிறார்...

தீபாவளி திருநாளில் முக்கியத்துவமும், உங்களுக்கு ஒரு வேண்டுகோளும்.



வரும் தீபாவளித் திருநாளை வெகு விமரிசையாகக் கொண்டாட இப்பத்திரிகை படிக்கும் அன்பு உள்ளங்களுக்கு சிவானந்த ஆசிரமக் குழந்தைகளும் முதியோர்களும் தங்களின் வாழ்த்துக்களை மனமுவந்து தெரிவிக்கிறார்கள். பண்டிகை நாட்களில் நிதி உள்ளவர்கள் தத்தம் நிலைமையினை அனுசரித்து விழாக்களைக் கொண்டாடுகிறார்கள். இந்தத் திருநாளில் பல்லாயிரக் கணக்கான இளம் நெஞ்சங்கள், ஆதரவற்றோர், பார்வை இழந்தோர், மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள், சிறைக்கைதிகள், முதியோர், வசதியில்லாதோர், உடல் ஊனமுற்றோர் பண்டிகையைப் பொருள் இல்லாமல் கொண்டாட இயலாதவராக இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்குத் தாங்கள் மனமுவந்து பொருளாகவோ, நிதியாகவோ, துணியாகவோ, பட்டாசுகளாகவோ கொடுத்து உதவி செய்து ஆத்ம திருப்தி அடையலாம். எந்த ஒரு பண்டிகையிலும் நம்முடைய பொருளில் சிறிதேனும் பிறருக்கு ஈந்தால், அந்தப் பண்டிகையின் மகிழ்ச்சியினையும், பிறருக்கு உதவினோம் என்ற ஆத்ம திருப்தியும் கிடைக்கப் பெற்றுப் பேரானந்தம் அடையலாம். தாங்கள் அருகிலுள்ள சேவை ஸ்தாபனத்திற்குச் சென்று உங்கள் மகிழ்ச்சியினைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.


சிவானந்த ஆசிரமத்தில் உள்ள சுமார் 300 ஆதரவற்ற குழந்தைகளும் முதியோர்களும் இத்தீபாவளித் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடப் பொதுமக்கள் மனமுவந்து உதவுமாறு வேண்டுகிறோம். இதனைப் படிக்கும் தாங்கள் தங்களுடைய காணிக்கையாக ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் தலா 1 ரூபாய் இவ்வறப்பணிக்கு அர்ப்பணம் செய்தால் இத்திருப்பணி தங்கள் ஆசியுடன் பரிபூர்ணமாக நிறைவேறும் என்பதோடு இல்லாமல், இந்நாட்டில் உள்ள அனைத்து ஆதரவற்றோரும் பயன் பெறுவர்.

பொது மக்கள் அளிக்க விரும்பும் நன்கொடைப் பணம், பொருள் எதுவாக இருந்தாலும், அக்குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். வருமான வரி விலக்கும் அளிக்கப்படும். பொதுமக்கள் தங்களால் இயன்ற உதவியைப் பணமாக அல்லது பொருட்களாக,

நிர்வாகி,
"சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்"
நெ.20, கம்பர் தெரு, கிழக்கு தாம்பரம்
சென்னை 600 059. தொலைபேசி: 401078 402354

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

போட்டிக் கதை — 3
(அறிமுக எழுத்தாளர்)



காந்திபுரம் கலகலத்துக் கொண்டிருந்தது. நடைபாதை வியாபாரிகளின் வியாபாரம் சுறுசுறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

சாதாரண நாட்களிலேயே காந்திபுரம் திருவிழாக் கோலத்துடன் காணப்படும். இப்போது அரசு பொருட்காட்சி வேறு தொடங்கியாகி விட்டதால் கேட்கவா வேண்டும் ஜனங்கள் வந்து மொய்ப்பதற்கு! எங்கு பார்த்தாலும் மக்களின் தலைகள் தான்...

கையில் வைத்திருந்த பைகள் கனத்து, கையில் வலியெடுத்தது. புறப்படும்போதே ஏதாவது காய்கறி வாங்கிக் கொண்டு வரும்படி என் மனைவி சொல்லியிருந்தாள்; வாங்கியாயிற்று. பாடப் புத்தகமும், கலர் பென்சிலும் வாங்கி வரும்படி பையன் சொல்லியிருந்ததையும் வாங்கியாகி விட்டது.

உடனே பஸ் பிடித்து மேட்டுப்பாளையம் போய், டவுன் பஸ் ஏறி சிறுமுகை போய் விட்டால், எப்படியும் நைட் ஷிப்ட் வேலைக்குப் போய் விடலாம். வேலைக்கு லீவு போட்டுக் கட்டுப்படியாகாது. எப்படியும் பல்லைக் கடித்துக் கொண்டு இந்த மாதம் முழுவதும் லீவு போடாமல் வேலைக்குப் போனால் தான் அடுத்த மாதச் செலவை எப்படியாவது சமாளிக்க முடியும்.

இந்த மாதம் இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் ஆஸ்பத்திரிக்குச் செலவழிக்க வேண்டியதாகி விட்டது. அம்மாவுக்கு வரவரக் கண் பார்வை குறைந்து கொண்டே வருகிறது. வீட்டுக்குள்ளே நடமாடுவதற்கே சங்கடப்பட வேண்டியதாகி விட்டது. கோவைக்குக் கூட்டி வந்து டாக்டரிடம் காட்டினால், 'காட்ராக்ட்' ஆபரேஷன் உடனே செய்ய வேண்டும் என்று சொல்லி விட்டார். யோசிப்பதற்கு நேரமில்லை. ஆஸ்பத்திரியில் சேர்த்து ஆபரேஷனும் செய்தாகி விட்டது. துணைக்குத் தங்கையை இருக்கும்படி செய்தாகி விட்டது.

ஆஸ்பத்திரியில் பத்து நாட்கள் இருந்தாக வேண்டும் என்று டாக்டர் சொல்லி விட்டார். ஆபரேஷனுக்கும், மருந்துச் செலவுக்குமாக எப்படியோ கஷ்டப்பட்டு இரண்டாயிரம் ரூபாயை ஏற்பாடு செய்தாயிற்று. அம்மாவுக்கும், தங்கைக்கும் தினசரி சிறுமுகையிலிருந்து சாப்பாடு கொண்டு வந்து கொடுத்து விட்டு, நேரத்திற்கு வேலைக்கும் நான் போயாக வேண்டும். எப்படியோ எட்டு நாட்களைக் கடத்தியாகி விட்டது. இன்னும் இரண்டே நாட்கள்தான். அம்மாவை ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போய் விட்டால் கவலையில்லை... சமாளித்துக் கொள்ளலாம்.



"இருநூறு ரூபாய்க்கு வெடி வாங்கி வெடிச்சேன்..."

"அதன் மூலம் காசைக் கரியாக்கியதைத் தவிர வேற என்ன சாதிச்சே?"

"ராக்கெட் மூலம் ஒரு கூரை வீட்டையே தீப்பற்றி எரிய வெச்சேனே...!"

— ஆர். ராஜேஸ்வரி.

நாக்கு வரண்டு போய் விட்டது. வயிறு கபகபவென்று பசித்தது. மத்தியானம் வீட்டிலிருந்து புறப்படும் போது அவசரமாகச் சாப்பிட்டதில் வயிறு நிறையவில்லை. தலை சுற்றுவது போலிருந்தது. சற்று நேரம் நின்று பிளாட்பார கைப்பிடிக் கம்பியில் சாய்ந்து கொண்டேன். எனக்குப் பசிக்கிறது என்று யாருக்குமே தெரியாமல், ஜாலியாகப் பேசிக் கொண்டு இளம் தம்பதிகள் உற்சாகமாகப் பேசிக் கொண்டு கடந்து போனார்கள்.

செலவு செய்தது போக, இப்போது சிறுமுகை போய்ச் சேரும் அளவிற்குப் போதிய காசு பாக்கெட்டில் இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். பஸ் ஸ்டாண்டுக்குப் போக இரண்டு ரூபாய் அதிகமிருந்தால் கௌரி சங்கரில் நுழைந்து ஒரு வாய் காப்பியாவது குடிக்கலாம்.

சட்டைப் பாக்கெட்டில் இருந்ததை வெளியே எடுத்து எண்ணிப் பார்த்தேன். ஏழு ரூபாய் அறுபது காசு இருந்தது. மனத்துக்குள் லேசான மகிழ்ச்சி எட்டிப் பார்த்தது. இங்கிருந்து மேட்டுப்பாளையத்திற்கு 3.60. அங்கிருந்து சிறுமுகைக்கு ஒரு ரூபாய். ஆக மொத்தம் நாலு ரூபாய் அறுபது காசு பஸ்ஸுக்கு போதும். அது போக மூன்று ரூபாய் அதிகம் இருக்கிறது.

என் உள்ளம் உற்சாகத்தில் குதி போட்டது. வெறும் காப்பி மட்டுமல்ல; கூடவே ஒரு வடையும் வாங்கிச் சாப்பிடலாம்! எப்படியும் எதையாவது சாப்பிட்டால்தான் ஊர் போய்ச் சேர முடியும் என்று என் கால்கள் கெஞ்சின.

கீழே வைத்திருந்த பைகளைக் குனிந்து கையில் எடுத்துக் கொண்டேன். பரபரப்

புடன் செயல்பட்டுக் கொண்டிருந்த அந்த உணவு விடுதிக்குள் உற்சாகமாக நுழைந்தேன். உட்காருவதற்கே இடம் கிடைக்காத அளவிற்குக் கூட்டம் அலைமோதியது. எப்படியோ காலியான நாற்காலி ஒன்றைப் பிடித்து உட்கார்ந்தாயிற்று.

அவசரமாகச் செயல்பட்டு, ஓடிச் சென்று **உணவு வகைகளைச் சர்வர்கள் பரிமாறிக்** கொண்டிருந்தனர். எனக்கு முன்னால் உட்கார்ந்திருந்த ஒருவருக்கு மசால் தோசை யொன்றைக் கொண்டு வந்து வைத்த சர்வர் என்னைப் பார்த்து, "உங்களுக்கு என்ன வேணும்?" என்று கேட்டார்.

"ஒரு காப்பி மட்டும் போதும்... என்று சொல்ல வாயெடுத்தேன். என்னுடைய தயக்கத்தைப் பார்த்து, அடுத்த மேஜைக்குப் **போய் விட்டார்.**

எனக்கு எதிரில் மசால் தோசையைச் சாம்பார், சட்னியில் புரட்டி எடுத்துச் சாப்பிடுபவரையே நான் பார்த்தேன். எனக்கும் மசால் தோசை சாப்பிட வேண்டும் போலிருந்தது. மசால்தோசை மூன்றுரூபாய்தான்... சாப்பிட்டால் என்ன... என் நாக்கில் எச்சில் ஊறியது. எதிரில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவரைப் பார்த்தேன். 'ஏண்டா நாய் மாதிரி என்னையே பார்க்கிறே...?' என்று **தம் கண்ணாலேயே என்னை மிரட்டி** விட்டுத் தலையைக் குனிந்து கொண்டு சாப்பிட ஆரம்பித்தார் அவர்.

சர்வர் வந்து, "என்ன சாப்பிடுறீங்க? சீக்கிரம் சொல்லுங்க..." என்று அவசரப் படுத்தினார். இனி யோசிக்க நேரமில்லை. காப்பியைக் கை விட்டு, அவசரமாக, "சூடா ஒரு மசால் தோசை கொண்டு வாப்பா..." என்றேன். சர்வர் ஏதோ முணுமுணுத்துக் கொண்டு போனார்.

நான் சுற்றிலும் பார்த்தேன். அவரவர் தட்டிலிருந்ததை எடுத்து ஆனந்தமாகச் சாப்பிடும் ஜனக் கூட்டம். எந்தக் கவலையும் இவர்களுக்குக் கிடையாது போலிருக்கிறது. என் பக்கத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் பேப்பர் படித்துக் கொண்டே சாப்பிட்டார். அந்தப் பேப்பரில் என் கண்கள் பதிந்தன. 'விலைவாசி உயர்வுக்கு எதிர்க் கட்சித் தலைவர் கண்டனம்' என்று போட்டிருந்தது. எதிரிலிருந்தவர் மசால் தோசையின் கடைசிப் பகுதியையும் சட்டினி, சாம்பாரில் தோய்த்து வாய்க்குள் போட்டுச் சுவைத்து விட்டுத் தண்ணீர் குடித்து, லேசாக ஓர் ஏப்பம் விட்டார். நான் மனத்திற்குள் நினைத்துக் கொண்டேன். 'இரு, கொஞ்சம் பொறு. நானும் உன்னை மாதிரியே மசால் தோசையைப் பிய்த்துச் சாப்பிட்டுக் காட்டுகிறேன் பார்...'

திடீரென்று மனத்திற்குள் ஒரு எண்ணம். மசால் தோசையின் விலையை ஏற்றியிருப்பார்களோ? யாரைக் கேட்பது? வெளியே போய் அங்கிருக்கும் விலைவாசி போர்டைப் பார்த்து விட்டு வரலாமா? என்ன சங்கடம் இது? சே...

"ஏன் சார், மசால் தோசை என்ன விலை...?" என்று தயக்கத்தைக் கைவிட்டு, அவசரமாக எதிரிலிருந்தவரைப் பார்த்துப் பரிதாபமாகக் கேட்டேன்.

அற்ப கரப்பான் பூச்சியை அருவருப்போடு பார்ப்பதைப் போல என்னைப் பார்த்தார் அவர். "விலை தெரியாதவனெல்லாம் மசால் தோசை சாப்பிட ஏன் வர்றீங்க...?" என்றார் அவர். "சர்வரைக் கேள், சொல்வார்..."

எனக்கு வயிற்றில் சொரேல் என்றது. ஏதோ விபரீதத்தில் நான் மாட்டிக் கொண்டு விட்டேனா...

மின்னல் வேகத்தில் விரைந்து வந்த சர்வர் என் முன்னால் சர்ரென்று தட்டைத் தள்ளினார். நான் மிகவும் ஆவலுடன் எதிர் பார்த்திருந்திருந்த மசால் தோசை பொன் முறுவலுடன், சட்டினி, சாம்பார் புடைசூழ, நான் சாப்பிடுவதற்குத் தயாராகக் காத்துக் கொண்டிருந்தது.

என்னைத் தாண்டிப் போக முயன்ற சர்வரைத் தடுத்து நிறுத்தினேன். "இந்தாப்பா, மசால் தோசை என்ன விலை...?" என்று கேட்டேன்.

"ஏன் சார், என் உயிரை வாங்கறீங்க,

லிம்கா பார்ட்டிக்கு வாங்க



லிம்கா விருந்தாளி



லிம்கா வால்கள்



லிம்கா விளையாட்டு வீரர்



லிம்கா பயணி

Limca®

RADEUS/PE/L/9-90-B-TAM

® THE REGISTERED TRADEMARK OF PARLE (EXPORTS) LTD., BOMBAY

மசால் தோசை மூணரை ரூபாய்ன்னு தெரியாதா, இதைக் கூட நான்தான் சொல்லணுமா? வெளியிலே போர்டு எழுதி வைச்சிருக்காங்களே, பார்க்கறது கிடையாதா?'' என்று அந்த சர்வர் சிடுசிடுத்தார்.

மசால் தோசை விலை மூணரை ரூபாயா? மூன்று ரூபாய் இல்லையா? நான் அதிர்ந்து போனேன். மசால் தோசைக்கு ஐம்பது பைசா அதிகம் கொடுத்தால், மேட்டுப் பாளையத்திலிருந்து சிறுமுகைக்கு நடந்து தான் போக வேண்டும். நைட் ஷிப்ட் வேலைக்கு எப்படிப் போய்ச் சேர்வது...?

யாராவது தெரிந்தவர்கள் எதிர்ப்பட்டால், ஐம்பது காசு கடன் கேட்டுப்பார்க்கலாமா...? சே, என்ன வெட்கக் கேடு?

சட்டென்று பையை எடுத்துக் கொண்டு எழுந்தேன். அவசரமாக வந்த சர்வர் பில்லை நீட்டினான்.

''வேண்டாம்பா, மசால் தோசை வேண்டாம். நான் போறேன்'' என்று சொல்லி விட்டு அவசரமாக வெளியே நடந்தேன்.

சர்வர் கூச்சல் போட்டான். ''பிடிங்க... இந்த ஆளைப் பிடிங்க..'' என்று கத்தினான். நான் ஓட்டமும் நடையுமாக வெளியே செல்ல முயன்றேன்.

சாப்பிட்டு விட்டுக் காசு கொடுக்காமல் தப்பிச் செல்பவர்களைப் பிடிப்பதற்காகவே ஆஜானுபாகுவாகப் பெரிய கிருதா மீசையுடன் முதலாளியின் மேஜையின் முன்னால் நின்று கொண்டிருந்தவன், என் சட்டைக் காலரை இழுத்துப் பிடித்தான்.

''ஏன்யா, சாப்பிட்டுட்டுக் காசு கொடுக்காம தப்பி ஓடவா பார்க்கிறே?'' என்று அவன் கோபமாக முறைத்தான்.

''நான் சாப்பிடவேயில்லை...'' என்றேன் நான்.

''பின்னே ஏன் ஓடறே...?'' என்றார் கல்லாவில் உட்கார்ந்திருந்த ஓட்டல் முதலாளி.


''மசால் தோசை மூணு ரூபாய் இருக்கும்னு நெனைச்சேன். ஆனா, மூணரை ரூபாய் ஆனது எனக்குத் தெரியாமப் போச்சு. நான் வர்றேன்...'' என்று சொல்லி விட்டு நான் வெளியே இறங்கினேன்.

''இந்த மசால் தோசையை என்னங்க செய்யறது?'' என்று முதலாளியிடம் கேட்டார், சர்வர்.

''தெருவில நிக்கற நாய்க்குத் தூக்கிப் போடுடா...'' என்றார் முதலாளி. ''பரதேசிப் பயல்களெல்லாம் சாப்பிட வந்துட்டானுக...''

'சொத்'தென்று தெருவில் வந்து விழுந்தது மசால் தோசை. அதாவது நான் சாப்பிட விரும்பிய அதே மசால் தோசை... தெரு நாய்கள் பாய்ந்து வந்து அவசரமாகத் தின்றன.

ஆனாலும், அந்த அற்புத மசால் தோசையின் மணம் என்னைக் கவர்ந்து இருந்தது.



லக்ஷ்மி அளிக்கும்
உங்கள் அழகான
தோற்றத்திற்கு ஏற்ற மாற்றம்
1910 – 1990
80
LAKSHMI MILLS
லக்ஷ்மியின் சூட்டிங் மற்றும் ஷர்ட்டிங்குகளில் கூட மாற்றம்.
லக்ஷ்மி துணித்தரங்களில் நீங்கள் சிறப்பாக தோன்றுவீர்.
இதை நீங்களும் அறிவீர்; மற்றவர்களும் அறிவார்கள்.
லக்ஷ்மி உங்களுக்குச் செய்யும் சிறப்பு இது.
கோடுகள் — கட்டங்கள் — பிளெயின்கள் எனப் பல வகையானவை.
இதைவிட வேறு என்ன வேண்டும் உங்களுக்கு?
இதோ ஒரு
மாற்றம்
லக்ஷ்மி நிறுவனத்தாரிடமிருந்து
லக்ஷ்மி மில்ஸ்.
கோயமுத்தூர்.

DDA/LM /005



COUNT DOWN — 14

மணிமாறனின் உதடுகள் புன்னகை யாக வளைந்தன.

டார்ச்சை அணைத்தான். அமீர் ஜவஹரிடமிருந்து பறித்த துப்பாக்கியைப் பாக்கெட்டிற்குள் பத்திரப்படுத்தினான். சப்தம் பற்றிய கவலையின்றி இலைகளை நசுக்கி ஜீப்புக்கு நடந்தான்.

பாகிஸ்தானுக்குத் தன் வெற்றியை உடனே தெரிவிக்க, ஜீப்பில் டிரான்ஸ்மிட்டர் அலைவரிசையைத் திட்டினான்.

'...ர்ர்ர் .....ட்ட்ட் ....ப்ப்ப்.... எனவே பாஸில்கா, சிக்கன்நேக், பதான்கோட், ஜம்மு எந்தப் பகுதியிலும் கேப்டன் மணிமாறன் எல்லையைக் கடக்கக் கூடும். கடந்து பாகிஸ்தானிற்குள் தப்பித்துவிட முயற்சி செய்யக்கூடும். இந்த எல்லைப் பகுதியில் நமது படை மும்முரமாகக் கவனித்து, கேப்டன் மணிமாறன் அந்த மாதிரியான முயற்சியில் ஈடுபட்டால் அவரைக் கைப்பற்றி உடனே ராணுவத் தலைமையகத்திற்குத் தெரிவித்தாக வேண்டும். கேப்டன் மணிமாறன்... இந்த ஒலிபரப்பை நீங்கள் கேட்டுக் கொண்டிருந்தால், உடனே சரணடைந்து விடுங்கள். எல்லையைக்கடக்க முயற்சி செய்து உயிரை இழக்க வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறீர்கள். எல்லைப்புறக் காவல் படையினருக்கு இந்திய ராணுவத் தலைமையகத்திலிருந்து முக்கிய செய்தி....'

மறுபடி,மறுபடி அந்தச் செய்தி தொடர்ந்து கொண்டிருந்தது.

மணிமாறன் வேகமாகச் சிந்தித்தான்.

அமீர் ஜவஹரை அவன் ஜெயித்து பதினைந்து நிமிடங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் அவன் எல்லையைக் கடந்து விடாதபடி இந்திய ராணுவம் செயல்பட்டு விட்டது.

ஒரு ராத்திரிக்குள் எத்தனை சம்பவங்கள்.

— அமீர் ஜவஹர் நண்பன். அவனைப் பாகிஸ்தானிற்குள் அனுப்பு.

— அமீர் ஜவஹர் நண்பன். அவனைப் பத்திரமாக இந்தியாவிற்குள் வரவேற்றுக் கொள்.

— இல்லையில்லை. அமீர் ஜவஹர் துரோகி. இங்கிருந்து முக்கியமான ரகசியத்தைத் திருடிப் போய் விட்டான். அவனை

மணிமாறன் போட்ட வேஷம்!



மடக்கு.

மனிதர்களையும், அவர்களது வஞ்சகங்களையும், தாற்காலிக வெற்றிகளையும் மண்ணில் ஆசாய்க்கிடக்கும் தோலவிகளையும் பற்றி எந்த அக்கறையும் காட்டாமல் வானம் சூரிய சவுக்காரம் போட்டு குளிக்கத் தொடங்கியிருந்தது.

வெளிச்சம்வந்துவிட்டால்மணிமாறனின் வாய்ப்புகள் குறைந்து விடும்.

மணிமாறனின் முதல் சிந்தனை. இங்கிருந்து தப்பிவிடு.

ஜீப் தன் டயர்களை மண்ணில் உழுது இளப்பியது.

மேஜர் குப்தா அசந்தர்ப்பமாக ஒரு கொட்டாவி விட்டார். வானிலிருந்து இருள் உதிர்ந்து கொண்டிருந்தது. ஜீப்பின் வெளிச்சம் பாதையைப் பிரகாசமாக்கிக் கொண்டிருந்தது.

மேஜர் குப்தாவிருந்தத் திட்டம் திருப்திகரமாய் இல்லை. பரந்த எல்லைப் பகுதியில் எந்த விள்ளலில் மணிமாறன் இருக்கக்கூடும்? உறுதியான தகவல் எதுவும் கிடையாது. குருட்டுத்தனமாய்த் துரத்து என்ற உத்தரவு அவருக்கு நம்பிக்கை தரவில்லை.

தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்ட போது அவர் மார்பின் மீது காலைத்தூக்கிப் போட்டு இறுக்கிக் கொண்ட மூன்று வயது மகளை உதறிவிட்டு வந்தது இன்னும் உறுத்தலாய் இருந்தது.

ஜீப்பை அகவாரசியமாய்ச் செலுத்தி, ஒரு மண் பாதையில் திரும்பினார். ஜீப்பின் வெளிச்சம் கொத்திக்காட்டிய காட்சி அவர் ரத்தத்தைத் துள்ள வைத்தது.

பட்டை உரியத்துவங்கிய ஒரு காட்டு மரத்தில், ராணுவ ஜீப் ஒன்று மோதியிருந்தது. அதன் மூக்கு லேசாக நசுங்கியிருந்தது. மிட்டாய்க்குத் திறந்த குழந்தை வாய் போல், ஜீப்பின் பேனட். ஸ்டியரிங்கில் ஒருவன் சீருடையுடன் கவிழ்ந்து கிடந்தான்.

குப்தா ஜீப்பை நிறுத்திய வேகத்தில் டயர்கள் நிலத்தில் இரண்டடி தேய்ந்தன.

துப்பாக்கியை உருவிக் கொண்டார். மோதி நின்ற ஜீப்பை நெருங்கினார். ஸ்டியரிங்கில் மணிமாறனின் முகம் பதிந்திருந்தது. கண்கள் அகலமாய்த் திறந்து வெறித்தன.

குப்தாவின் ரத்தம் சூடு பிடித்தது.

கண்டு பிடித்து விட்டார். மணிமாறனை அவர் கண்டு பிடித்து விட்டார். மணிமாறன் கட்டுப்பாடில்லாத வேகத்தில் ஜீப்பை ஓட்டி விபத்துக்குள்ளாகி விட்டான். செய்தியை உடனே ஒயர்லெஸில் தெரிவிக்க விரைந்தார். தன் ஜீப்பிற்குத் திரும்பும் உத்தேசத்துடன் ஓர் அடி எடுத்து வைத்தார். முதுகில் இரண்டு பூட்ஸ் கால்கள் உதைத்துத் தூக்கி

> வெற்றிகளுக்கு உத்தரவாதமில்லாத இந்த உத்தியோகத்தில், வாய்ப்பு என்பது தயாராயிருப்பவர்களுக்கு மட்டுமே உதவி புரியச் சம்மதிக்கிறது.
>
> — ஆஷ்லி மொன்டாகு.

அஞ்சனா மைக்கேல்ராஜ்

எறிந்தன.

மிகப் பழமையானதொரு தந்திரத்திற்குத் தான் பலியாகி விட்டோம் என்பது தான் பின்னந்தலையில் அடிவாங்குமுன் அவருடைய கடைசி நினைப்பாயிருந்தது.

யாராவது ஒருவர் நம்மைக் கண்டுபிடித்துத் தான் ஆக வேண்டும் என்று ஊகித்து, அந்த சந்தர்ப்பத்திற்கு ஏற்றமாதிரி திட்டமிட்டுக் காத்திருந்து, வெற்றியடைந்த மணிமாறன், தன் கையில் வைத்திருந்த ஸ்டார்ட்டிங் ஹாண்டிலை ஜீப்பில் எறிந்தான். குப்தாவின் பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்தான். அவருடைய பாக்கெட்டில் இருந்து அடையாள அட்டையை எடுத்துப் பத்திரம் செய்தான். பர்ஸைத் திறந்து அவருடைய மூன்று வயது மகளை மூடினான். அவரிடமே போட்டான்.

தான் இதுவரை ஓட்டி வந்த ஜீப்பின் இயந்திரத்தைப் பாழாக்கினான்.

மேஜர் குப்தா ஓட்டி வந்த ஜீப்பில் ஏறினான். இதை யாரும் தடுக்கப் போவதில்லை. அவனை தடுக்கப் போவதில்லை. சீறிக் கிளம்பினான்.

அச்சுதன் அந்தச் சரிவில் திரும்பியதுமே, அமீர் ஜவஹரைக் கவனித்தான்.

சூரியனின் மிருதுவான விரல்கள் அமீரைத் தடவ ஆரம்பித்திருந்தன. அச்சுதனின் நிலைத்த பார்வையில் நிலையின்மைத் தத்துவம்.

அச்சுதன் ஜீப்பிலிருந்து, வேட்டை நாய் வேகத்துடன் அமீரை நெருங்கிக் குனிந்தான்.

அமீரிடம் அசைவில்லை. கன்னங்களைத் தட்டிய போது, கண்களை மொய்த்த ஈக்கள் பறந்து அமர்ந்தன. நெஞ்சில் குத்தி உலுக்கிய போது, அவன் உடையில் இருந்த இந்தியத் தூசு பறந்தது.

அச்சுதனின் இதயத்தில் வலித்தது.

அமீர்!

உன் தங்கையிடம் நாங்கள் என்ன சொல்லப் போகிறோம்?

உன்னைப் பணயம் வைத்துச் சூதாடி இழந்து விட்டதை அவள் ஒரு புன்சிரிப்புடன் ஏற்றுக்கொண்டு விடவா போகிறாள்?

உன் இதயத்தை இரக்கமின்றித் துளைத்திருக்கும் தோட்டா இந்தியத் துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்டதுதானே என்று காறித் துப்ப மாட்டாளா?

அமீர்... ஸாரி அமீர்..

அமீரைப் புரட்டினான். அவனுடைய பாக்கெட்டுகளில் உடையின் உள்புறங்களில்

தேடினான். நம்பிக்கையில்லாமல்தான்.

ரகசியத் துப்பாக்கி அமீர் ஜவ்ஹரிடம் இல்லை.

அமீர் ஜவஹரை இரண்டு கைகளிலும் அள்ளித் தன் ஜீப்பின் பின்புறம் கிடத்தினான்.

மணிமாறன் ஜீப்பின் முன் விளக்குகளை அணைத்தான்.

காட்டுப் பகுதியும் அதன் சுற்று வட்டாரக் கிராமங்களும் அவனுக்கு உள்ளங்கை ரேகைகள் போல் பழக்கம் என்பதால், ஜீப்பை எந்தத் திசையில் செலுத்த வேண்டுமென்பதில் குழப்பம் இல்லை.

அவனுடைய குறிக்கோள் இப்போது ஜலந்தராயிருந்தது.

ஜலந்தரில் ஷர்மாவைச் சந்திக்க வேண்டும்.

டம்மித் துப்பாக்கியைப் பர்ஸனலாக நீயே திருப்பித் தர வேண்டும். அதில் அதிமுக்கியமான பாகிஸ்தானின் ரகசியம் இருக்கிறது என்று உத்தரவு வந்தபின், அந்தத் துப்பாக்கியை இந்தியர்களிடமே இழப்பது மன்னிக்க இயலாத தவறாகி விடும்.

இந்தியப் படையின் தேடுதல் எந்த வட்டத்தில் தீவிரமடைந்திருக்கும் என்று அவனால் ஊகிக்க முடிந்தது. முதல் கட்டமாய் அந்த நெருக்கடியிலிருந்து வெளியேற முடிவு செய்தான்.

ஒயர்லெஸ் கமறியது.



'மேஜர் குப்தா... மேஜர் குப்தா..

மணிமாறன் மைக்கை அதன் கொக்கியிலிருந்து விடுவித்துக் குரலைக் குழப்பி 'மேஜர் குப்தா ஹியர்' என்றான். ஜீப்பின் தொடர்ந்த பிடிவாதமான இரைச்சலில், குரலின் தெளிவு எப்படியும் சேதமுறும்.

''அமீர் ஜவஹரைக் கண்டுபிடித்து விட்டோம். கடப்பட்டிருக்கிறான். இறந்து விட்டான். மணிமாறன் துப்பாக்கியைப் பயன்படுத்தத் தயங்க மாட்டான் என்பதைக்

கவனத்தில் வையுங்கள். எனிதிங் டு ரிப்போர்ட்?''

''நோ ஸார்'' என்றான் இயந்திரத்தனமாக.

அமீர் ஜவஹரைக் கண்டெடுத்தவர்களுக்கு, மேஜர் குப்தாவைக் கண்டுபிடிக்க இன்னும் அதிக நேரமாகாது. அப்புறம் இந்த ஜீப்பும் பயனில்லாமல் போய் விடும்.

தூரத்தில் பச்சை வயல்வெளிகள், உயர்ந்த கரும்புகள், முண்டாசு கட்டிய விவசாயிகள்.

மணிமாறன் மெல்லிய விசிலுடன் கிராமத்தின் திசையில் ஜீப்பைத் திருப்பினான்.

கர்னல் அருள்தாஸின் தூக்கமிழந்த ராத்திரி முடிந்து விட்டது.

வெளியே விடிந்து விட்டது.

ஆனால் அவருக்குக் கடைசியாக வந்த செதியில், அமீர் ஜவஹரின் வாழ்க்கை அஸ்தமித்து விட்டது. மிகக் குறுகிய காலமே நெருக்கமாகியிருந்த போதிலும் அமீர் ஜவஹரின் இழப்பு அவருடைய வீட்டிற்குள் விழுந்த துக்கம் போல் தாக்கியது.

கர்னல் அருள்தாஸ் கையாலாகாத கோபத்துடன் சக்கர நாற்காலியை ஒரு திருப்புத் திருப்பினார். ஹாலின் மையத்தில் ஒரு மேஜை அமைக்கப்பட்டு, மேஜையின் மீது சதுரங்கப் பலகை அமைக்கப்பட்டு, காய்கள் வேறு வேறு கட்டங்களில் தங்களுடைய சக்திகளையும், சக்தியின்மைகளையும் தெரிவித்துக் கொண்டிருந்தன.

கர்னல் அந்தச் சதுரங்கப் பலகையின் அருகே சக்கர நாற்காலியை நிறுத்தினார். சிறிது நேரம் பலகையை உற்றுப் பார்த்தார். சதுரங்கப் பலகையில் ஒரு சிப்பாய் காய் விழுந்து கிடந்தது. அதை எடுத்து வெளியே வைத்தார். வெள்ளைக் குதிரையைத் தூக்கி மூன்று கட்டங்கள் தள்ளி வைத்தார்.

பின்வாங்கி, அந்த அறையிலிருந்து வெளிப்பட்டார். அதற்காகவே காத்திருந்தது போல் அவரிடம் கொண்டு வந்து நீட்டப்பட்ட ஆவி எழும்பும் டீயை நிராகரித்தார். இரக்கமில்லாத சேதியை செலுத்தப் போகும் டெலிபோனை எடுத்தார்.

மணிமாறன் ஜீப்பின் பிரேக்கைப் பிரயோகித்த விதத்தால், வயலோரம் நின்றிருந்த கிழவன் தூக்கிவாரிப் போட்டுத் திரும்பினான்.

மணிமாறன் சிரித்துக் கொண்டே இறங்கினான்.

''தாதா!''

''க்யா ஹை பேட்டா?''

''உன் வீடு எங்கே இருக்கிறது?''

''இங்கே சறுக்கத்தில்தான். ஏன்?''

''மணிமாறன் நூறு ரூபாய் நோட்டை இரட்டையாக மடித்து நீட்டினான். ''எனக்கு ஒரு பழைய வேட்டியும், முண்டாசும் வேண்டும். என்னைத் துரத்தும் எதிரிகளிடமிருந்து நான் மாறுவேஷத்தில் தப்பிக்க வேண்டும்.''

கிழவன் ஒரு கெட்ட வார்த்தையை உபயோகித்தான். ''அந்தப் பாகிஸ்தான் திருடர்கள் இந்தியாவிற்குள் இவ்வளவு தூரம் வந்து விட்டார்களா? என்ன தைரியம் இருந்தால் இந்திய ஜவானைத் துரத்துவார்கள்... நீ வா மகனே. நான் தருகிறேன், தோத்தியும், தலைத்துணியும். ஒரு பைசா வேண்டாம் எனக்கு..''

நெடுஞ்சாலைச் சரிவிலிருந்து விவசாயி மணிமாறன் வெளிப்பட்டான். பழுப்பு நிற வேட்டி மடிப்பிற்குள் தோட்டாக்கள் நிறைந்த துப்பாக்கி.

தலையில் கட்டிய முண்டாசிற்குள் மைக்ரோ ஃபிலிம்கள் அடக்கிய டம்மித் துப்பாக்கி. கதர்ச் சட்டைக்குள் பயணத்திற்குத் தேவையான பணம்.

வாலில் தீப்பற்றிய அனுமன் போல் புகையைக் கக்கிக் கொண்டு வந்த உயரமான லாரியைக் கை வீசி நிறுத்தினான்.

லாரியின் பின்னால் இன்னும் அட்டைப் பெட்டிகளில் போட்டு 'பேக்' செய்யப்படாத ஆப்பிள்கள் மரச்சட்டங்களின் வழியாகத் தெரிந்தன.

எட்டிப் பார்த்த கிளீனர் ஓர் ஆப்பிளைக் கடித்துக் கொண்டிருந்தான்.

அவன் முகத்தில் கேள்விக்குறி.

''லாரி ஜலந்தர் வரை போகிறதா?'' என்று கேட்டு, மணிமாறன் ஒரு இருபது ரூபாய் நோட்டை நீட்டினான்.

கதவு திறக்கப்பட்டது. மணிமாறன் டயரில் கால் வைத்து லாகவமாக ஏறினான்.

கிளீனர் அவனிடம் ஓர் ஆப்பிளை நீட்டினான். லாரி புறப்பட்டது.

சாந்தினி குளித்திருந்தாள். கூந்தல் உதறி முடிந்தாள். பச்சைப் புடைவையின் கொசுவத்தைச் சரிசெய்து கொண்டாள்.

ஒலித்த டெலிபோனைப் பார்த்தாள்.

வா... வா... வா... வா... வா... வா...

அருகில் சென்று எடுத்தாள்.

''கர்னல் அருள்தாஸ்'' என்றது மறுமுனைக் குரல்.

சாந்தினியின் உடலில் சந்தோஷ மின்சாரம் ஊடுருவியது. தானாகப் புன்னகை மலர்ந்தது.

''குட்மார்னிங் கர்னல். அண்ணன் திரும்பி விட்டார்தானே?''

(தொடரும்)

வட்டமேஜை

சிறுகதை போலவே பின்னுரை!

* குவைத்தில் அவதியுறும் இந்திய மற்றும் வெளிநாட்டவர்களின் நிலைமையை மனிதாபிமான உணர்வுடன் அனுகுமாறு தலையங்கத்தில் கூறியிருப்பது உங்களது கருத்து மட்டுமல்ல; ஒவ்வோர் இந்தியனின் பணிவான வேண்டுகோளும் ஆகும்!

புதுதில்லி — 3, ஆர். அரிகோபி.

* டெலிபோன் ஒட்டுக் கேட்ட தாகத் தம் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டை அடியோடு மறுக்காமல், ஒப்புக்கொண்டு, தன் பக்கமுள்ள உண்மைகளையும், நியாயங்களையும் எடுத்துக் கூறியிருக்கும் ஹெக்டே, உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர்.

செங்குன்றம், கே. ரமேஷ்ராம்.

* ஹெக்டேயின் மனம் திறந்த பேட்டி படித்தேன். என்னைப் போன்ற எண்ணற்ற கல்கி வாசகர்களின் சந்தேகத்தைப் போக்கும் வகையில் — நாங்கள் என்னென்ன கேள்விகளையெல்லாம் கேட்க நினைத்தோமோ அதையெல்லாம் கல்கி திருப்பிக் கேட்டு எங்களின் குழப்பத்தைப் போக்கி மனத்தெளிவை ஏற்படுத்தித் தந்து விட்டார்; பாராட்டுக்கள்!

வாலாஜாபேட்டை, எம். இராஜேந்திரன்.

* 'மத்யமர்' கதைகளை விமர்சித்த வாசகர்களுக்குச் சுருக்கமாகவும் சுவாரஸ்யமாகவும் விளக்கம் அளித்திருப்பதோடு, அவர்களுக்குப் புத்தகம் பரிசளிப்பதாகவும் அறிவித்திருக்கிற சுஜாதா, தம் வாசகர்கள் மேல் கொண்டுள்ள அன்பும் அபிமானமும் மெச்சத் தக்கது.

நெல்லிக்குப்பம், ரா. ஜோதி ராமன்.

* 'மத்யமர்' கதைகளுக்கான சுஜாதாவின் பின்னுரை கூட ஒரு சிறுகதையைப் போலவே அமைந்திருந்தது!

திருப்பத்தூர், விமலா சாயிராம்.

* "சந்தோஷப் பூங்காவில் சிறிய முள்" ஒரு சிறுகதையாகத் தோன்றவில்லை. கண் முன்னே நடக்கும் நிகழ்ச்சி போல் இருந்தது.

சீர்காழி, எஸ். ஆனந்த் ராஜ்.

அடப்பாவிகளா சிறுகதை படித்தேன். எழுத்தாளர் நாஞ்சில் முதல் கதையைப் பிரசுரிக்காமலும், விறுவிறுப்பாகவும், கொண்டு சென்ற விதம் அருமை. பாத்திரங்கள் படைக்கப்பட்ட விதம் அருமை விதும் அருமை.

வேலூர் — 9, ச. மணிவண்ணன்.

* 'உலகநாயகியைத் தாங்கி உலா வரும் பெண்கள்' கட்டுரையில் பெண்களே உலகநாயகியைத் தாங்கி உலாவருவதைப் பார்த்ததும் வீட்டில் உள்ள பெண்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டு மகிழ்ந்தனர். கட்டுரையின் முடிவில் கோவிலுக்குச் சரியான பாதை இல்லை என்று கட்டுரை ஆசிரியர் ஆனந்தி குறிப்பிட்டுள்ளதைப் படித்ததும் அந்த மகிழ்ச்சி போன இடம் தெரியவில்லை!

கும்பகோணம், டி. எஸ். சீதாராமன்.

* தெருவிலிருந்து கோவில் இருக்கும் இடமே தெரியாமல் போனாலும் அக்கோவிலைக் கண்டுபிடித்து 'உலகநாயகியைத் தாங்கி உலா வரும் பெண்கள்- நவராத்திரி சிறப்புக் கட்டுரை தயாரித்த கல்கியைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.


கடலூர் — 1, சாந்தன்.

* 'பாக்கெட்' சித்திரக்கதை மூலம், மலிவு விலை மதுவால் விளைய இருக்கும் தீமைகளை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் ரொம்பவும் நாசூக்காய்ச் சொல்லி விட்டீரே!

திருச்சி — 16, ஞானகி வைத்தன் எஸ். ராஜகோபால்.

* ஒரு வீடு இரு வாசல்' படத்தின் ஒரு டஜன் ப்ளஸ் பாயின்டுகளைக் கட்டிக்காட்டித் தாங்கள் எழுதியுள்ள விமர்சனம்! அப்படத்தினைப் போலவே புதுமையான விதத்தில் அமைந்துள்ளது. நல்ல முயற்சிகளை ஊக்குவிக்கும் நங்களின் நற்சிந்தைக்கு இந்த விமர்சனம் ஓர் எடுத்துக்காட்டு!

நரிப்பாளையம், அ. கிருஷ்ணமூர்த்தி.



* சினிமாவை வீடியோ விழுங்கு வது ஒருபுறம் இருக்கட்டும்! பிளாக் டிக்கெட் விற்பனை, ரசிகர் மன்றத் தொல்லைகள், ஒரு படம் வெற்றி பெற்றவுடன் அதே மாதிரியான கதையமைப்பு கொண்ட படங்கள் வரிசையாக வருவது — போன்றவற்றால் சாதாரண ரசிகனுக்கே கூட சினிமா மேல் வெறுப்புத் தோன்றுவதே சினிமாவை விழுங்கும் ஆயுதமாகுமே!

அரூர், மு. மதிவாணன்.

* சினிமாவை வீடியோ விழுங்குமா? — அருமையான கட்டுரை. வீடியோ பற்றி ஒரு கருத்து: முன்பெல்லாம் மதுரையில் ஹிந்திப் படம் ஓடும் தியேட்டர்களில் இந்திக்காரர்களின் முகங்களை அதிகமாகப் பார்க்க முடியும். இப்போதெல்லாம் தேடினால் கூடத் தியேட்டரில் பார்க்க முடிவதில்லை. இது பற்றி வீடியோ லைப்ரரி நடத்தி வரும் நண்பரிடம் கேட்ட போது — 'வட நாட்டில் ரிலீஸ் ஆகி ஓடிக் கொண்டிருக்கும்போதே, இங்கு அந்தக் கேஸட்டுகளும் வந்து விடுகின்றன. அவற்றை வாங்கிப் பார்த்து விடுகிறார்கள். அதே படம் ஆறு மாதம் கழித்து இங்கே ரிலீஸ் ஆகும்போது, அது அவர்களுக்குப் பழைய படமாகி விடுகிறது. பின் எப்படித் தியேட்டரில் போய்ப் பார்ப்பார்கள்?' என்றார்.

மதுரை — 1, கே. வேல்சாமி.

* நீங்கள் கேட்டவை பகுதியில் எமர்ஜென்சி நேரத்தில் முரசொலியில் வெளிவந்த கார்ட்டூனையும் அதை வரைந்த ஓவியர் செல்லப்பனையும் மறந்திருந்து பாராட்டியிருக்கிறீர்கள். பதினைந்து ஆண்டுகளுக்கு முன் மிகத் துணிச்சலுடன் வெளியிடப்பட்ட ஒரு கார்ட்டூனைச் சரியாக நினைவு கூர்ந்து பாராட்டியதன் மூலம் நீங்கள் புகழ் மலையின் உச்சிக்கே சென்று விட்டீர்கள்! இதே கார்ட்டூன் மான்செஸ்டர் கார்டியன் போன்ற பிரபல வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் அப்போது வெளியிடப்பட்டது என்பதையும் நான் பெருமையுடன் நினைவுபடுத்துகிறேன்.

நாகர்கோவில், எக்ஸ். ஏ. அந்தோணிசாமி.



26

அதிர்ஷ்ட தேவதை

கட்டடக் கலைஞரின் திட்டத்துக்கு ஏற்ப, இஞ்ஜினியர் குஞ்சிதபாதம் கட்டடத்தைக் கட்டினார். ஒய்வு பெற்ற நிபுணர் — மாலுவின் மாமா அவ்வப்போது ஆலோசனைகள் அளித்து, மேற்பார்வையும் செய்தார். சிறியதும் பெரியதுமாக மொத்தம் பதினெட்டுக் குடியிருப்புகளே கடைசியில் உருவாகி, ஒரே சமயத்தில் கிரகப்பிரவேசமும் கோலாகலத்துடன் நடந்து முடிந்தது. தன்னுடைய நீண்ட நாளைய ஆசை நிறைவேறியும் கூட ரமணியால் மனமார மகிழ்ச்சியுடன் கொண்டாட முடியவில்லை. தாத்தா அவனுக்கு ஆசை விதைகளை அள்ளிக் கொடுத்திருந்தாலும், அவை முளை விட்டு வளரக் காரணமாக இருந்தவன் ரங்கன். அந்த ரங்கன் விழாவில் கலந்து கொள்ளாமல் ஆஸ்பத்திரியில் விழுந்து கிடந்தான்.

அவன் மீண்டும் வெளிவந்த போது, ரமணி அவனை ஒரு புது மாருதியில் புது வீட்டுக்கு அழைத்து வந்தான்.

ரங்கா இப்ப எப்படி இருக்கே?''

''அமாவாசை முடிஞ்சு சந்திரன் வளர்ற மாதிரி சுகமா இருக்கேன், ரமணி சார். ஆனா இது எத்தனை நாளுக்கு? மறுபடியும் எப்ப மூச்சுத் திணருமோ, எப்ப டாக்டர் இதே ஆஸ்பத்திரியில் வந்து வைத்தியம் பார்ப்பாரோ யார் கண்டது?''

''எல்லாம் காலப்போக்கிலே சரியாப் போயிடும் ரங்கா.''

''ஏன் ரமணி சார், உங்களுக்குள்ளேயே பொய் சொல்லிக்கிட்டு என்னைச் சமாதானப்படுத்தப் பாக்கறீங்க? இது நான் உசிரோட இருக்கிற வரை குணமாக முடியாத வியாதி. அப்பப்ப டாக்டர் கடி

காரத்துக்குச் சாவி கொடுத்திட்டிருக்கார். அப்படியெல்லாம் அது ஓடுது. ஒரு நாள் அவர் சாவி கொடுத்துட்டே இருப்பார்... ஆனா ஸ்பிரிங் ஒடிஞ்சுடும். இதை விடுங்க ரமணி சார். எல்லாரும் புது வீட்டுக்கு வந்துட்டாங்களா? தாத்தா சௌகரியமா இருக்காரா... அம்மாவுக்குப் பிடிச்சிருக்கா...?''

''எல்லாரும் வந்துட்டாங்க, ரங்கா. உன் மூணு வீடுதான் இப்ப காலியாயிருக்கு. மொதல்ல ரெண்டு வீடுன்னு சொல்லி முடிவிலே மூணா வாங்கிட்டே!''

''எனக்கு வேண்டியதெல்லாம், ஒரே ஒரு வீட்ல ஒரே ஒரு ரூம்தான். அதிலே பாயும் தலைகாணியும் இருந்தாப் போதும்!'' ரங்கன் சிரிக்க முயன்றான்.

அவனுடைய அவலமான மனநிலையை மாற்றும் எண்ணத்தில் –

''இந்த மாருதி ஏதுன்னு நீ கேட்கலையே?'' என்றான் ரமணி.

''உங்க தாத்தா உங்களுக்குப் பரிசா வாங்கிக் கொடுத்த கார். மாலு அம்மா மூந்தா நாளே ஆஸ்பத்திரியில் சொல்லிட்டாங்க... ஆமாம் என்னிக்கு முகூர்த்தம்... மாலு ஏதோ சொன்னாங்க... ஆனா அந்தச் சமயம் பார்த்து நான் அசதியிலே கண்ணை மூடிட்டேன்.''

''இதே தை மாசக் கடைசியிலே, ரங்கா. மீனாட்சி கலியாண மண்டபத்திலே.''

''இங்கிலீஷ் தேதி சொல்லுங்க ரமணி சார்...''

''பிப்ரவரி பத்து – வெள்ளிக்கிழமை.''

''நான் இப்பக் கடவுளை வேண்டிக்கறதெல்லாம் ஒண்ணே ஒண்ணுதான்.''

''அது என்னன்னு எனக்குத் தெரியும், ரங்கா.''

''அப்ப சொல்லுங்க.''

''அன்னிக்கு உடம்பு திடமா இருக்கணும். ஆஸ்பத்திரியிலே இருக்கக் கூடாது.''

''கரெக்டா சொல்லிட்டீங்க, ரமணி சார்... அந்த வடிவேலு சொந்தத் தொழில் ஆரம்பிச்சுட்டானா?''

''மூந்தா நாள்... உன்னையும் அழைச்சுட்டு வரச் சொல்லியிருந்தான். ஆனா நீ...''

''சரி விடுங்க... நான் எப்பவும் புத்தியிலே ரெண்டுங்கெட்டான். இப்ப உடல் நலத்திலேயும் ரெண்டுங்கெட்டான்'' என்ற ரங்கன், விரக்தியுடன் —

''எங்க நான் இருந்து யாருக்கு என்ன புண்ணியம்? என்னாலே உங்களுக்கு, மாலு அம்மாவுக்கு, ஏன் நம்ம அம்மாவுக்கு – எல்லாருக்கும் சிரமம்தானே?'' என்றான்.

''பேசாம வா, ரங்கா. உன்னை அமெரிக்காவுக்கு அனுப்பினா பூரணமாக் குணமாகுமான்னு யோசிச்சிட்டிருக்கேன்.''

இப்போது ரங்கன் சிரித்தான்.

''அமெரிக்காவானாலும் போகிற உடம்பு இதேதான் ரமணி சார். பணம் இன்னும் எவ்வளவு பாக்கி இருக்கு?''

''கவலைப்படாதே... அஞ்சு லட்சத்துக்குக் குறைவு இல்லாம இருக்கு.''

''அதை வெளிநாட்லே கொட்ட வேணாம் சார்.''

ரமணி பதில் பேசவில்லை.

கீழே ஓர் இரண்டு அறை வீடும், முதல் மாடியில் ஒன்றும் இரண்டாம் மாடியில் ஒன்றுமாக மொத்தம் மூன்று வீடுகள் ரங்கனுக்குச் சொந்தமாயின. உடல் அசதியையும் பொருட்படுத்தாமல் அவன் மூன்று வீடுகளுக்கும் போய் வந்து கொண்டிருந்தான். மாடி ஏறும்போதெல்லாம் மார்பு வலித்தது. மூச்சு இரைத்தது. ஆனால் அவன் லட்சியம் செய்யவில்லை.

நாட்கள் ஓடின.

மெல்ல மெல்ல அவனுக்குத் தன் உடல் நிலை முற்றிலும் தேறி விட்டதாகத் தோன்றியது. ஒரு தனி குஷியும் பிறந்தது.

ரமணியின் தாத்தாவைப் பார்த்து வரலாம் என்று ஓடினான்.

தாத்தா ரமணியுடன் பேசிக் கொண்டிருந்தார்.

''ஏண்டா படவா, கிரகப்பிரவேசம் நடந்தன்னிக்கு நீ உன் மூணு அத்தைகள் மூஞ்சியையும் பார்த்தாயோ?''

''ஏன் தாத்தா கேட்கறீங்க?''

''எரிச்சலும் அசூயையும் தாண்டவமாடித்து. கிழவன் போற கிழவன்தானே, போனாப் போகட்டும்னு என்னை நமஸ்காரம் பண்ணித்துகள்.''

''இதெல்லாம் உங்க கற்பனை, தாத்தா...

''ஆளுக்கு அம்பதாயிரம்னு சொன்னேன் இல்லியா? மூணு பேருக்கும் எரிச்சல், வயத்தெரிச்சல். பிள்ளைகளுக்கு ரெண்டு லட்சத்துக்கு மேலே பெறுமான முன்ன வீடு; எங்களுக்கு அம்பதாயிரமான்னு பொருமறா... ஏன் அம்பதாயிரம்னு சுத்தணும்? அரை லட்சம்னு சொல்லப்படாதோ!''

ரமணி சிரித்தான்.

''அத்தைகளுக்கு நீங்க செஞ்ச காரியம் ஏரவஞ்சனையாப் படறது... நீங்க ஒண்ணு செய்யலாம் தாத்தா.''

''படவா நீ எனக்குப் புத்தி சொல்லப் போறியா?''

''அதெப்படி முடியும், தாத்தா? யோசனைதானே சொல்ல வர்றேன்.''

''என்னடா பெரிய யோசனை?''

பி.வி.ஆர்.

''அரையை ஒண்ணாப் பண்ணிடுங்களேன்!''

''அப்பவும் அதுகளுக்குத் திருப்தி வராதுடா...'' என்றார் தாத்தா.

பிறகு, ''அதோ ஷெல்பிலே ஒரு நீளக் கவர் இருக்கு. அதை எடு!'' என்றார்.

ரமணி எடுத்தான்.

''பிரிச்சுப் படி... உரக்கப் படிச்சுத் தொலைக்காதே... உன் சித்தப்பன் பெரியப்பன் விட்டு மனுஷா வந்து தொலையப் போறா... மனசுக்குள்ளே படிச்சுக்கோ.''

ரமணி அவசர அவசரமாகப் படித்தான்.

''என்ன தாத்தா இது...''

''நான் எப்பப் புறப்பட்டுப் போவேன்னு யார்டா கண்டா... பொறந்த அன்னிக்கே போற தேதிக்கு ரிஸர்வேஷனும் ஆயாச்சு. உன் கலியாணம் முடியற வரை இருக்கணும்னு ஓர் ஆசை...''

''உங்க விட்டையும் எல்லாப் பணத்தையும் என் பேர்ல எழுதி வைச்சிருக்கீங்களே தாத்தா...''

''என் இஷ்டம்.''

''பெரியப்பா, சித்தப்பா, பெரியம்மா, சித்தி அவங்க பிள்ளை, பெண்கள் எல்லாரும் என்னைக் கரிச்சுக் கொட்டுவாங்க, தாத்தா!''

''எல்லாத்தையும் ஒரு மூட்டையிலே போட்டுக் கட்டி சமுத்திரத்திலே எறி. நான் எழுதினா எழுதினதுதான். நீ படிச்சது நகல் தான். ஒரிஜனலை ரிஜிஸ்தர் பண்ணி, ரிஜிஸ்தார்ட்டயே டெபாசிட் பண்ணிட்டேன்'' என்று சொன்ன அவா ''இப்ப எவ்வளவுடா நம்ப ஜாயின்ட் அகெண்ட்லே பணம் இருக்கு?''

''பன்னண்டு லட்சம்.''

''கன்னாபின்னான்னு செலவழிச்சுத் தொலைக்காதே...''

''தாத்தா... இந்த உயிலை...''

''கை வைக்க மாட்டேன்! எழுதினா எழுதினதுதான்!''

''பூரா எல்லாத்தையும் அனுபவிக்க எனக்கு என்ன அருகதை இருக்கு, தாத்தா?''

''நீ சின்ன வயசிலேர்ந்தே எங்கிட்டேர்ந்து எதையும் எதிர்பார்க்காம, தாத்தா, தாத்தான்னு உசிரை விட்டிருக்கேடா, படவா... பிறத்தியார் காசுக்கு நீ என்னிக்குமே ஆசைப்படலேடா, ராஸ்கல்.''

ரமணியின் கண்கள் கனத்தன. தாத்தா தம் உணர்ச்சிகளை உள்ளடக்கிக் கொண்டு கத்துகிறார் என்பதை மட்டும் அவன் புரிந்து கொண்டான்.

''ரமணி சார் இங்கேதான் இருக்கீங்களா?''

ரங்கன் பிரவேசித்தான்.

''யார்டா, ரங்கனா... நீ எப்படா புகுந்த விடு போய்த் திரும்பினே?'' என்றார் தாத்தா.

''ஆஸ்பத்திரியைச் சொல்றார்'' என்றான் ரமணி, ரங்கன் விழிப்பதைக் கண்டு.

''நாலு நாள் முன்னாடி ஐயா.''

''உன் தலைவிதி... லட்சம் லட்சமாப் பணம் இருந்தும் அனுபவிக்க முடியலே, பார்த்தியா..''

''நாம ஆசைப்பட்டதைக் கொடுத்த கடவுள், நாம ஆசையே படாததையும் கொடுக்கிறார்னு இப்பத்தான் புரிஞ்சுக்கிட்டேன், ஐயா!'' என்றான் ரங்கன்.

''அப்ப உனக்கும் ஞானம் பிறந்தாச்சுன்னு சொல்லு.''

''ஐயா சௌகரியமா இருக்கீங்களான்னு விசாரிக்க வந்தேன்.''

''உன் சௌக்கியத்தை விசாரிக்க எட்டுப் பேர் ஆஸ்பத்திரிக்கு வர வேண்டியிருக்கு. நீ என்னை விசாரிக்க வந்திருக்கியாக்கும்.''

''இப்ப நான் திடமா இருக்கேன், ஐயா.. உங்க காலைப் பிடிச்சு விடட்டுமா?''

''உன் புத்தி போகாதே... இப்ப நீ ஒரு லட்சாதிபதிடா... மூணு வீட்டுக்குச் சொந்தக்காரன்டா!''

''அது வேறே, இது வேறே!'' என்றான் ரங்கன். பிறகு, ''அடடா, ரமணி சார் எங்கே? சொல்லிக்காமப் போயிட்டாரே'' என்றான்.

''அம்மாவைப் பார்க்கப் போயிருப்பான்!''

''ஐயா!''

''என்னடா!''

''ரமணி சாருக்குக் கலியாணம் நடக்கப் போவுது. அவர் எனக்கு மனுஷ தெய்வமா இருக்கார். நான் எதனாச்சும் செய்யணும்!''

''செய்யேன்.''

''நீங்க உதவி செய்யணும்.''

''என்ன உதவி?''

''டாக்டர் திருமலை வூடு தெரியும். ஆனா நல்ல வக்கீல் வூடு எங்கேயிருக்குன்னு தெரியாது.''

''எதுக்குடா உனக்கு வக்கீல்?''

''தேவைப்படுது.''

''அனந்தராமன்னு பக்கத்திலே இருக்கார். நம்ப பால்பூத் இருக்கு இல்லியா? அதுக்கு நேர் எதிர்த்தாப்பல இருக்கு. நான் அனுப்பினேன்னு சொல்லு. உனக்கு வேண்டியதைச் செய்து தருவார்.''

''சரி, ஐயா... நான் வரேன் ஐயா...!'' என்ற ரங்கன், ''நான் வக்கீல் பத்தி விசாரிச்சது ரமணி சாருக்கு இப்பத் தெரிய வேணாம்!'' என்றான்.

''எனக்கு இதான் தொழில்னு நினைச்சியா கழுதே!'' என்றார் தாத்தா.

முகூர்த்தம் நல்லபடியாக நடந்தேறியது: தாத்தா, அப்பா, அம்மா இன்னும் மற்ற


உங்கள் பால்காரர் இரவு 10 மணிக்கு பால் கொண்டு தருவாரா?



என் பால்காரர் தருவார்

உங்கள் மகன் இரவு வெகுநேரம் படிக்க விரும்புகிறான். அவனுக்கு காப்பி வேண்டும். பாட்டியோ இரவு சாப்பாட்டுக்குப் பதிலாக பால் வேண்டும் என்கிறார். அந்த நேரத்தில் எங்கு சென்று பால் வாங்குவீர்கள்? அமுல் மில்க் பவுடர் கைவசம் வீட்டில் வைத்திருங்கள். கவலையே இருக்காது. பால் தாமதமாக வராது. தீர்ந்து போகாது. திரிந்தும் போகாது.

அமுல் மில்க் பவுடர் கொண்டு தூய்மையான, ஆடை நிறைந்த பாலை நொடியில் தயாரித்து விடலாம். அப்படியே அருந்தலாம். தேனீர், காப்பி, தயிர், மோர், பாயசம், கஸ்டர்ட், கேக், ரஸகுல்லா... எது வேண்டுமோ தயாரிக்கலாம்.



அமுல் மில்க் பவுடர்

RADEUS/AMP/1-88-TAM

வீட்டினுள் இயங்கும் ஒரு பால்பண்ணை.

விற்பனைக்கு விடுப்போர் : குஜராத் கோ. ஆப்பரேடிவ் மில்க் மார்கெடிங் ஃபெடரேஷன் லிட்., ஆனந்த் 388 001

OPERATION FLOOD

பெரியவர்களிடமெல்லாம் ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டபின், ''இப்ப நீயும் நானும் இதே மாலையும் கழுத்துமா ரங்கனைப் பார்க்கப் போகிறோம்!'' என்றான் ரமணி.

''நானும் இதையேதான் நினைச்சேன்!''

''சரி, வா...''

''படவா, எங்கேடா போறே?'' என்று தாத்தா கேட்டார்.

''ரங்கனைப் பார்த்துட்டு வர்றோம், தாத்தா!''

''சீக்கிரம் வந்து சேரு. நீ வந்தப்புறம்தான் எனக்குச் சாப்பாடு.''

ஆஸ்பத்திரியை அடைந்த போது காலை மணி பதினொன்று.

ரங்கன் கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்திருந்தான்.

''ரங்கா!''

''ரமணி சார்... ரமணி சார்.''

''அழாதே ரங்கா!''

''நீங்க தாலி கட்டறப்ப நான் இல்லாமப் போயிட்டேனே ரமணி சார்!''

''இதுக்காக சின்னக் குழந்தை மாதிரி அழலாமா... இப்ப எங்க ரெண்டு பேரையும் பாரு. மாலையும் கழுத்துமா ஸ்பெஷலா உன்னைப் பார்க்கணும்னு வந்திருக்கோம். மத்தவங்க எங்களை வேடிக்கை பார்க்கறதையும் லட்சியம் செய்யாம வந்திருக்கோம்... எங்க ரெண்டு பேரையும் நீ இப்ப வாழ்த்தணும்!''

பொலபொலவென்று கண்களிலிருந்து நீர் கொட்ட, ரங்கன், ''எனக்கு என்ன சொல்றதுன்னு புரியலே சார்... ஆனா ஒண்ணு, நான் என்னென்னிக்கும் உங்க ரெண்டு பேர் மனசிலேயும் இருக்கணும்!'' என்றான்.

''இருப்பே!''

''நிச்சயமா இருப்பே!'' — மாலு.

''உங்க கலியாணப் பரிசை நான் என்னிக்கோ தயார் பண்ணிட்டேன்!'' — சொன்ன ரங்கன் தலையணைக் கடியிலிருந்து, ஒரு நீண்ட உறையை எடுத்தான்.

மாதம் ஒரு தொகுதி



திருவாடானைத் தொகுதியைச் சுற்றிப் பார்க்க வருகிறோம்!

'மாதம் ஒரு தொகுதி' என்ற கல்கியின் திட்டத்தின் கீழ் நடந்த ஒன்பதாவது குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தொகுதி, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருவாடானை தொகுதி.

இத் தொகுதியில் தமக்கு அடுத்தபடியாக வாக்குகள் பெற்ற தி. மு. க. வேட்பாளரை விட 1,850 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றிருப்பவர் இ. காங்கிரஸைச் சேர்ந்த கே. இராமசாமி அம்பலம்.

திருவாடானைத் தொகுதி மக்கள் எந்த நம்பிக்கையோடு கே. இராமசாமி அம்பலத்தைத் தேர்ந்தெடுத்தார்களோ, அந்த நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில், கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறாரா அல்லது மறந்து போய் விட்டாரா?

திருவாடானைத் தொகுதியைச் சேர்ந்த அனைவரும் தங்கள் எம். எல். ஏ.வான கே. இராமசாமி அம்பலத்திடம் கேட்க நினைக்கும் அத்தனை கேள்விகளையும் எங்களுக்கு எழுதியனுப்பலாம். தொகுதிக்கு அவர் செய்யும் வளர்ச்சிப் பணிகள் ஏதேனும் இருந்தால் அவற்றையும், கூடவே தொகுதியின் வளர்ச்சிக்கான தங்கள் ஆலோசனைகளையும் எழுதலாம்.


திருவாடானைத் தொகுதி வாக்காளர்களே, நீங்கள் எழுதும் ஒவ்வொரு விஷயத்தையும் எம். எல். ஏ. இராமசாமி அம்பலத்திடம் எடுத்துச் சொல்லி விவாதிப்போம். தொகுதியை நேரடியாக வந்து சுற்றிப் பார்த்தும் உண்மைகளை ஆராய்வோம்.

கடைசியாக எங்கள் அனுபவங்களையெல்லாம் ஒன்று சேர்த்துக் கல்கியில், கட்டுரையாக வெளியிடுவோம்.

திருவாடானைத் தொகுதியிலுள்ள வாசகர்களின் கடிதங்கள் கல்கி அலுவலகத்துக்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 27.10.90.

உறையின் மேல் 'மாதம் ஒரு தொகுதி' என்று மறவாமல் குறிப்பிட்டு உடனடியாக எழுதியனுப்புங்கள்.

— ஆசிரியர்.


வாழ்க்கையில்
சில நல்ல வழக்கங்கள்
மாறுவதில்லை.
பண்டிகைக்காலங்களுக்கு
ராசி
பட்டுப்
புடவைகள்
ராதா சில்க்
எம்போரியம்
1, சன்னதித் தெரு,
மயிலாப்பூர், சென்னை-600004.

இருவரிடமும் நீட்ட அவர்கள் வாங்கிக் கொண்டார்கள்.

''என்ன இது, ரங்கா!''

''மாலு அம்மாகிட்டக் கேளுங்க. அவங்களுக்குத் தெரியும்.''

திடீரென்று டாக்டர் திருமலை பிரவேசித்தார்.

''ரமணி, சாயங்காலம் ரிசப்ஷனுக்கு வரேன்... என் ரங்கா உட்கார்ந்துட்டே... படுத்துக்கணும். பேசப்படாது...''

''சரி டாக்டர்.''

எல்லோரும் வெளியே வந்தார்கள்.

''என்ன டாக்டர், இப்படியாயிடுத்தே!''

''அப்படித்தான் ஆகும்... விடு. ஆஸ்பத்திரின்னு மாத்தி மாத்திப் போய் வந்துட்டிருப்பான்'' என்றார் டாக்டர்.

''இது மாதிரி எவ்வளவு காலத்துக்கு?''

''உசிர் போற வரைக்கும்!''

''என்ன டாக்டர்....''

''ஒரு வருஷம். மிஞ்சினா பதினெட்டு மாசம்...''

''கவலையா இருக்கு டாக்டர்.''

''இப்பத்தான் தாலியைக் கட்டியிருக்கே... ஃபர்ஸ்ட் நைட்டை நெனைச்சுட்டு ஓடு... யார்தான் சாகாம சாசுவதமா இருக்கா...? போனா, இவனுக்குத்தான் விடுதலை.''

இருவரும் கலியாண மண்டபத்துக்குத் திரும்பினார்கள்.

''மாலு... இதுக்குள்ளே என்ன இருக்குன்னு எனக்குத் தெரியும்!''

''என்ன?''

''உயில்!''

''கரெக்ட்!''

''எல்லாம் என் பெயருக்குத்தானே?''

''கரெக்ட்.''

''ரங்கன் உசிரோட இருக்கிற வரைக்கும் இருக்கட்டும். ஒரு நாள் அவன் போயிடுவான்.. அந்த நாள் பொறக்கறப்ப நம்ப கண்லே கண்ணீர் வரப்படாது. மனசார அஞ்சலி செய்துட்டு, அவன் சொத்தை நல்ல வழியில் அவன் பெயர்லேயே செலவு செய்வோம்...''

''அதைப் பத்தி இப்ப என்ன யோசனை, ரமணி! அவனோட பணத்திலே நயாபைசா நீங்க கை வைச்சதில்லே... அவன் போனாலும் உங்க குணம் மாறாது...''

''மாறணும்னு சொல்றியா?''

''மாறிட்டா அப்புறம் நீங்களும் ஒரு சாதாரண மனுஷன்தானே... நான் இப்ப ஒரு சாதாரண மனுஷனுக்கா மனைவியாயிருக்கேன்?'' என்றாள் மாலு.

ரமணி மௌனமானான்.

கழுத்து மாலையை விட மனத்தில் மாலையாக விழுந்து விட்ட ரங்கன் கனமாகத் தோன்றினான்.

(நிறைவு பெற்றது)

"கோட்டை விட்டார்கள்!"

"போட்டோ பிடித்தார்கள்!"

சுமித்ராவை அடித்துப் போட்டுவிட்டு வில்லன்கள் சத்யராஜுடன் சண்டை போடுகிறார்கள். அடுத்த காட்சியிலேயே சுமித்ரா மண்டையில் கட்டுடன் வருகிறார். மகனை வில்லன்கள் அடித்துக் கொண்டிருக்கும் போது எந்தத் தாய் தனக்கு பாண்டேஜ் போட்டுக் கொண்டிருப்பாள்?

— இப்படிப்பட்ட பொருத்தமில்லாக் காட்சிகளை இனம் கண்டு, "கோட்டை விட்டார்கள்!" என்ற தலைப்பில் இதே ஐந்தாறு வரி அளவில் மாணவர்கள் எழுதி அனுப்பலாமே என்ற யோசனையை வழங்குகிறவர் கல்கி வாசகர் கும்பகோணம், ஆர். வசந்தகுமார்.

முடிவு தேதி: 13.10.90.

போட்டோகிராஃபர்களை ஊக்குவிப்பது இங்கே குறைவாக உள்ளது. சிறப்பான, வேடிக்கையான, அபூர்வமான காட்சிகளைப் படம் பிடித்து அதற்கு ஓரிரு வரிகள் கமெண்ட்டும் எழுதி அனுப்பும் மாணவர்களுக்குப் பரிசு வழங்கலாமே என்று யோசனை கூறுகிறவர் கல்கி வாசகர் கடையநல்லூர் கணேசன்.


முடிவு தேதி: 15.12.90.

(கல்லூரி விலாசம் குறிப்பிடவும்.)

வாசகர் யோசனைகளுக்குப் பரிசு அனுப்பப்படுகிறது. மாணவர்களுக்கும் முதல் பரிசும் ஆறுதல் பரிசுகளும் உண்டு. தவிர, பொன் விழா மேடையில் ரூ. 2500 சிறப்புப் பரிசு பெறும் வாய்ப்பு, மாணவ வாசகர், மாணவரல்லாத வாசகர் ஆகிய இரு தரப்பினருக்குமே உள்ளது.

குட் லக்!

கல்கி பொன்விழா பரிசுத் திட்டம்


புதிய
பட்டு
ஜவுளி
ஷோரூம் (A/C)
நவராத்திரி, தீபாவளி
மற்றும் திருமணத்திற்கு
தேவையான அனைத்துரக
பட்டு ஜவுளிகளும்,
பாவாடை ரகங்களும்
நூல் ஜவுளிகளும்
குறைந்த விலையில்
சிறந்த ரகங்கள்
கிடைக்குமிடம்
மகாலட்சுமி
சில்க்ஸ்
(முருகன்
கல்யாண
மண்டபம்
காம்ப்ளக்ஸில்)
13/1, தெற்கு
போக் ரோடு,
தி.நகர்,
சென்னை-17
தொலைபேசி :
444664.


ஸெலோ, நல்வரவு!
• HOT POTS
• LUNCH CARRIERS
• WATER BOTTLES
• VACUUM FLASKS
• GIFT SETS
cello
THERMOWARE



"உன் மாமியார் மேல் உனக்கு அவ்வளவு பாசமா? அவர் காலுக்குக் கொலுசு வாங்கித் தந்திருக்கியே?"

"நான் யாரோட பேசினாலும் பூனை மாதிரி வந்து ஒட்டுக் கேட்கிறா..."

— வி. வி. காயத்ரி, மதுரை.

சிரிக்க வையுங்கள்;
சிங்கப்பூர் செல்லுங்கள்!

50

●● குருவாயூரிலிருந்து திரும்புகையில் பஸ்ஸில் நல்ல கூட்டம். இருவர் அமரும் சீட்டில் என் அம்மா, அக்கா, அக்காவினுடைய ஏழு வயது மகன் ஆகியோர் அமர்ந்திருந்தனர். அம்மாவும், அக்காவும் நல்ல குண்டு. சிறிது நேரத்தில் சிறுவன் "ஐயோ, ஒரே டைட்" என்று சிணுங்க, அம்மா உடனே, "பாவம்! ஒரே வியர்வை!" என்று கூறி, ஷர்ட் பட்டனைக் கழற்ற ஆரம்பித்தாள்.

"பாட்டி, ட்ரஸ் ஒண்ணும் டைட் இல்லே! நீதான் டைட்!" என்றானே பார்க்கலாம்!

— என். தேன்மொழி, ஆலப்புழை.

"யாருடா அது, ராவுணா லாரி ஓட்டுவது?"

"உங்க பையன் டாக்டருக்குப் படிக்கணும்னு சொன்னானே என்ன ஆச்சு?"

"சீட் கிடைக்கலே! ஒரு தெரிஞ்ச டாக்டர்கிட்ட சேர்த்துவிட்டு, தொழிலைக் கத்துக்கச் சொல்லிட்டேன்!"

— தஞ்சைத் தரணியன், முத்துப்பேட்டை.



"பாட்டி செத்துப் போச்சுன்னு போன வாரம் தானே லீவு வாங்கினாய்...? அதே காரணத்தை இப்பவும் சொல்றியே...!"

"ஊர்ல எல்லாக் கிழவிகளையும் பாட்டின்னு தான் சார் கூப்பிடுவேன்!"

— அ. அப்துல் பரீது, திருப்பத்தூர்.

காதலன்: கண்ணே, என் நெஞ்சைத் தொடுகிற மாதிரி ஒரு வார்த்தை சொல்லேன்!

காதலி: பனியன்...!

— ரா. ராஜவேணி, எத்தாப்பூர்.



●● வடபழனி பஸ் நிலையம். பஸ் புறப்படக் காத்திருந்தோம். டிக்கெட் கொடுக்க ஏறிய கண்டக்டர், பஸ்ஸில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த



பிச்சைக்காரரிடம் "யோவ், சீக்கிரம் வேலையை முடிச்சுக்கிட்டு இறங்குய்யா. ரெண்டு பேரும் ஒரே நேரத்தில் கையை நீட்டினா உனக்கும், எனக்கும் வித்தியாசம் இல்லாமப் போயிடும்!'' என்றாரே பார்க்கலாம்! பஸ்ஸின் புழுக்கத்தையும், இறுக்கத்தையும் மறந்து அனைவரும் சிரித்து விட்டோம்!

— ஏ. க. சம்பத்ராஜ், மணலூர்.

'''மாமியாரே கதி'ன்னு படத்துக்கு ஏன் பெயர் வச்சீங்க?''

''என் படத்துக்கு அவங்கதானே பைனான்சியர்!''

— எஸ். கோவிந்தன், கிருஷ்ணாபுரம்.





''சே! ஆனாலும் இந்த அளவுக்கு இறங்கிக் காக்கா பிடிக்கக் கூடாதுங்க!''

''எப்படிங்க?''

''தலைவருக்குக் கொள்ளுப் பேரனாய் அவதரித்திருக்கும் குறுந்தொகையே வருக! வளர்க! வாழ்க'ன்னு போஸ்டர் அடிச்சிருக்காங்க!''

— வீ. மனோஹரன், சென்னை – 102.

●● ஒரு சந்திப்பில் வலதுபுறம் லாரி திரும்ப, லாரி டிரைவர் வலதுபுறம் கையை நீட்டிப் போலீஸுக்குச் சைகை காட்டினார். லாரியின் மீது நின்றிருந்த பத்துக் கூலியாட்களும் வலதுபுறம் கையை நீட்டினர். கோபம் கொண்ட போலீஸ் இப்படிக் கத்தினார்:

''யாருடா அது? இராவணனா லாரி ஓட்டுவது?''

— நதமா ஜே. பி., தும்பா.






''வீட்டில் விதவிதமாய் டிபன் செய்யறதில்லேன்னு என் கணவருக்கு ரொம்பக் குறை!''

''அதுக்குத்தான் நிறைய கிளாஸ் நடக்குதே. போய்க் கத்துக்க வேண்டியதுதானே?''

''அதுக்கெல்லாம் அவருக்கு நேரம் இல்லையே!''

— வீ. உஷா, சிதம்பரம்.

எவர் ஸில்வர் புல்லெட்!



"என்னுடைய புல்லெட் பைக்கில் உள்ள அத்தனை பாகங்களும் ஸ்டெய்ன்லஸ் ஷீட்டால ஆனவை. ஒவ்வொரு பாகத்தையும் நானே உருக்கி வார்ப்படம் செய்து அமைத்தேன். எல்லாமே ஸ்டெய்ன்லஸ் ஸ்டீலா இருக்கிறதாலே, எத்தனை யுகமானாலும் என்னோட பைக் துருப்பிடிக்காது; பளபளப்புப் போகாது; நசுங்கவும் செய்யாது..." என்று பெருமையுடன் கூறுகிறார் பெரம்பூர் பேப்பர் மில்ஸ் -ரோடில் ஓர்க்ஷாப் வைத்திருக்கும் கோபு.

இதைச் செய்து முடிக்க ஐந்து வருடங்கள் ஆனதாம். இப்போது இவர் பைக்கின் மதிப்பு 63,000 ருபாய்! இப்படியோர் எண்ணம் இவருக்கு எப்படி வந்தது?

"பொறந்தோம்; வாழ்ந்தோம்; போனோம்னு வாழ்றது எனக்குப் பிடிக்காது. வாழ்க்கை அர்த்தமுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்ற கொள்கையுடையவன் நான். அதன் விளைவுதான் இது...

"இது மட்டுமா... மெட்ராஸ் உர நிறுவனத்திற்காக உரமூட்டைகளைப் பேக் செய்யும் ஏபோர் (Aopor) என்ற கருவியைக் கண்டுபிடித்துக் கொடுத்திருக்கிறேன். அதே போல் மெட்ராஸ் எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைக்குப் பெரிதும் உதவக்கூடிய 'XC-28 லேடர்' கருவியையும் தயாரித்துக் கொடுத்திருக்கிறேன்.

"நான் முன்பு அரேபியாவில் பைப் ஃபிட்டரா வேலை பார்த்த போது, 'பிடரி மயிர் நிறைஞ்ச குதிரை முகம், கழுத்தில் அதைச் சுற்றி வளைக்கிற—முறுக்கேறிய—நுனியில் பூண் வைத்த சாட்டை — இந்த உருவத்தை ஸ்டெய்ன்லஸ் ஸ்டீலில் செய்ய முடியுமா?' என்று கொரியா நாட்டு மெக்கானிக் ஒருத்தர் சவால் விட்டார். செய்து காட்டினேன்! அனைவரும் பாராட்டினார்கள்.

"அதே போல்தான் சென்னையிலும். எனது பைக்கை என்பீல்டு நிறுவன என்ஜினியர்களெல்லாம் வந்து பார்த்து வியந்து பாராட்டி விட்டுத்தான் போனார்களே தவிர, வேறு எதுவும் செய்யலே. சுருக்கமாச் சொன்னா, மெட்ராஸ்ல என்னோட திறமைக்கு மதிப்பே இல்லை. அதனால்தான் எங்குமே வேலை கிடைக்காம, இப்போது சொந்தமா ஒரு ஓர்க் ஷாப் வைத்து, எனது முயற்சிகளை விடாமல் செய்துக் கிட்டிருக்கேன்..." என்று சற்று ஆதங்கத்தோடு பேசினார் கோபு.

பேட்டி, படம்: **பிரபுசங்கர்.**

யோசனை
தெரிவித்த வாசகர்:
திருமதி ஜி. ராதா.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கெ. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
அறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.


விழிகளுக்கு விருந்து!
ஹனீபாவின் அற்புத பட்டு!
புதுமையான புத்தம் புது
டிசைன்களில் எண்ணற்ற
வண்ணங்களில் தரத்தில் நிகரில்லா
பட்டுப்புடைவகளால் ஒரு
பட்டுலகையே படைத்துள்ளோம்.
தீபாவளிப் பண்டிகையின் பரவசம்
என்றென்றும் நிலேக்க ஹனீபா
பட்டுப்புடைவகள்!
ஹனீபா டெக்ஸ்டைல்ஸ்
14, சர் தியாகராய சாலை,
பாண்டிபஜார், தியாகராய நகர்,
சென்னை - 600 017.
Canco/887



ஒளி வீசும் குமரன் பட்டுப் புடவைகள்
இந்த தீபாவளிக்கு புதிய பொலிவை வாரி
குமரன் சில்க்ஸ்
UIPC:KS:17:90